பிஸ்மில்லா, ஹிர்ரஹுமா, னிர்ரஹீம்

அகீதயே இஸ்லாம்

என்னும்

ஷம்ஸுல் இஸ்லாம்

இதில் இஸ்லாம் மார்க்கத்தின் முக்கிய
அகீதாக்கள் சங்கிரகமாய்
விளக்கப்பட்டிருக்கின்றன.

இது
சீமையில்
லிவர்பூல்
ஹைகோர்ட் நியாயவாதியாகிய
டப்ளியூ. எச். குவில்லியம் துரை பீ. ஏ.
அவர்களினால் இங்கிலீஷில் இயற்றப்பட்டு,

பாப்புராஜபுரம்
ஹகீம் பா. முகம்மது அப்துல்லாசாயபு
அவர்களினால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு,
எம். முகம்மது உவேஸ் சாயபு பீ. ஏ.
அவர்களின் முயற்சியால்

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

ஹிஜ்ரி ௧௩௦௯-ம் ஜமாதிலாகிர்,
1892௵ ஜனவரி

All Rights Reserved.

விலை அணா-௪] [தபால் செலவு அணா ௧.
வி. பி போஸ்டேஜ் அணா ௨.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
19 MAY 92
MADRAS

பிஸ்மில்லா, ஹிர்றகுமா, நிர்றகீம்

அகீதயே இஸ்லாம்

என்னும்

ஷம்ஷு-ல் இஸ்லாம்.

இதில் இஸ்லாம் மார்க்கத்தின் முக்கிய
அகீதாக்கள் சங்கிரகமாய்
விளக்கப்பட்டிருக்கின்றன.

இஃது
சீமையில்
லிவர்பூல்
ஹைகோர்ட் நியாயவாதியாகிய
டப்ளியூ, எச், குயில்லியம் துரை பி. ஏ.
அவர்களினால் இங்கிலீஷில் இயற்றப்பட்டு,
பாப்புராஜபுரம்.
ஹகிம்-பா-முகம்மது அப்துல்லாசாயபு
அவர்களினால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு,
எம். முகம்மத் உஸேன்சாயபு-பி.ஏ.
அவர்களின் முயற்சியால்
மத்ராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

ஹிஜ்ரி கங0கூ-ம் வருஷம் ஜமாதியுலாகிர் மீ,
1892ஷ ஜனவரிமீ

All Rights Reserved.

விலை அணா-அ] [தபால்செலவு அணா க.
வி. பி. போஸ்ட்மூலம் அணா ௰க.

122
3-1892

THE

FAITH OF ISLAM,

An Explanatory Sketch of the Principal Fundamental Tenets of the Moslem Religion,

BY

W. H. QUILLIAM

(Solicitor of the Supreme Court of Judicature,)

LIVERPOOL.

Translated into Tamil

BY

B. HAKEEM MOHAMMED ABDULLA SAIB

ASSISTED BY

M. MOHAMMED HUSAIN SAIB, B. A.

MADRAS.

"நான் முஸ்லிமை நேசிக்கிறேன்; அவன் தன்னுடைய அல்லாகுத்தாலாவினிடம் வெட்கப்படுகிறவனல்ல; அவன் உயிர்வாழ்க்கை மிகவும் பரிசுத்தமானது" "ஜனரல்கார்டன்" (General Gordon.)

[illegible]சொல்லும்: ஓ காபிர்களே. நீங்கள் வணங்கும் ஒன்றை நான் வணங்கேன்; அல்லது நான் வணங்கும் நாயகனை நீங்கள் வணங்கீர்கள். நீங்கள் வணங்கும் ஒன்றை நான் வணங்குகிறவனுமல்ல; அல்லது நான்வணங்கு நாயகனை நீங்கள் வணங்குகிறவர்களுமல்ல. உங்களுடைய [illegible]ஷிர்கான) மார்க்கம் உங்களிடமிருக்கட்டும்; என்னுடைய (இஸ்லாம்) மார்க்கமென்னிடமிருக்கட்டும்."

சூரா [illegible]கூ, குரானேஷரீபு.

விளம்பரம்.

இதனால் சகலருக்குந் தெரிவிப்பது யாதெனில் ௧௮௬௭ம் வருஷம் (௨௫-வது) ஆக்ட்டின் (௨௦-வது) பிரிவு (௬-வது) விதியின் பிரகாரம் இங்கிலீஷ் இலாகாவாகிய மத்ராஸில் காபிரயிட், ரிஜிஸ்டர்செய்யப்பட்டிருக்கின்றது.

இன்னும் பிரென்சு இலாகாவாகிய புதுச்சேரியிலும் காரைக்காலிலும், காபிரயிட் ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கிறது.

மேலும் இந்த அகீதயே இஸ்லாம் என்னும் ஷம்ஷில் இஸ்லாம் கிதாபின் ஆதிகிரந்தகர்த்தாவும் சீமையில் லிவர்பூல் ஹைகோர்ட் நியாயவாதியுமாகிய மகாகனம் பொருந்திய டப்ளியூ-எச்-குயிலியம் துரையவர்களிடமிருந்தும், மேற்படி துரையவர்களினால், இந்தியா, பர்மா இலங்கை முதலிய விடங்களுக்கு ரெஜிஸ்டர் செய்யப்பட்டு ஏஜண்டாய் நியமிக்கப்பட்டவரானகல்த்தாவிலுள்ள (மகம்மடன் ஒப்ஸர்வர்) என்னும பத்திரிகையின் பத்திராதிபவர்களிடமிருந்தும் இக்கிதாபைத் தமிழில் மொழிபெயர்த்து அச்சிட உத்தாரம் பெற்றிருப்பதனாலும் அடியேன் உத்தரவின்றி இதைத்தமிழில் அல்லது அறபுதமிழில் ஒருவரும் அச்சிடலாகாது. அப்படி அச்சிட்டால், 1867-ம்வருஷம்-25-வது ஆக்டின் 20-வது பிரிவு, 6-வது விதியிற்கண்ட தண்டனைக்குள்ளாக நேரிடும்.

மிஸ்கீன்

ஹகீம்-பா-முகம்மது அப்துல்லா.

விளம்பரம்

இந்தப்புத்தகம் வேண்டியவர்கள் சென்னப்பட்டணம் மாபூஸ்கான்தேவடி மயிலே பெரியதம்பிதெருவில் ௧௫-வது நெம்பர் வீட்டிலிருக்கும் ஹகீம்-பா. மூகம்மது அப்துல்லாசாயபு இடத்தில், அல்லது, ம. முகம்மது உசேன்சாயபு B. A, இடத்தில் கைவிலேக்கும், வாலுயூபேயபல்போஸ்ட் மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தப் புத்தகங்களின் டைடில் பேஜில் அடியிற் கண்டிருக்கிற எங்களிருவரில் ஒருவர் அல்லது இருவருடையபேர் எழுதப்பட்டிருக்கின்றன. அவ்விதம் பேர் இல்லாத புஸ்தகங்களைக்கொண்டுவந்துகொடுத்தாலும் அல்லது அவ்விதமான புஸ்தகங்களை விற்குமவர்களைக் காண்பித்தாலும் அவர்களுக்குத் தக்க இனாம் கொடுக்கப்படும்.

இந்த கிதாபானது அறபுதமிழில் ஆங்காங்குவேண்டிய குர்ஆன் ஆயத்துகளுடன் அச்சிடப்பட்டிருக்கிறது. சொற்பக்காபிகள் அச்சிட்டிருப்பதால் முந்திக்கொள்பவர்களுக்கே கிடைக்கும்.

ஹகீம்-பா-முகம்மது அப்துல்லா,

ம-முகம்மது உஸேன் சாயபு-பி. ஏ.

முதாஹஜ்ஜிமின் விண்ணப்பம்.

மூமின் முஸ்லிமான் சகோதரர்களே! தற்காலம் அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் கல்விச்செல்வமானது செழித்தோங்கிவரவே உண்மையான மார்க்கம் இது வென்றும், உண்மையல்லாத மார்க்கம் இதுவென்றும் பகுத்தறியும் சக்தியுண்டாகி வருகின்றபடியால், அநேகர் தங்கள் முன்னோர்கள் இஸ்லாமார்க்கத்திற் கொண்டிருந்த தப்பு அபிப்பிராயங்களையும், நியாயமற்றவைராக்கியங்களையும், பிடிவாதமான மாச்சரியங்களையும், வீணான மூடபக்திகளையும் விட்டு நீங்கி ஆச்சரியப்படத்தக்க விதமாய் இஸ்லாமார்க்கத்தைக் கவனித்து அதின் அகீதாவே அஸலானதென்றும், அதின்படி நடத்தல் உயிர்வாழ்க்கைக்கு எவ்வாற்றானும் தகுதியானதென்றும், அதின் மேன்மைகளே எல்லாவற்றிற்கும்மேலானதென்றும் சீர்தூக்கிப்பார்த்து இஸ்லாமே யுண்மையான மார்க்கமென்றும், கைப்பற்றி உறுதிப்படுத்தத்தக்கதென்றும் கண்டு இஸ்லாம்மார்க்கத்தை கபூல் செய்துவருகிறார்கள்.

இஸ்லாம் மார்க்கமோ தினே தினே செழித்தோங்கி விருத்தியடைகிறதென்பதிற் சந்தேகமில்லை; ஐஸக் டெய்லர் என்பவரின் சொற்படி ஆப்ரிக்காதேசத்தில் கோடி சனங்களுக்கதிகம் இப்பொழுதுதான் இஸ்லாமாகி விட்டார்கள். பத்து வருஷத்திற்குள்ளாக இந்தியாவில் கூசு-லக்ஷத்து எஉ-ஆயிரம் முஸ்லிம்கள் முன்னிலும் அதிகமாகியிருக்கிறார்கள். ப்ரபொஸர் ஆர்லெண்ட் என்பவரின் சொற்படி மலாயா தீவு யாவற்றிலும் இப்பொழுது மூன்றுகோடி முஸ்லிம்கள் தங்கள் மார்க்க

பத்தி சித்தர்களாயிருக்கிறார்கள். சீனதேசத்திலேயும் இஸ்லாம்மார்க்கமானது மகா ஊக்கத்தோடு பரவி வருகிறது.

இப்படியே (சீமையில்) இங்கிலாந்தில் லிவர்பூலிலுள்ள சில பிரபல்லிய கல்விமான்கள் இஸ்லாம் மார்க்கத்தைக் கபூல்செய்து ஐரோப்பாவிலும், அமெரிகாவிலும் உள்ள தங்கள் சகோதரர்கள் தங்கள் வீண் பக்திகளையொழித்து தங்களைப்போலவே நற்பதவி யடையும்படி இஸ்லாத்தை கபூல்செய்ய வழிசெய்து வருகிறார்கள். அவர்களுள் ஒருவராகிய கனம் பொருந்திய டப்ளியூ, எச், குயில்லியம். பி-ஏ-என்பவர் ஷை லிவர்பூலில் "முஸ்லிம் இன்ஸ்டிடியூட்" என ஒரு முஸ்லீம் சபையேற்படுத்தி அதற்குச் சபாநாயகராய் சகல காரியத்தையும் நடத்தி வருகிறார். அவரைப்பற்றி "ரிலிஜியஸ்ரிவியூ ஆவ் ரிவியூஸ்" என்னும் இங்கிலீஷ் பத்திரிகை சொல்கிறதாவது :—

லிவர்பூல் தேசத்திலுள்ள முஸ்லீம்களின் சபையையுண்டாக்கியவரும் அதின் சபாநாயகராகிய வில்லியம் ஹென்றீ குயிலியம் துரைஅவர்கள்லிவர்ப்பூல்நகரில் எல்யட் தெருவில் 1856ம்வருஷம் எப்பிரல்மீ 10உ பிறந்தார். இவர் "லிவர்பூல் இன்ஸ்டிடியூட்" என்றகல்விச்சாலையில் அறிவு பயிற்றப்பட்டு அங்கே வெகுமதிகளும் உறுதிப் பத்திரங்களும் பெற்றுக் கொண்டது மல்லாமல் "ஒக்ஸ்போர்ட்" கல்விச்சாலையிலும் "கேம்ப்ரிட்ஜ்" கல்விச்சாலையிலும் ஆங்காங்கு நடந்த பரீக்ஷைகளிலும், அரசாட்சியாரால் நியமிக்கப்பட்ட சாஸ்திரம் வித்தை ஆகியவைகளைப்பற்றிய பரீக்ஷைகளிலும் தேறி சிறப்படைந்தார்.

நியாய வாதித்துவத்தைத் தன் உத்தியோகமாய்த் தெரிந்துகொண்டு, லிவர்பூல் நகர அதிகாரியாயிருந்த சமாதான நீதவானுகிய விலியம் றட்சிலிப்துரையிடம் நியாயசாஸ்திரம் பயின்று 18[illegible]8ம்வருஷம் மேன்மையுள்ள நியாயஸ்தலத்தின் நியாய துரந்தரனுகத் தகுதியாய் ஏற்றுக்கொள்ளப்பட்டார். மிகவும் சொற்பகாலத்தில் வெகுமானமுள்ள பிரதிபலனளிக்கும் சம்பந்தத்தைப்பெற்றுக்கொண்டு இக்காலத்தில் இங்கிலாந்தின் வடபாகத்தில் நியாயவாதித்தொழிலை அதிகமாய் நடத்துகிறவராயிருக்கின்றார். இவருடைய கீர்த்தி பிரஸ்தாபம் தன்னூரில் மாத்திரமல்ல, பிற ஊர்களிலும் பரவி யிருக்கிறது.

பார்லிமேந்து ஸ்தலங்களையும், லண்டனி லுள்ள கோபுரத்தையும் "டைணமையிற்" கொண் டிடித்தார்களென்று குற்றஞ் சாட்டப்பட்ட "[illegible]" "கன்னிங்கம்" என்ற இருவர்களுடைய வழக்கை நடத்துகிறதற்காக இவர்களுடைய சினேகிதர்களால் குயிலியம் துரை நியாயதுரந்தரனுய் ஏற்படுத்தப்பட்டார். இவ்வழக்கு [illegible], இவ்வியற் காரர்களைக் காப்பாற்றியசாமர்த்தியத்திற்காக இவர், அரசாட்சியார்ப்பக்கம் அந்தவழக்கைநடத்தினதுவின்நியாயதுரந்தரராலும், அந்த வழக்கை முதல்விளங்கிய நியாயாதிபதியவர்களாலும் மிகவும் புகழ்ச்சியாய்ப் பேசப்பட்டார்.

இவ்வழக்கிற்குப் பின் சொற்பகாலத்திற் குள்ளேயே கறுத்த வைத்தியன் என்று பேர்வழங்கிய பர்மாசாதியிலுள்ள ஓர்வைத்தியன் கொலைசெய்தானென்று குற்றஞ்சாட்டப்பட்டபொழுது அவனை சமர்த்தாய் நியாயஞ்சொல்லி தப்புவித்தவேளையில் குயிலியம்துரை முன்னிலு மதிக பிரபல்லியத்துக்கு வந்து விட்டார். அவ்வழ

கில் சிரேஷ்டநியாயாதிபதியாகிய "லாற்ட்கோல்றிட்ஜ்" அவர்களுடைய சமுகத்தில் இரண்டுநாள் விசாரணையான பிறகு விடுதலை பெற்றுக்கொண்டான். ஜூரிமாரின் தீர்ப்புச் சொல்லப்பட்டவுடன் கூடியிருந்த சனங்கள் மகிழ்ச்சியால்பெருஞ்சத்த மிட்டார்கள். பிறகு விசாரணைக் கூட்டிற்குள் நின்றுகொண்டிருந்த அம் மறியற்காரன் அக்கூட்டில்மேல் சாய்ந்துதாவி தன்நியாயதுரந்தரரைப்பிடித்தணைத்து அடிக்கடி முத்தமிட்டான். மறியற்காரனும், குயிலியும் துரையும் நியாயஸ்தலத்தை விட்டு வெளிப்பட்டபொழுது சனங்கள், இருவரையும்பிடித்துத்தூக்கி அவர்களின் புயங்களிற் சுமந்து கொண்டுபோய் ஒருவண்டியில் வைத்துக் குதிரையையெடுத்துப்போட்டு அதை கம்பீரத்தோடு இழுத்துக்கொண்டு "செஸ்டர்" என்றவிடத்திலுள்ள தெருக்களுக்குப் போனார்கள். அவ் வண்டிக்குப் பின் ஆயிரம் பெயருக்கதிகம் சந்தோஷத்தினால் உரத்த சத்த மிட்டவர்களாய்ப் போனார்கள்.

"ரூபற்ட் டிரூவிஸ்" என்ற ஒருவன் கொலைசெய்ததற்காக குற்றவாளியாகி தூக்கத்தீர்ப்புப்பெற்றான். பிறகு அந்தத்தீர்ப்பை மாற்றி சீவியகாலமுழுதும் சிறையிலிருக்கும்படி அவனுக்குத் தீர்ப்புச்செய்யப்பட்டது. இந்த தீர்ப்புக்கும் மன்னிப்புப் பெறுவதற்காக அவனுடைய சிநேகிதர்கள் குயிலியம் துரையை நியாயவாதியாய் ஏற்படுத்தினார்கள். இவர் இவ்விஷயத்தை நீள விசாரணைசெய்த பிறகு அந்தப்பிராணசேத முண்டான விடத்தையும் பார்த்துவிட்டு இவ்வழக்கைப்பற்றி ஓர் விண்ணப்பப்பத்திரம் செய்து "ஹோம்ஆபீஸூக்" குக் கொடுத்து சில பார்லிமேந்து அங்கத்தவர்களுடைய உதவியைக்கொண்டு அந்தவழக்கை மறுவிசாரணைக்குக்

கொண்டு வந்து, நீண்டவிசாரணைசெய்தபின் அந்த மறி யற்காரனுக்குப் பூரண மன்னிப்புப் பெற்றுக் கொடுத் தார்.

மூன்று வருஷத்திற்கு முன் குற்றவாளியாகி சிறையி லடைக்கபபட்டிருக்கிற லண்டனிலுள்ள "மாட்டின் லூதர்" என்றகோவிலின் குருவாயிருந்த "விட்டோ வஸ்" என்றவருக்கு விடுதலைபெற ஓர் விண்ணப்பப்ப த்திரம் செய்கிறதற்கா மெஸ்: குயிலியம் துரை ஓர் பெரும் செல்வாக்குள்ள கூட்டத்தாரால் நியாயவாதி யாய் ஏற்படுத்தப்பட்டிருக்கிறாரென்று அறியப் படு கிறது.

குயிலியம் துரையுடைய குடும்பத்தைச்சேர்ந்தவா ள் வெஸ்லியர்; முன் அவர் ஞாயிற்றுக்கிழமைப் பள்ளி க்கூடத்தைச் சேர்ந்தவராயும் அதின் உபாத்தியாயராயு மிருந்தார்; சிறுவயதி லிருந்தே "மதுபானம் வில க்குங்" காரியத்தில் விருப்ப முள்ளவரா யிருந்தார். ஏழுவயதில் லிவர்பூலிலுள்ள, "மெதோடிஸ் சேப" ஐச் சேர்ந்த [illegible] கூட்டத்தின் அங்கத்தவராய்ச் சேர்ந்தார். "குட் டெம்பலர் ஆர்டர்" வகுப்பை 1872ம் ஆண்டில் சேர்ந்து அதின்கீழ் பல காரியங்களைச் செய் துவந்தார். பதினறு வயதிலேயே குயிலியம் துரை முதல் முதல் வெளிப்பட்டு (மதுபானம் அருந்தாதி ருக்கும்) காரியத்தின் உரித்துகளைப் பிரசித்தமாய்ப் பரிந்துபேசினர். அக்கால முதல் இக்காலம் வரையில் ஓயாமல் இக்காரியததை விருத்தி பண்ணி வருகிறார். 1877 ம் ஆண்டில் லிவர்பூல் தேசத்தில் மதுபானவி லக்கை போதிப்பதற்காக ஒரு கூட்ட முண்டாக்கினர். அதின்மூலமாய் ஆறுவாரங்களுக்குள் 800 பெயர் மது

பானஞ்செய்யாதிருக்க உடன்படிக்கைப் பத்திரத்தில் ஒப்பமிட்டுக்கட்டுப்பட்டார்கள். இப்படி குடியாமல் இச்சையடக்கி நடக்கும் காரியத்தில் அவருடைய கருத்துகள் திர்க்கமான தாதலால் சாராயம் வழங்குபவர்கள் தங்களுக்குக் கடடளை முதலியவைகள் பெற்றுக்கொடுக்கும்படி கேட்டபோதெல்லாம் அக்கேள்விகளை மனநீதிக்காக தள்ளிப்போட்டார். இப்போது இவருடைய வேத கருத்துகள் இஸ்லாம் பட்டமாய் வெளிப்பட்டிருந்தாலும் அவருடைய சுயதேசத்திலுள்ள மதுபானத்தைவிலக்கி நடக்கும் கூட்டங்கள் அவருடைய வேலைகளைப்பெற்று வருகின்றன.

கல்விவான்களுக் கிடையில் குயிலியம்துரை அறியப்படாத வரல்ல. அதிக பிரயோசனமுள்ளசெய்திகளைப் புதினப் பத்திரிகைக் கெழுதிவந்திருப்பது மல்லாமல் பத்திராதிப ராசனத்திலும் சிலகாலமிருந்து "டெம்பலர்" "பகள்கால்" "லிவர்பூல் மந்திமக்ஸின்" முதலிய பத்திரிகைகளை நடத்திவந்தார். அவர்செய்த "அகீதயே இஸலாம்" என்ற சிறுபுஸ்தகம் அரபு, பாரிஸ், பர்மா, உர்டு, பங்காளி குஜ்ருத்தி முதலிய பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட் டிருப்பது மல்லாமல் இப்பொழுது தென் இந்தியாவின் பாஷையாகிய * தமிழிலும், துலுக்கிப் பாஷையிலும் மொழி பெயர்க்கப் படுகிறது. மதாபிமானிகளையும் மதாபிமானத்தையும் பற்றி யவர் பண்ணிய பிரசங்கத்தை சொற் சொல்லாய் எழுதி அச்சிட்டு முதற்பதிப்பு விற்றும் முடிந்தது. இந்தபிரசங்க மூலமாயத்தான் குயிலியம் துரை முதல்முதலொருவரை இஸ்லாமாக்கினர். இன்னும் "‡ வாளுடை

---

*தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு அச்சிடப்பட்டிருக்கிறதுவே.

‡ (இதின் முதல்பாகம் அச்சிடப்பட்டு வெளியாகி இருக்கிறது.)

யமார்க்கம்" அல்லது "மதகபுஸ்ஸயிப்" என்றும் "ஜீஸா.முகம்மது" என்றும் இரண்டுபுஸ்தகங்கள் குயிலியம் துரையால் எழுதப்பட்டு இப்போது அச்சடிக்கப் படுகின்றன. இன்னும் அவர் "இள்ஹாறுல்ஹக்" அல்லது குருஆனின் உண்மைகளை வெளிப்படுத்தல் என்ற ஓர்கிதாபை அறபுபாஷையில் நின்று இங்கிலீஷில் மொழிபெயர்க்கிறார். இஸ்லாமார்க்கத்தை விஸ்தரிக்கிறதற்காக கல்விக்குரிய முயற்சிகளோடு குயிலியம் துரை ஞாயிற்றுக்கிழமை சாயந்திரம்தோறும் இஸ்லா மார்க்கத்தைப்பற்றி பிரசங்கம்பண்ணிவருகிறார்.

லிவர்பூல் தேசத்திலுள்ள முஸ்லிம் சபையின் தலைவராகிய எங்கள் சகோதரர் குயிலியம் துரை யவர்கள், "இங்கிலாந்தில் இஸ்லாம் மார்க்கம்" என பெயரிட்டு இங்கிலீஷ் பத்திரிகையி லெழுதுகிறார்கள் :—லிவர்பூல் தேசத்தில் இஸ்லாமார்க்கம மிகசாக்கிரதையோடு போதிக்கப்படுகிற தென்றும், அதைப்பரப்ப வுதவியா யிருக்க இரண்டுமுஸ்லிம் போதகர்களிந்தியாவிலிருந்து வெகு சீக்கிரத்தில் இத்தேசத்துக்கு வருவார்களென்றும் நாள்தோறும் வெளிப்படும்பத்திரிகைகளில் சில வாரங்களுக்கு முன்சொல்லப்பட்டிருந்தன. இப்பிரமிக்கத்தக்க செய்தியைவாசித்தபொழுது சந்தேகமின்றி அநேகர் அவை அதிசயமானவையென்று சொன்னார்கள். ஆகிலும் இக்காரியத்தை அமைதியாய் ஆலோசிக்கும்பொழுது இப்படி இம்மார்க்கத்தைப் பிரசங்கிப்பதற்காக அதிசயப்படக் காரணமென்ன? கிறிஸ்துமதத்திற்கு மனிதர்களைத் திருப்புகிறதற்காய் இந்தியா, சீனம், ஆபிரிகா, ஆகிய தேசங்களுக்கு போதகர்களை யனுப்புவது கிறிஸ்தவர்களுக்கு நீதியாயிருப்பதுபோல் இங்கிலாந்தில் இஸ்

லாமார்க்கத்தைப் பிரசங்கஞ்செய்ய முஸ்லிம்கள் முய ற்சிசெய்வதும் நிச்சயமாய் நீதியானகாரியம். இதற்காக செய்யப்பட்டிருக்கின்றவைகளையும் இனி முஸ்லிம் வே தபோதகர்கள் செய்ய விருக்கின்ற காரியங்களையும் பற் றிய ஒரு சுருக்கமான செய்தி இந்தச் சிறு பிரபந்த த்தில் வெளிப்படுத்தப் படுகின்றது.

முஸ்லிம்கள் முயற்சியாய் நடக்கும் மத்தியம் இங்கி லாந்தில் இக்காலத்தில் மூன்றிருக்கின்றன. (1) "வோக் கிங்" என்ற விடத்திலுள்ள "ஓரியன்டல்" வித்தியாசா லையைச்சார்ந்த ஒரு சிறு மஸ்ஜிது. இது அந்த வித்தியா சாலையிலிருக்கும் முஸ்லிம்களால் உபயோகிக்கப்படுகி ன்றது. (2) லண்டன் நகரிலுள்ள "அன்ஜுமனே இஸ்லாமிய்யா" இந்த சபையானது கல்விபடிப்பதற்கா க லண்டனிலிருக்கின்ற இந்திய முஸ்லிம் கனவான்க ளுடையது. (3) லிவர்பூல் மூஸ்லிம் சபை, இதன் அங்க த்தினர்கள் இஸ்லாத்தைக் கபூல்செய்த இங்கிலீஷி யர்கள்.

இப்பின் சொல்லப்பட்ட கூட்டத்தைப்பற்றிய இதில் முக்கியமாய்ப்பேசுவோம். லிவர்பூல் நகரில் முக்கிய வியாபார விடங்களி லொன்றாகிய மேற்கு "டர்பி" தெருவிற் கெதிரில் "புரூம்டெறெஸ்" என்ற விடத்திலிருக்கின்ற ஒரு பழைய பெரும் வீட் டை யிச்சங்கத்தார் உபயோகிக்கிறார்கள். இவ்வீட்டுக் குவெளிப்புறத்தில் ஒரு பெரும் அறிக்கைப்பலகை ஸ் தாபிக்கப்பட்டிருக்கின்றது. அதின் தலைப்பில் அறிரங்க வாக்கியமாகிய கலிமா அதாவது "ஆண்டவன் ஒரு வன்; முகம்மது (சல்லல்லாகு அலைகிவசல்லம் அவ ர்தள்) அவன் (ரசூல்) தீர்க்கதரிசி" யென்ற வசனம் இங்

லீஷிலெழுதப்பட்டிருக்கின்றது. இதன்கீழ் இபாதத்துச் செய்யப்படுகின்ற நேரங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஸ்தலத்தின் உள்பகுதி முஸ்லிம்களுடைய ஒரு வித்தியாசாலையைப்போல தகுதியாக்கப்பட்டிருக்கின்றது. அதின் பல அறைகளும் புத்தகசாலையாகவும், வாசகசாலையாகவும், ந[illegible]ணசாலையாகவும், பிரசங்க சாலைகளாகவும் வகுக்கப்பட்டிருக்கின்றன. அதின் காவற்காரரிருப்பதற்காக ஒரு பாகம் பிரத்தியேகமாய் விடப்பட்டிருக்கின்றது. கட்டடத்தின் பின்பக்கத்தில் முன் தோட்டமிருந்த விடத்தில் மஸ்ஜிது கட்டப்பட்டிருக்கின்றது. இது ஒரு சாதாரண கட்டடம், 150 முதல் 200 பெயர்கள் தொழ வசதியுள்ள பலகை பரவப்பட்ட ஓர் நீண்ட அறை. அங்குள்ள அலங்காரங்களெல்லாம் வன்ன வண்ணமாய் எழுதப்பட்டிருக்கிற அநேக ஜோடி பர்மாதேசத்துத் [illegible]களே. அன்னியர்களுக்கு நூதனமாய்த் தெரியக்கூடியது சுவரில் நீட்டிக்கொண்டிருக்கிற ஒரு பலகையே. இப்பலகையில் அறபெழுத்தில் "லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர்றஸூலுல்லாஹி" என்றெழுதி அதற்குக்கீழ் இங்கிலீஷில், அதன் அருத்தமும் எழுதப்பட்டிருக்கின்றது. நிலத்தில் சாதாரணமான இந்தியாவின் அனேக தொழுகைப்பாய்கள் விரிக்கப்பட்டிருக்கிறன. மஸ்ஜீதின் ஓர் கோணத்தில் ஒருமேடை கட்டுவித்து அதில் மெத்தை போட்டு ஒரு "றேகாலின்" மீது குர்ஆனின் பிரதியொன்று வைக்கப்பட்டிருக்கின்றது.

நாள்தோறும் மஸ்ஜீது தொழுகைக்காக திறக்கப்பட்டிருக்கின்றது, "முஅஸ்ஸின்கள்" நியமமான நேரத்தில், அரபிலும் இங்கிலீஷிலும் பாங்குசொல்கிறார்கள். அதாவது தொழுகைக்காக அழைக்கிறார்கள். முஸ்லி

மகளின் "ஸப்து" நாளாகிய "ஜும்ஆ" வெள்ளிக்கிழமையில் இரண்டுமுறை இபாதத்து நடத்தப்படுகின்றது. ஞாயிற்றுக்கிழமையில் நாலு தடவை நடத்தப்படுகின்றன. இவைகளிரண்டாகிய "நமாஸ்" அல்லது தொழுகை மாத்திரம் நடக்கும்பொழுது முஸ்லிம்கள் தான் தொடரக்கூடும், பாக்கி இரண்டிற்கும் சாதாரணமாய் யாவரும் வரக்கூடும். இவை யிரண்டும் போதகரின் பிரசங்கத்தின் அல்லது வகளின் தன்மையையுடையவை; இவை இங்கிலீஷ் பாஷையில் நடத்தப்படுகின்றன. இவைகளில் ஞானப்பாடல்கள் பாடப்படுகின்றன; குறு ஆனில் நின்று ஒரு பிரிவை வாசிக்கப்படுகின்றது. இஸ்லாத்தின் அங்கங்களைப்பற்றி பிரசங்கஞ் செய்யப்படுகிறது. சர்வவல்லமையுள்ள நாயனை ஷுக்குற் செய்யப்படுகின்றது. இன்னம் இஸ்லா மார்க்கத்தில் குருத்தொழிற் கிடையாது. ஆதலால் பள்ஜீதிற்கு எவ்வித தப்பட்ட குருவுங்கிடையாது. ஒவ்வொரு முஸ்லிமும் தன் குருவாயிருப்பதோடு ஆண்டவனிடம் நேராகவே போகிறான், மாதந்தோறும் அடுத்த நாலுவாரங்களிலும் இபாதத்தைநடத்தத்தங்களுக்குள் ஒருவரை இமாமாக சபையார் நியமித்துக்கொள்வார்கள், ஆகிலும்இந்தச்சங்கையையவர்களுள் ஒவ்வொருவரும் முறையாய்ப் பெறுக்கொள்வார்கள், ஒவ்வொருவரும் தன்னிஷ்டத்தினல் தானே பணிவிடைசெய்கிறார்கள். ஒருவரேனும் தன் பணிவிடைக்காக ஒரு தம்டியாவது பெறுவதில்லை. இந்த வழக்கம் "குறுஆனி லுள்ள சிலவாக்கியங்களின்ல் விளப்படுத்தப்பட்டிருக்கின்றது.

அந்த வாக்கியங்களிலொன்று 20-ஆம் சூறாவில் சொல்லப்படுகிறதாவது "உண்மையான மார்க்கத்தை அங்கரிப்பிக்க முயற்சிசெய்கிறவனெவனே அவனை தன்

ஆத்மாவின் நன்மைக்காகவே முயற்சி செய்கிறான்; ஏனெனில் ஆண்டவன் தன் சிருஷ்டிகளிடமிருந்து உதவி தேவையுள்ளவனல்ல; விசுவாசித்து நீதிசெய்கின்றார்களே அவர்களுடைய தீன்மையான செய்கைகளை அவர்களில் நின்றும் அவன் (அல்லா) நீக்கி விடுகிறான்; இன்னும் அவர்களுடைய செய்கையின் அந்தஸ்திற்குத் தக்க பிரயோசனத்தை யவர்களுக்குக் கொடுப்பான்"

இன்னொரு வசனம் 25-ஆம் சூருவிலிருக்கின்றது, அதாவது ஆண்டவன் தங்களை (முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களை) உத்தமசெய்தி ... தவராயும் பயமுறுத்துகிறவராயு மிருப்பதற்காகவே யனுப்பியிருக்கிறான், ஆண்டவனிடம கொண்டுபோகுமே அந்தப் பாதையிற்போக விரும்புகிறவனுடைய மனம் திரும்புதலைத்தவிர வேறு வெகுமானத்தை நான் உங்களுக்குப் போதிக்கிறதற்காக கேட்கவில்லையென்று சொல்லும்"

இன்னம்பல வாக்கியங்களையும் எடுத்துக் காட்டக்கூடும் ஆகிலும் மேலேசொன்னவை போதுமானவைகள். மஸ்ஜீதில் ஆலயப்பீடங்கள் அல்லது நியமமானபீடங்கள் கிடையா. மஸ்ஜீதின் ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு உண்மையுள்ள விசுவாசியின் (மூமினின்) சமத்துவமான ஆஸ்தியாயிருக்கும், ஆகையால் அங்கு ஆலயப்பீடவருமில்லை. நிச்சமாய் அங்கு பலவந்தமாய் பணங்காசு வாங்கும் வழக்கமுங்கிடையாது, ஒவ்வொரு அங்கதவரும் தனக்கு நீதியென்று காண்கிறதை பொக்கிஷக்காரரிடம் இரகசியமாய்க் கொடுப்பார்கள். இதுவரையில் எங்களுக்குப் பணக்குறைவில்லை. வியாழக்

கிழமை தோறும் சபையைச்சேர்ந்த அங்கத்தவரும் அவர்களுடைய சிநேகிதர்களும் உல்லாசமாய் அந்திப் பொழுதை வாசகசாலையில் செலவழிப்பார்கள். மற்ற சாயந்திரங்களில் அறபு, பாரிஸ், துருக்கி, இந்துஸ்தானி முதலிய பாஷைகளை அவ்வவ்வகுப்புகளிலிருந்து படிக்கலாம்.

எங்களுடையபுத்தகசாலை இப்பொழுது விசாலமானதல்லவென்றாலும் அதில் பல இங்கிலீஷ்புத்தகங்களோடு பார்ஸியிலும் இந்துஸ்தானியிலும் வேதகாரியத்தைப்பற்றிய புத்தகங்கள் அனேகமிருக்கின்றன. இச்சங்கத்தார் "கமிட்டியார்" தேவையென்று காண்கிறபுத்தகங்களைப்புத்தக சாலைக்கு நன்கொடைசெய்ய மாட்சிமை பொருந்திய துருக்கி சுல்தானவர்களை கேட்டதற்காக (அவர்களுத்திரவின்படி) அப்புத்தகங்களின் டாப்பொன்று சுல்தானவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது; அதை யவர்கள் சந்தேகமின்றி கவனிப்பார்கள்.

மேல்மெத்தையின் மீதிருக்கும் இரண் டறைகளில் விநோதசாலை ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. அதில் தக்க அனேக கண்ணாடி அல்மாரிகளும் அவற்றுள் விருப்பமான அனேககாட்சி வஸ்துக்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. இப்பிரதிமாணங்களினால் உதகரிக்க வேண்டிய விஷயங்களாவன பிராணி தர்மகுணவித்தை (Human Physiology), பூகோள உறுப்பிலக்கணம் (Geology , தாதுஉற்பத்திசாஸ்திரம் (Mineralogy), சாதாரண தாபரசங்கம சாஸ்திரம் (General natural history) ஆகியவைகளே.

இச்சங்கத்தின் ஆரம்ப சரித்திரமானது மிகவும் சாதாரணமானது. 1884-ஆம் ஆண்டு மேற்கண்ட டப்ளியூ, எச், குயிலியம் துரையவர்கள் மக்ரிப் தேசத்தில இருக்கும்போது இஸ்லாம் மார்க்கத்தைப்பற்றி கவனிக்க ஆரம்பித்தார். அதெப்படியெனில் இஸ்லாமார்க்கத்தைப் பின்பற்றினவர்களின் (முஸ்லிம்களின்) பிரத்தியக்ஷமான உண்மையையும், இங்கிலீஷ்காரர் தேசமாகிய பிரிடானியாவில் சனங்கள் மிகுந்த பட்டணங்களில் அளவளாவிக்கிடக்கும் கீழ்த்தரத்திற்கு வழிவிடும் இழிதகைமைகள் இஸ்லாம் பட்டணங்களில் சிறிதளவேனுமில்லாது நிஷ்களங்கமாய் இருப்பதையுங் கண்டு ஆச்சரியப்பட்டுத் திகைத்து மலைத்தார். (இ[illegible]மேன்மைகளுக்குக் காரணமான இஸ்லாமார்க்கத்தின் உண்மையைத் தெரிந்துகொள்ள இஷ்டங்கொண்டு குரானேஷரீபையும், இஸ்லாத்திற்கு அனுகூலமாகவும் பிரதிகூலமாகவும் பேசும் ஒவ்வொரு புஸ்தகங்களையும் வாசிக்க ஆரம்பித்தார். எவ்வளவாய் வாசித்தாரோ அவ்வளவாய் அவ்விஷயங்களை தீர்க்க ஆலோசித்து இஸ்லாத்தின் உண்மைகளைத் தெரிந்து இதுவே உண்மையான மார்க்கமென்று கண்டுகொண்டார். உடனே கிறிஸ்துமதத்தைக் கைகழுவி இஸ்லாத்தைப் பஹிரங்கமாய் கபூல் செய்தார். சம்பாஷணையினால் இவ்விஷயத்தை சனங்களுக்குத் தெரிவிக்க முயற்சி செய்தார். இது முதல் முதல் அதிக பிரயோசனப்படவில்லை; ஏனெனில் சம்வாதத்திற் கழைக்கப்பட்டவர்களுள் அநேகர் எந்தமதம் உண்மையெனத் தெரிந்துகொள்ளத் தங்களுக்கோர் பரமாணுவும் அவசியமில்லையென்றும், ஒன்றுநல்லதாயிருப்பதுபோலவே மற்றொன்றும் நல்லதென தாங்கள் கருத்துக்கொண்டிருக்கிறார்களென்றும் கண்டிப்பாய்ச் சொல்லிக்கொண்டு இவர் பேச்சை காதில்வாங்காது போய்விடுவார்கள்.

ஆகையால் அநேக வருஷங்களாய் கட்குடி விலக்க பிரசங்கம்செய்தும் அதைப்பற்றி பேசியும் இவர்ப்பூமி லுள்ள கட்குடி விலக்கும் சங்கங்களிலும் தமக்குச் சாவகாசங் கிடைத்தபோது அவ்விஷயத்தைப்பற்றி பிரசங்கம்செய்தும் வருங்காலங்களில், ஒரு கல்லால் இருமாட்சியைக் கொல்வதுபோல ... வக்கில கட்குடி விலக்கப் பிரசங்கிப்பதுடனே இஸ்லாத்தையும் போதிக்க வேண்டுமென்னுங் கருத்து இவருக்குண்டாயிற்று. ஆகையால் அடுத்த பிரசங்கத்தில் குறித்த விஷயமாகிய "மதவைராக்கிகளும் மதவைராக்கியமும்" என்பதைப்பற்றி பிரசங்கஞ் செய்துவரும்போது, நபி அல்லல்லாகு அலைகிவசல்லமவர்களின் சரித்திரத்தை மிகவும் சுருக்கமாய்ச்சொல்லி, அவர்கள் தங்கள் உமமதத்திற்காக எடுத்துக்கொண்ட கஷ்டங்களைப் புகழ்ந்து, குர்ஆனேஷரீபில், கட்குடி, சூது முதலியவை கண்டிப்பாய் விலக்கப்பட்டிருப்பதையும் எடுத்துக் காண்பித்தார்.

இத்தடவை யிவர் கருத்து நிறைவேற ஆரம்பமானது; பிரசங்கமுடிவில் அந்த சபையிலிருந்த ஒரு கனவானு கியதுரை ரகசியமாய் இவரிடம்வந்து நபிசல்லல்லாஹு அலைகிவசல்லமவர்களைப்பற்றி பல கேள்விகள் கேட்டார். அன்றுமாலையிலும் அடுத்தமாலை நேரங்களிலும் இருவருக்கும் இவ்விஷயத்தைப்பற்றிப் பெருத்த விவாதம் நடந்து வந்தது. முடிவில் அந்த கனவான் மூன்று வாரங்களுக்குள் குர்ஆனேஷரீபின் அருத்தத்தை ஓதி விளங்கிக்கொண்டு மேற்படி குயிலியம் துரை அவர்களிடம்வந்து நான் ஈமான் கொள்கிறேன் (லாஇலாஹ இல்லல்லாஹு) அல்லாவைத்தவிர வேறு நாயகனேயில்லை, (முகம்மதுர் றசூலுல்லாஹி) முகம்மது சல்லல்

லாஹு அலைஹிவசல்லமவர்கள் அந்த நாயகனின் திருத் தூதர் என இஸ்லாமாகிவிட்டார். இவ்விதம் முதல் முதல் இஸ்லாமாக்கப்பட்டது.

சிலவாரங்களுக்குப்பின் இன்னொரு பிரசங்கம் நடத் தப்பட்டபோது அந்த சபையிலிருந்து "பிரிகெள் ஹெறட்" என்னும் துவாசானி யிவரிடம்வந்து குர் ஆனேஷரீபை தான் வாசித்துப்பார்க்க பிரியமாயிருப் பதால் அதை யிரவல்கேட்க, அப்படியே கொடுக்கப் பட்டது. அதைவோதி அதன் மஅனவை விளங்கித் தெளிந்து இஸ்லாத்தை கபூல் செய்தார்கள்; அவர்க ளுக்கு "பாதிமா" என பெயரிடப்பட்டிருக்கிறது. லிவர்பூல் முஸ்லிம் சபையின் பொக்கிஷதாரியாயிருப் பது இந்த பீபீஸாகிபாவே.

இக்காரணத்தினுல் மேற்கண்ட "மதவைராக்கிகளு ம் மதவைராக்கியமும்" என்னும் பிரசங்கமானது முத ல்தடவை இங்கிலீஷில் அச்சிட்டு எல்லாஞ் செலவாகி இரண்டாந்தடவையும் அச்சிடப்பட்டு வெளிப்படுத்தப் பட்டன. நான்குபேர்கள் இஸ்லாமாக்கப் பட்டபோது ம் ர்க்கபோதனைக்காக ஒரு சிறு அறைவாங்கி, அதில் வெள்ளிக்கிழமைதோறும் மூமின்களுக்கும், ஞாயிற்று க்கிழமை மாலைதோறும் அன்னியர்களுக்கும் பிரசங்கஞ் செய்ய சபை கூடுவதாய் ஏற்படுத்தப்பட்டது. இதுவோ மிகவும் பிரமாதமான முயற்சி. அனேகந்தடவை எங்க ள் சபையாரைத்தவிர ஒருவரும் எங்கள் பிரசங்கத்தை க்கேட்க வருகிறதில்லை; இதுமாத்திரமோ அக்கம்பக்கத் திலிருக்கும் இழிஞர்கள் எங்களறையின் சன்னல் கதவு களை அடிக்கடி கல்லால் உடைத்துத் தகர்த்தெறிவது மன்றி, அவ்வறைக்குள் நாங்கள் போகும்போதும் வெ

ளியேபுறப்படும்போதும், சேற்றினாலும், நாற்றமான வஸ்துக்களினாலும், சாணம்முதலிய அசுசியான வஸ்துக்களினாலும் எங்களை அடிப்பார்கள். இத்துடன் எங்கள் உறவின்முறையார்கள் எங்களைத் தூஷிக்கவும்,பரிகாசஞ்செய்யவும் நகைக்கவும் ஆரம்பித்து சிலவேளை இம்சைசெய்யவும் ஏற்பட்டார்கள். இத்தியாதி வருத்தங்கள் நேரிட்டும் அல்லாகுத்தஆலா குர்ஆனெஷரீபில் திருவுளமாயிருப்பதை வாசித்து நாங்கள் தேறுதலடைந்திருப்போம். அவ்வாக்கியங்கள் பின்வரும்விதமாம்,

"அல்லாகுத்தஆலாவை நம்பினபின், யார் பொறுமையுடன் உறுதியாய் நிலைத்திருக்கிறார்களோ அவர்களை அல்லாகுத்தஆலா நேசிக்கிறான். ஏனெனில் அல்லாகுத்தஆலா தன்னை நம்புகிறவர்களை நேசிக்கிறான் அவன் உனக்கு உதவியானால் ஒருவரும் உன்னை வெல்லார்கள். ஆனால் அவன் உன்னை விட்டுவிட்டால் அவனன்றி உனக்கு உதவி செய்பவரார் (ஒருவருமில்லை)-ஆகையால் மூமினானவன் அவன்மீது நம்பிக்கை வைக்கட்டும்" (ஸூரா—௩.) "இடறுகளை அமைதியாய்ப் பொறு; காபிர்களைப்பற்றி நீ விசனப்படாதே அல்லது அவர்கள் தந்திரமாய்ச் சட்டங்கட்டிப் பேசுகிறதைப்பற்றி மனவருத்தப்படாதே, ஏனெனில்; அல்லாகுத்தஆலாவிற்குப் பயந்து, நீதியாய் நடப்பவர்களுடன் அவனிருக்கிறான் (ஸூரா—௧௭).

இவ்வாக்கியங்களின்படி யெங்கள் வேலையை உறுதியாய் நடத்திவந்தோம். அல்லாகுத்தஆலாவும் எங்களுக்குதவிசெய்து எங்களை யாதரித்தான். 1889-ஆம், வருஷமுடிவில் இப்பொழுதிருக்கிற கட்டடத்திற்குப்

போனோம்; அதுஎங்களுக்கு மிகவும் சவுக்கியமானதும் வசதியுமானதுமாயிருக்கிறது.

இப்போது (முன்) நான்குபேருள்ள எங்கள் சிறு சபையானது ஐம்பதுபெயருக் (கதிகமாய்) விருத்திபெற்றிருக்கிறது. இதுஒரு பெருந்தொகையல்ல வென்பது உண்மையேயாயினும், நாங்கள் செய்துவரும் முயற்சியானது அல்லாகுத்தஆலாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு விருத்தியடையும் ஓர் அறிகுறியாயிருப்பது நிச்சயம். இவ்விடம் இஸ்லாத்தில் சேர்ந்திருப்பவர்கள் பற்பல வகுணத்தவர்கள்.—ரோமன்கத்தோலிக்கு அல்லாதவர்கள்; எபிஸ்கோபிலியர்கள்; (குருவாட்சிக்குரியர்கள்) வெஸ்லியர்கள் (மானதபூசையாளர்கள்;) ஒருத்துவர்கள் (யூனிடேரியர்கள்;) மெதடிஸ்டுகள்; பாப்டிஸ்டுகள்; ஆகியவர்களாம். நாஸ்திகமதத்தைச் சார்ந்த ஒருவரும் எங்கள் சபையிலுண்டு. அவரவர்களின் மதக்கொள்கை யென்னவென ஒருபோதும் நாங்கள் வினவுகிறதில்லை, ஆனால் அல்லாகுத்தஆலாவின் கிருபையைப் பற்றியும் இன்ஸானின் சகோதரதன்மையைப் பற்றியும் நாங்கள் பிரசங்கம் செய்வோம். யாரேனும் இஸ்லாமாக விரும்பினால் பஹிரங்கமாய் அவர்கள் கலிமா சொல்லி அதற்காக ஏற்படுத்தியிருக்கிற உடன்படிக்கையில் கையொப்பம்வைத்தபின், அந்த ஏழைகளாயினும் எங்களுக்குச்சரிசமானமான அங்கத்தவர்களாய்ச் சேர்த்துக்கொள்வோம்.

இவ்விதமான எங்கள் முயற்சியானது முஸ்லிம்கள் வாசம்செய்யும் பட்டணங்களிலெல்லாம் பெருத்த கவனிப்பையும் அதிக பிரியத்தையும் உண்டாக்கி யிருக்கிறது. இஸ்லாத்தின் அகீதாக்கள் விளக்கமாகவும் சுருக்

கமாகவும் சொல்லப்பட்டிருக்கும் "அகீதயே இஸ்லாம்' என்னும் கிதாபானது இங்கிலீஷில் 2-ம் பதிப்புமாகி அனேக பிரதிகள் செலவாகின. மேலும் அந்த கிதாபானது ஆஷியகண்டத்தில் வழங்கும் ஒன்பது * பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டு ஆயிரமாயிரம் பிரதிகள் செலவாகின்றன.

இதுகாள்வரையில் இக்த வேலை நடத்த சென்ற செலவை தானே சமாளித்துக்கொண்டு வந்தது; லிவர் பூலிலுள்ள இம்முஸ்லிம் சங்கமும் அன்னியர் உதவியின்றியே நடத்தப்பட்டது ஆனல் இனி இந்த சிறுதொகை ஜனங்களை, உலகத்தின் மற்ற பாகங்களிலிருக்கும் முஸ்லிம் சகோதரர்களினல் திரவியத்தினலும் மற்றவிதத்தினலும் சகாயம் செய்யப்படவேண்டியதிருக்கிறது.

தங்கள் பிரியத்தின்மீது ஹய்தராபாது நகர வாசிகளின் சகாயத்தினல் இவ்விடம் வந்த இரண்டுபோதகர்களும் (மௌலவிமார்களும்) தங்கள் முயற்சியினல் முஸ்லீமாகு மவர்களுக்கு மாத்திரமே முன்னிலையாயிருப்பார்கள். நன்னம்பிக்கை முனையிலிருந்து டான்ஜியர்ஸ் வரையிலும், ஸ்பார்டல் முனையிலிருந்து சீனதேசம் வரையிலும் உள்ள முஸ்லிம்கள் எல்லோருடைய இருதயமானது இங்கு (சீமையில்) இஸ்லாம் பரவுதலைப்பற்றி குதூகலிப்படைகிறது. இன்னும் சிம்மாசனத்தின்மீதிருந்து அரசு செய்யும் பாதுஷாக்கள் முதல் வீதிகளில் திரிந்து இரந்துண்ணும் மிஸ்கீன்கள் ஈறாகவுள்ள அனேககோடி இந்திய முஸ்லிம்கள், மஹா மேன்மையுள்ள அதி தயாபரனுன அல்லாவே! பரிசுத்தமான

* இது தமிழிலும் அச்சிடப்பட்டிருப்பதால் பத்துபாஷைகளாயின.

உன்மார்க்கமாகிய இஸ்லா[illegible]த்தை யிங்கிலாந்தில் (சீமை யில்) பரவச்செய்" என இந்த வக்தும் மிகவும் பயபக்தியுடன் துவாச் செய்கிறார்கள்.

இவ்விதம் முழுமனதோடு மிகவும் பயபக்தியாய்ச் [illegible]யும் துஆவானது கபூலாகாதென சொல்லத்துணி பவரொவர் (ஒருவருமில்லை.)

தாயிம் காயிமான அவனே குர்ஆனெஷரீபில் திருவுளமாயிருக்கிறதாவது, "ஒருவன் என்னைத் தொழும்போது; அவன் கேட்கும் துஆவை நான் அவசியம் கேட்பேன்" (சூரா—2)

"ஒவ்வொரு கூட்டத்திலிருந்தும் ஒரு சாக்ஷியை யுண்டாக்கப்படும்* போது பரிசுத்தமான குர்ஆனே ஷரீபில் முன்னறிவித்திருக்கிற காலம் இதுதானென ஒவ்வொரு உண்மையான மூமினும் நம்புகிறார்.

இஸ்லாத்தைக் கபூல்செய்து இங்கில[illegible]திருக்கும் நாம் எள்ளளவேனும் சந்தேகித்தல் கூட[illegible]

"இவ்விஷயத்தைப்பற்றி சிறிதளவேனும் சந்தேகம் நம்மனதில் தங்கியிருக்கும்படி† " ஒருக்காலும் நாம் விடக்கூடாது.

"ஞகாசே[illegible]த்தல மேல் சத்தியம், தன்னிருட்டினல் பரவப்பட்ட [illegible]வின் மேல் சத்தியம்.

‡ நம்முடைய நாயன் நம்மை வி[illegible]டுவிடவுமில்லை.

---

* (சூரா—கக). † (சூரா—எ)

‡ உம், உம்மை என்பவற்றிற்குப் பதிலாய் நம், நம்மையென இங்கிலீஷில் எழுதியிருக்கிறபடி யிதிலும் எழுதப்பட்டன.

அல்லது நம்மை அவன் வெறுக்கவுமில்லை.

நாம் வழிதப்பித்திரிந்தபோது அவன் நமக்கு வழி காண்பிக்கவில்லையா?

நம்மை அவன்சீமான்களாக்கவில்லையா? (சூரா—கஅ

"அல்லாகுத்தஆலாவின் உதவியும் வெற்றியுமுண்டாகும்போது அவனது மார்க்கத்தில் சனங்கள் கூட்டங்கூட்டமாய் வருவதை நீர்காண்பீர்" (சூரா—கக0)

மேற்கண்ட விதமாய் இங்கிலாந்து முதலியதேசங்களில் இஸ்லாம் மார்க்கம் பரவி யாவரும் நற்பதவியடைய நல்லெண்ணத்துடன் விடாமுயற்சியாய் உழைத்து வரும் நமது சகோதரர் மகாகனம்பொருந்திய டப்ளியூ, எச், குயிலியம்சாகிபு அவர்கள், இஸ்லாத்தின் உண்மைகளை யாவருக்குந் தெரிவிக்க பல கிதாபுகள் எழுத பிரயத்தனப்பட்டு அவற்றுள் அச்சிடப்பட்டு வெளிப்பட்டிருக்குமவைகளிலொன்றுனதும், முன்சொல்லப்பட்டது போல ஆஷியா...த்து ஒன்பது பாஷைகளில் தர்ஜுமா செய்யப்பட்டு அனேகமாயிரஞ் செலவாகி வருவதுமான இந்த "அகீதயே இஸ்லாம்" என்னும் கிதாபானது சிறப்புற்ற மக்கமாநகரத்து இமாம் அவர்களினுல் அறபியில் மொழிபெயர்க்கப்பட்டு அங்குள்ள ஆலிம்கள் யாவரும் வாசித்துக் களிகூர்ந்து மகாமேன்மைதங்கிய அமீருல் மூமுனீனுகிய றும்சுல்தான் அவர்களுக்கு அனுப்ப, அதை சுல்தான் அவர்கள் மிகவும் ஆவலுடன் ஓதி ஆனந்தித்தார்கள். மேற்கண்ட W. H. குயிலியம்சாகிபு அவர்கள் ஸ்தம்பூலிற்கு வரவழைக்கப்பட்டு அங்கு அனேக வெகுமதிகள் கொடுக்கப்பட்டதுமன்றி, மிகவும் உன்னதமான வெள்ளை அறபிகுதிரையொ

ன்று பரிசாகக் கொடுக்கப்பட்டு அவர் அங்கு யாவராலும் கனப்படுத்தப்பட்டார். மேலும் மேற்படி சாகிபின் புத்திரசிகாமணி குயிலியம், அகமத் என்பவருக்கு சுல்தான் அவர்கள் தமது இராணுவ உத்தியோகப் பட்டமுங்கொடுத்து, லிவர்பூல் புத்தகசாலைக்காக முன்னனுப்பின [illegible]ப்பிற் கண்ட புத்தகங்க ளெல்லாம் தருவிக்கிறதாக வா[illegible]களித்தார்கள்.

மிஸர்தேசத்து கதிவு அவர்களும் இந்த அகீதயே இஸ்லாம் என்னும் கிதாபைவாசித்து ஆனந்தித்தார்கள்.

நமது மாட்சிமை தங்கிய சக்கரவர்த்தினியாகிய விக்டோரியா அம்மா அவர்களும் இந்த கிதாபுகளில் ஆறுபிரதிகள் வாங்கினதாகத் தெரியவந்திருக்கிறது.

இந்த கிதாபில் பிரதி பாதித்திருக்கிற விஷயங்கள் யாவும் முக்கியம் முஸ்லிமாகிய நாமனைவரும் மிகவும் கவலையுடன் கவனித்து அறியவேண்டியவைகளே. ஏனெனில் நமது மார்க்கத்தின் உஸூல்களை (ஆதி அம்ஸங்களே) பூலோக முண்டானது மு[illegible]தென்றும் அவைகளே பூர்வீகத்திலுண்டானதுபோல இன்றும் மாறுபடாதுகாயிமாயிருக்கிறதென்றும், அவைகளே யுண்மையானவைகளென்றும், அவைகளே உறுதியாய்க்கைப்பற்றவேண்டியவைகளென்றும் புறமதத்திலுள்ள பிரபல்லிய கல்விமான்களின் அபிப்பிராயங்களின் மூலமாகவே நியாயம், யுத்தி அநுபவம் முதலியவைகளினால் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் இஸ்லாம் மார்க்கத்தின் சிலவிஷயங்களின் உண்மையான கருத்தை யறியாது புறமதத்தவர்களுள் சிலர் அவை குற்றமெனக்கூறுவதை நியாயயுக்தமாய் அவைகுற்றமல்லவென்றும் அவற்றால் அநுபவசித்தமாய் உண்டாகிவரும்நன்மைகள் இன்னின்

னவென்றும் எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. இன்னும் பூர்வீகத்திற் கொடுக்கப்பட்ட அகீதாக்கள் காலம் செல்லச்செல்ல பல மாறுதலடைந்து, புரண்டு வருவதே புறமதமென மிகவும் இனிய வார்த்தைகளுடன் தக்க நியாயத்தோடு விளக்கப்படடிருக்கின்றன. இந்த கிதாபின் விஷயங்களை சங்கரமாய் முன்ன ரிவ்விடம் [illegible] முதுவாம்.

தற்காலம் ஆங்கிலேயர்கள் கல்வியில் அதிக விருத்தியடைந்து வந்தும் முஸ்லிம்களின் அரசாங்கத்துடனும், முஸ்லிம்களோடும் உலகத்தில் மற்றெல்லாரைப் பார்க்கிலும் அதிகமாய் சம்பந்தப்பட்டிருந்தும் இஸ்லாம்மார்க்கத்தின் உண்மைகளை அறியா திருப்பதினலேயே அவர்களிலுள்ள சிலவேஷதாரிகள் ஒவ்வொரு சமயம் இஸ்லாத்திற்கு விரோதமாய் ஏதேனும் ஓர் புரளியையுண்டாக்க முயலும்போது அவ்வாங்கிலேயர்கள் சத்தியாசத்திய மின்னதென்று அறியக்கூடாமையாய் அது நிமித்தமே இஸ்லாத்தில் எப்போதும் விருதாவாய் மாச்சரியக் கருத்துக்கொள்கிறார்க ளென்றும், இஸ்லாத்தின் உண்மைகளை அவர்கள் பாரபட்சமின்றி தெரிந்துகொள்ளமுயல்வார்களே யானல் மனசாட்சிக்கு விரோதமாய் ஒருக்காலும் அப்படிச்செய்யார்க ளென்றும்.

அல்லாகுத்தஆலா ஒருவனே யென்றும் அவன் தவ்ஹீதே இஸ்லாம்மார்க்கத்தின் பிரசித்த அகீதா; கோடித்துவம், திரித்துவம் எவ்விததகிலும் நியாயயுக்தத்திற்கு நில்லா. அவனுக்கு முக்காலமுந் தெரியுமாகையால் மனித உயிர்வாழ்க்கையும் மார்க்கமும் என்றும் ஒரேவிதமாயிருக்கவேண்டுவது அவசியக மாகையால் அவன் பூர்வீகத்தில் வெளிப்படுத்தின அகீதாவும் ஒன்றே.

அதுவே இல்லாமென்றும், சனங்களநிகப்படவே இந்த அகீதா மாறுபட்டு வர சர்வதயாபரனுனறகீமான பமயால் தன்னுடைய அடியார்களுக்குத் தங்கசாவகாசம் கொடுக்காமலும் எச்சரிக்கைப் படுத்தாமலும் அவர்களை தண்டித்தலாகாதென காலத்திற்குக்காலம் ஏற்ற விதமாய், நபிகளையும், றசூல்மார்களையும் உலுல் அஅளம்களையும் அனுப்பி சனங்களுக்குத் தவ்கீதைப் போதிக்கச் செய்தானென்றும்.

பின்பு முகம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களின் ஒவ்வொரு செய்கைகளும் அதிமேலான வைகளாய் எப்போதும் பிறர்நயத்திற்காகவே பாடுபட்டவர்களே யொழிய சுயநயப் பிரியரல்லர். எப்போதும் உண்மையாளர், சத்தியப்பிரியர். சுவாபீகமாகவே சத்தியவாதி, உள்ளதையுள்ளபடி செய்பவர், ஆடம்பரமான பெருமை அற்பமு மில்லாதவர்கள், பொறுமையில் ஒப்பற்றவர்கள், பாரபட்சமில்லாதவர்கள், அல்லாசுபகானுகுத்த ஆலாவின் இக்ராமையுடைந்தவர் எப்போதும் ஆகிறத்து விஷயங்களிலேயே சிந்தனையுள்ளவர்கள். முடிவாய் சுருக்கிச் சொல்லில் மனித சுபாவத்திற் கெல்லாம் எட்டாத சக்தியுடையவர்கள், மார்க்கம், இராசாங்கம், சாதி, ஆகியவைகளை ஸ்தாபித்ததில் உலகத்திலுள்ள நபிகள், றசூல்மார்கள் உலுல் அஅளம்கள், அரசர்கள், சாதி ஸ்தாபிதர்கள் ஆகிய இவர்களுள் எல்லாம் ஒருவரேனும் நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களுக்கு சமானமானவர் இல்லை யென்றும் இவ்விஷயங்களில் அவர் ஒப்பற்றவரும், அவரே கம்முல் அன்பியா, அவர் சொற்படியே எல்லோரும் நடத்தல் கடமை யென்றும்.

அவர் ஒரு அக்ஷரமும் கற்பிக்கப்படாத உம்மியாயி ருந்தும் அவர்கொண்டுவந்த வேதமாகிய குர்ஆனேஷரீ பானது இந்நாள்வரையில் எவ்விஷயத்திலும் ஒப்பற் றதாக இருக்கிறது. அதுவே துன்யாவின் காரிய ங்களுக்கும் ஆகிறத்தின் காரியங்களுக்கும் உபயோக மான கிதாபு அதாவது-அதுவே இலக்கிய சாஸ்திரம், அதுவே இலக்கண சாஸ்திரம், கலைஞான சாஸ்திரம துவே, வாசக இலக்ஷணசாஸ்திரமும், பாவிலக்ஷணமு மிதுவே, தர்க்கசாஸ்திரமும் அலங்காரசாஸ்திரமு ம துவே, இதுவே சரித்திரசாஸ்திரம், நீதிசாஸ்திரம் இது வே; மிதுவே, அரசாங்க நீதிசாஸ்திரமும். பிரஜைகள் நடக்கவேண்டிய நீதிசாஸ்திரமிதுவே, தண்டனை சட் டமும், சீவில்சட்டமும், யுக்தசட்டமு மிதுவே; வேத சாஸ்திரம், ஜெபசாஸ்திர மிதுவே; முன்னுள்ள நபிமார் களின் கிஸ்ஸாக்களடங்கிய கஸஸுல் அன்பியாவுமி துவே, அதன் வாசக நடையிலும், பாவலங்கார வரு ணனைகளிலும், நீதி போதனைகளிலும், மற்றவிஷயங்களி லும் இதற்கு நிகரானதொன்று மில்லை. இதில் சொல் லப்பட்ட நீதிகளோ மிகவும் உயர்ந்தவைகள், யாவன் ஒருவன் இந்நீதிகளைக் கைப்பற்றி நடக்க ஆரம்பித்தால் தினேதினே அதற்குமேலான தர்ஜாவிற்கு ஏற்றிக் கொண்டுபோவது மன்றி பின்வாங்க விடுவதில்லை. இந் நீதிமுறைகளை கைப்பற்றினவனை அவற்றிலேயே சாஸ் விதமாய் நிலைத்திருக்கச் செய்வதுபோல மற்றவைகள் செய்யவில்லை. ஆகையால் மற்றவர்கள் வேதமென்று சொல்பவைகளெல்லாம் இதற்கு நிகரல்லவென்பதை பற்பல கல்விமான்களின் அனுபவசித்தமான அபிப்பிரா யங்களினால் அத்தாக்ஷி காண்பிக்கப்படும்.

இன்னும் இஸ்லாமார்க்கமானது துன்யாவிலுள்ள பரவச்செய்யும் மதங்கள் எல்லாவற்றைப் பார்க்கினும் அதிகம் வெற்றிபெற்றது; இதை கபூல்செய்தவர்களை பிறமதத்திற் செல்லாது செய்வதில் இது [illegible] உறுதியானதென்றும், யாவரும் எளிதில் அறியக்கூடியதென்றும், இதை கபூல்செய்த ஒருவன், புத்துகளை வணங்குதல், ஷைத்தான்களை வணங்குதல், கிரக ஆராதனை, மந்திரோச்சாடனம், நரபலி, சிசுவதை, ஜீவஹிம்சை, நரமாமிச பக்ஷணம், மதுபானம், சூது, விபசாரம், திருட்டு, அசுசி, சோம்பல், சுயஇச்சை முதலிய துர்க்கிரியைகளையொழித்துத்தள்ளி, ஏகநாயகனை அல்லாகுத்தஆலா வாகிதென்னும் ஈமானும், தவ்ஹாரத்து, றப்புல் ஆலமீனாகிய றகிமானை முழுமனதோடு வணங்குதல், அதபு, கற்புடமை, விருந்தோம்பல், தயாள்த்துவம், ஜகாத்து, சுறுசுறுப்பு, ஒழுங்கு, நீதி, சகோதரவாஞ்சை, தன்னைப்போலவே பிறரையும் நேசித்தல் பேசுவதிலும் உடுப்பதிலும் அதபு, மரியாதை, யோக்கியதை, சத்தியம், மானுஷீக அநுதாபம்முத[illegible]ண்டாகி இன்ஸானே காமிலாகி விடுகிறான். கட்குடி முதலிய தீமைகளை உடனே பற்றற வொழிக்கவும் நன்மைகளையெல்லாம் படிப்படியாய்கற்பித்து ஸ்தாபிக்கவும் துன்யாவிலுள்ள எல்லாமார்க்கங்களிலும் இஸ்லாமே மேலானது; அதாவது கீழ்தரத்தி லிருப்பவனை உயர்தரத்துக்குக்கொண்டுபோவதில் இஸ்லாமார்க்கம் மிகவும் சாமர்த்திய முள்ளதென்றும்.

புறமதத்தவர்கள் இஸ்லாமார்க்கத்தில் குற்றமெனச் சொல்லும்,

1. பல பாரித்துவம் இருக்கூடுமென கிறீஸ்துவ வேத புஸ்தகங்களில் அனேக ஆதாரமுண்டென்றும் அது மு

ஸா அலைகிஸ்ஸலாம், தாவூத் அலைகிஸ்ஸலாம் ஆகியஇவர்கள் அதிலுள்ள தீமைகளை தடுக்காது விட்டுவிட்டாலும், முகம்மது சல்லல்லாஹு அலைகிவசல்லம வர்கள் அதிலுள்ள கொடுமைகளைத் தணியச்செய்ய முயற்சிசெய்து எல்லையில்லாது முறை நடந்திருந்ததற்கு எல்லையேற்படுத்தி நிபந்தனைக்குள்ளாக்கினார்கள். பலஸ்திரி விவாகவிதியினால் தொழிலாளிகளான விபசாரிகளிருக்கவும் ஏதுவில்லை. பெண் சிசுவதை தடுக்கப்படுகிறது. எவ்வொரு ஸ்திரீயும் மார்க்கவிதிப்படி ஏற்படுத்தப்பட்ட புருஷர்களினால் காக்கப்பட ஏதுவாகிறதென்றும், பலஸ்திரீ விவாகவிதியில்லாத மார்க்கத்தில் விபசாரம், சிசுவதை முதலிய அனேக கெடுதிகளுக்கு ஏதுவென்றும், (இங்கிலாந்தைப்போற்கொத்த தேசத்தில் மாத்திரம் ஒரு ஸ்திரி விவாகம் சுபாவமாய் எற்குமேயொழிய மற்று மனேகதேசங்களில் சுபாவமாகவே ஒன்றிற்கதிகம்வேண்டியதாம்) ஆனால் அதற்கும்அநேக நிபந்தனைகள் இஸ்லாத்தில உண்டு ஆகையால் அதில் குற்றம் சொல்ல விடமில்லை என்றும்.

2. அடிமையாட்சி-இது இஸ்லாமார்க்கத்தின் உசூல்களின் பாகமல்லவென்றும் அது மூஸா அலைஹிஸ்ஸலாம், போலூஸ்முதலியவர்களினால் தடுக்கப்படவில்லையாயினும் இஸ்லாம் மார்க்கத்தில் அதிலுள்ளகொடுமைகள் தணிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் இது இஸ்லாம்தேசத்தில் மிகவும் சொற்பமா யிருப்பதுடன் நீதியாய் நடத்தப்படுகிறது. ஆங்கிலேயர்களின் சகோதரர்களும் கிறிஸ்துவர்கள் வாசஞ்செய்யும் அமெரிக்கா தேசத்திலும் இது நடந்துவருவதுடன் அதிககொடுமையாய் நடத்தப்பட்டது தெரிந்தவிஷயம் என்றும்

3. வாளினால பரவப்பட்டமார்க்கம். இதுசுத்தகட்டுவார்த்தை யென்றும், பலவந்தமாய் இஸ்லாத்தில் ஒருபோதும் சேர்க்கப்படாரகளென்றும், பல வந்தம், கொலைமுதலியவைகள் நடந்ததெல்லாம் புறமதத்திலேயே யொழிய அவ்விதம் இஸ்லாத்தில் இல்லையென்றும் உலகத்திற்கு விரோதமாய் ஒருவர்கத்தியை உபயோகிப்பது அசாத்தியமான காரியமென்றும் பரிஷ்காரமாய்க் காண்பித்து புறமதத்தவர்கள் தங்களுக்குள்ளே நடத்தின சண்டையில் நேரிட்டகொலைகளோ கேட்போர் மனநடுங்கத் தக்கதென்றும்.

(4) பெண்களுக்குருகில்லை. (5) தக்தீரும் இஸ்லாமும் ஒன்றென்பது இவைபுரளிவார்த்தைகளென்றும், சாஸ்திரயுத்தமாய் ஒப்புக்கொள்ளக்கூடாதவைகளென்றும் இவைகளை சொல்பவர்களின் மூடத்தனமே காரணமென்று நிரூபித்தும்.

புறமத குற்றங்கள் திரித்துவம், கப்பாரா முதலியவைகள் ரகசியமென்பதெல்லாம் அசாத்தியமானதெனவும் தக்கநியாயத்தோடு இனியவார்த்தையால் எடுத்துக்காண்பிக்கப்பட்டிருக்கின்றன.

இன்னன அநேக முக்கிய விஷயங்களடங்கிய இந்த அருமையான கிதாபானது முஸ்லிமாகிய நம்மெல்லோருக்கும் ஆவசியகம் வேண்டியவைகளில் ஒன்றென்பது எல்லோருக்குந்தெரிந்த விஷயமே. ஏனெனில் நம்மவர்களுள்ளும் பலர் அநேக கிதாபுகளெழுதியிருந்தாலும், சீமையிலுள்ள பிரபல்லியமான ஒரு பெரியநியாயவாதியும் தமதுதேசத்து மதாசாரமுதலிய நடையுடைபாவனை தெரிந்தவருமான ஒருவரால் எழுதப்பட்டிருப்பதா

லும், ஒவ்வொரு விஷயமும் நியாயம் புதத்தியனுபவயுக்தமாய் அன்னியர்களின் அபிப்பிராயத்தினலேயே காண்பிக்கப்பட்டிருப்பதாலும் இதுவே அதிகமேலானவைகளிலொன்றெனயாவரும் ஒப்புக்கொள்ளத்தடையிராது.

தற்காலத்தில் Mrs. கார்லைல் (Carlyle), கிப்பன் (Gibbon), ஒக்லி (Oekley) டெவன்போர்ட் (Davenport), லெயிட்னர் (Leitner), முதலிய கல்விமான்களனேகர் இஸ்லாமார்க்கத்தைக்கவனித்து அதன் மேன்மைகளை வெளிப்படுத்தி யுள்ளார்கள். அநேகர் இரகசிய மார்க்கமாய் ஈமான்கொண்டிருக்கிறார்கள். அநேகர் பஹிரங்கமாய் இஸ்லாத்தை கபூல் செய்து வருகிறார்கள். ஆகிலும் முற்காலத்தில் பொறுமையுள்ள சிலர் இஸ்லாத்திற்கு விரோதமாய் உண்மையல்லாததும் வெறுங்கட்டானதுமான சங்கதிகளை யெழுதி வைத்திருக்கிறார்கள். இன்னும் இந்தியாவிலும் மற்றும் பலவிடங்களிலுமுள்ள பாதிரிமார்களும் அப்படியே போதிக்க முயல்கிறார்கள். அப்புத்தகங்களை வாசிக்க நேரிட்டவர்களுக்கும், அப்பாதிரிமார்களின் போதனைகளைக் கேட்பவர்களுக்கும் (முக்கியம் இங்கிலீஷ் வாசிக்கும் முஸ்லிம் இளைஞர்களுக்கும்) மனக்கலக்கமடைய இடமாகலாம். இதை இலேசாய் நினைத்து உடனே கண்டிக்காதுவிட்டு விட்டால் முடிவில் விபரீதமாய் முடியுமென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல தெரிந்த விஷயமே.

ஆனால் இந்த கிதாபில் அவ்வித சந்தேகங்களாகிய வியாதிகளுக்கேற்ற கைகண்டபரிகாரங்கள் நியாயயுக்தமாய்த் தெளிவாய் காண்பித்திருப்பதால் உடனே அவ்வியாதி மாயமாய்ப் பறந்துபோம்.

இன்னும் அதை இஸ்லாத்தில் அகீதாவே அஸலென்றும் ஆதிமுதல் இதுவரையில் மாறாது காயிமானதென்றும், தஹாரத், சகோதரவாஞ்சை, நாகரீகமுதலியனவுண்டாக்கவும், மனிதர் உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத்துணையாகவும், ஆகிறத்தின் தர்ஜாக்களையிலே சில்பெறச் செய்யவும் இஸ்லாமே உரித்தானதென சகலரும் ஒப்புக்கொள்ளும்படியான விதமாய் எடுத்துக்காண்பிக்கப்பட்டிருக்கிறது.

மேலும் இஸ்லாத்தின் உண்மை தெரியாது மதமாச்சரியம், பொறுமை, வீண்தர்க்கம், அறியாமை முதலியவைகளுள்ள பிடிவாதக்காரர்களுக்கு இஸ்லாத்தின் அகீகத்தை விளங்கிக்கொள்ள ஏதுவாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன.

இக்காரணங்களினால், முதல் முதல் நமக்குத் தெரியாது நமது இரத்தத்தில் பற்றிய வியாதியானது நாளாவர்த்தியில் அணுவணுவாய் விருத்தியடைந்து முடிவில் மரணத்தைத்தரும் இந்த ஷக்காகிய வியாதியை நீக்கி, மெலிந்து நலிந்து துர்ப்பலமடைந்து சோர்ந்து கிடக்கும் தேகசுபாவத்தைக்கிரமப்படுத்தி, நல்விரத்தமுண்டாக்கி, இராஜகருவிகளைப்பலப்படுத்தி, ஊக்கம், தைரியம், முதலியவைகளையுண்டாக்கி உயிர்ப்பிக்கும் "ஆபே ஹயாத்" என்னும் சஞ்சீவிக்கொப்பிடலாம்.

ஷக்கு, சந்தேகம், மனக்கலக்கம் முதலிய துர்நாற்றம், தொற்று வியாதி ஆகியவைகள் அணுகாது இது செய்கிறபடியால் இதை பூதிகந்த சாங்கிராமிகரோக நிவர்த்தனகாரிக்குச் சமானமென்கலாம்.

வீண்வைராக்கியம், மூடபக்தி, மதமாச்சரியம், முதலியவியாதிகளினால் அகக்கண்பார்வை மழுங்கி இஸ்லா

த்தின் உண்மையையறியக் கூடாத அந்தகாரமாகிய இஸ்லாத்தின் விரோதிகளின் திரையைப்பறுத்து நீக்கும். ஜவாஹிர்மொஹரா" இரத்தினநிமாத்திரை யென்கலாம்;

இதைவாசிக்கும் மூமின் முஸ்லிம்களின் மனதை திடப்படுத்தி, ஆனந்திக்கச்செய்கிறபடியால் "[illegible]பர்திகேயாகூதி" மாணிக்கமனோரஞ்சித மென்கலாம்.

இந்தகிதாபானது முன் [illegible] டபடி ஆஷியாக ண்டத்தில் வழங்கும் ஒன்பது பாஷைகளில்மொழிபெயர்க்கப்பட்டு அந்தந்த பாஷை தெரிந்தவர்கள் அதை வாசித்து ஆனந்தித்து வருகிறார்கள். ஆகையினால் தமிழ்தேச வாசிகளாகிய முஸ்லிம் சகோதரர்களின் விருப்பத்தையும் அவலமாக்காது அவர்கள் கோரிக்கை நிறைவேறவும் மிஸ்கீனது ஹாஜது கபூலாகவும் இதைத்தமிழில் மொழிபெயர்க்கத்துணிந்தேன். ஆனால் இந்திகிரந்தமானது ஆழ்ந்தகருத்துடன் சொற்சுருக்கமாகவும் பொருள் விரிவாகவும் எழுதப்பட்டிருப்பதென்பதிற்சந்தேகமேயில்லை. ஆகையால் யாவரும் தெரிந்துகொள்ளும்படி அடியேனது புத்திக்கு எட்டினவரையிலும் இன்னும் சில கல்விமான்களின் கருத்தின்படியும் ஆங்காங்கு விரித்தெழுதி அதற்கு திருவியாய் அடைப்புக்குறியாகிய ( ) பிராகெட்போடப்பட்டிருக்கின்றன. மிஸ்கீனால் இயன்றவரையில் சிரமப்பட்டு எழுதி முக்கால்வாசி வேலை நிறைவேறினபின் எனக்கு நேரிட்ட பிராணபயத்தைத்தரத்தக்க வியாதியினாலும், குடும்பத்தில் நேரிட்ட பல சங்கட்டங்களினாலும் வேலை தடையாகி மிஸ்கீனது கோரிக்கை நிறைவேற இடையூறு நேரிடும்போலத் தோன்றிற்று.

ஆனால் "முஜீபுத்த அவாதி" யாகிய சர்வதயாபரனான அல்லாகுத்த ஆலா எல்லாமூமின் முஸ்லிம்களின்

துவாவின் பறக்கத்தினுல் அந்தவியாதியையும் அந்தசங் கட்டங்களையும் நீக்கிவைத்து மிஸ்கீன் ஹாஜத்து நிறை வேறச்செய்தான்.

தர்ஜுமாச்செய்யும் இல்மில் அதிக பழக்கமில்லா மையாலும் மனிதசுபாவ இயல்பினுலும் இதில் பிழை களிருக்க [illegible]. அவற்றைக்கண்ணுறும் அறிவா ளிகள் மிஸ்கீனை மன்னித்து அதிக கிருபையுடன் அடி யேனுக்குத்தெரிவித்தால் மிகவும் நன்றியறிந்தவனுயிரு ப்பதுடன் பிழை திருத்திக்கொள்ளப்படும்,

மேற்கண்ட விஷயங்களினுல் சீமையில் நமது ச கோதரர் W. H. குயிலியம் ஷேகிபு அவர்கள் தாம் முத ல் முதல் ஈமான்கொள்ள நேரிட்ட சங்கதிகளும் ஈமான் கொண்டபின் இஸ்லாம் மார்க்கத்தைப் பரவச்செய்ய அவர் எடுத்துக்கொள்கிற சிரமங்களும் அங்கு முஸ்லி ம சபை யேற்படுத்தி அதை நடத்தும் விதமும் நன்று ய்த் தெரியவந்திருக்கும்.

மேற்கண்டசபையின் வருஷாந்த கூட்டத்தின் ரிபோ ர்டினுல் தெரியவருகிறதாவது. இம்முஸ்லிம் சபையாரின் பிரசங்கத்தைக்கேட்க முன் ஒருவரும் வாராமலிருந்தது போய் இப்போது இஸ்லாத்தின் அகீகத்தைத் தெரிந்து கொள்ள பேராவாவுடன் அநேகர் வருகிருர்கள். அப்ப டி வருபவர்களின்தொகை நாளுக்கு நாள் அதிகரித்தே வருகிறது. அவர்கள் வரும் முறையும், ஒவ்வொரு வி ஷயங்களையும் ஆழ்ந்த கருத்துடன் அவர்கள் கவனிப் பதையும் யோசிக்குங்கால இவர்கள் வேடிக்கைக்காக, அல்லது காலங்கழிக்க, அல்லது விளையாட்டிற்காக வ ருபவர்களல்ல, இஸ்லாத்தை விளங்கிக்கொள்வதற்காக வே வருபவர்கள் என்பதிற் சந்தேகமில்லை. சீமையில் இஸ்லாம்பரவ இது வோர் உற்சாக அடையாளம்.

ஹியூஜ் ஹெர்பர்ட் ஜான்ஸன் என்னும் ஒரு பெரிய கிறிஸ்தவ குரு பலநாள் நமதுசகோதாருடன் தர்க்கஞ்செய்து இஸ்லாமே உண்மையானதென ஈமான் கொண்டார்.

இந்தியாவின் வடபாகத்தில் ஒரு பெரிய உத்தியோகத்திலிருந்தவரும் அதிக பிரபல்லியமானவருமான ஆனரபில் ஸ்பென்ஸர் ராபின்சன் துரையானியவர்கள் தம் புத்திரர் மூவருடன் இஸ்லாமாகி விட்டார். இன்னும் அனேகர் இஸ்லாமாகி வருகிறாகள்.

இவையெல்லாம் நம்சகோதரரின் முயற்சியின் பலனே. நாம் மாத்திரமோ, துன்யாவிலுள்ள எல்லா மூமின் முஸ்லிம்களும் இவரது தீர்மான முயற்சியின் வெற்றியைப்பற்றி இவருக்கு மனப்பூர்வமாய் சோபனங்கூறக் கடமைப்பட்டவர்களா யிருக்கின்றோம். இவ்விஷயங்களைக் கேட்க நமக்கு மிகவும் ஆனந்தமே, அதனுடன் நாம் கவனிக்கவேண்டியதும் ஒன்று அந்த ரிபோர்டில் எழுதப்பட்டிருக்கின்றது அதென்னவெனில்—

"லிவர்பூல் முஸ்லிம்களுக்கு ஒரு மஸ்ஜிதும், மையத்தையடக்கும் கொல்லையொன்றும் அவசியம் வேண்டியன. அதிக கஷ்டத்தோடு இப்போதிருக்கும் மஸ்ஜிதை உபயோகித்துக்கொண்டாலும் மையத்துக்கொல்லை கட்டாயம் வேண்டியது." எனெனில் ஒரு முஸ்லிமையத்தை கிறிஸ்தவர்கள் இடுகாட்டில் தபன்செய்வது இஸ்லாம்மார்க்கப்படி அல்லது கிறிஸ்து மார்க்கப்படி கூடாதகாரியம். ஆகையால் அனுதினம் புதைக்குமிடத்தில் அடக்கவேண்டும். இங்ஙனம் நம் சகோதரர்களையும், சகோதரிகளையும் செய்யப்பொருந்துவது

முஸ்லிம்களுக்கு ஏற்குமா? ஆகையால் அங்கு ஒரு மவுத்து நேரிட்டால் அவர்கள் படும் துயரத்தை யெழுதி முடியாது. இவ்விஷயத்திற்காக உதவி செய்யவேண்டியது மூமின்முஸ்லிமான ஆண்பெண் அனைவர்களுக்கும் வாஜிபாகவிருக்கும்; எல்லா முஸ்லிம்களும் கொஞ்சம் கவனிப்பார்களேயாகில் இது ஒரு பெரிய காரியமல்ல, மனமுண்டானால் வழியுமுண்டாகிவிடும். என்பது தெரிந்தகாரியம்.

நமது தேசத்து சீமான்கள் கல்யாணமுதலிய விஷயங்களில் பெருஞ்செலவு செய்வது தெரிந்த விஷயமே. இப்படிச் செலவுசெய்வதில் ஒரு சிறுபாகம் மீதம் மேற்படி காரியத்திற்காக அனுப்பினால் இருஜஹானிலும் பிரயோசனத்தை யடையலாம்.

இன்னும் மற்றகனவான்களும் தம் சக்தியானுசாரம் அனுப்பினாலும் அந்தக்காரியம் தடையின்றி நடந்துவிடும்.

வியாபாரிகள் தங்களுக்குக் கிடைக்கும் லாபத்தில் ரூபாய்க்கு ஒருதம்படி விதம் சேர்த்து வந்தாலும் பெருந்தொகையாகி விடும்.

அவ்விதமே உத்தியோகஸ்தர்கள் தங்கள் சம்பளங்களில் ஒருரூபாய்க்கு ஒரு பை சேர்த்திட்டாலும் ஒரு தொகையாகிவிடும்.

சிற்றூர்களிலுள்ள நாட்டாண்மைக்காரர்கள் முதலிய தலைமைக்காரர்கள் தங்களூரிலுள்ளவர்களின் சக்திக்கேற்றபடி வாங்கி சேகரித்தாலும் வேலை நிறைவேறிவிடும்.

ஒவ்வொரு மஸ்ஜிதிலும் ஒரு உண்டியில் ஏற்படுத்தி வெள்ளிக்கிழமை முதலியகுத்பா நாட்களில் அவரவர்கள் இஷ்டப்படி போடுவதை சேர்ப்பதுவும் மிகவும் உசிதமே.

எவ்விதமேனும் தங்களிஷ்டப்படி தங்கள் சக்திக்கேற்றது போல் செய்யும் முயற்சியாளர்கள் அந்தப்பணத்தை கேேர மேற்படி முஸ்லிம் [illegible]பையாருக்கு அனுப்புதல் வேண்டும்.

இன்[illegible] அவ்விதம் செய்பவர்களும் செய்ய ஏலாதவர்[illegible] இக்கிதாபை [illegible] செய்யவாவது முயற்சி செய்யவேண்டும். இதன்லாபம் மேற்படிகாரியத்திற்காகவும் ஹதியாசெய்யப்பட்[illegible]ருப்பதால் அந்தக்காரியம் நடக்க அநுகூலமாகும்.

ஆகையால் ஆலிம்கள், மவுல்விகள் ஜனங்களுக்கு நசீகத்துச்செய்யும்போது மேற்படிவிஷயத்தைச்சனங்களுக்குத்[illegible]ன்னுல்முமின்முஸ்லிமான ஒவ்வொரு[illegible]கவனிக்கா திரார்கள். பகீராயினும் ஒருஇராப்பட்டினி[illegible]யனு மிருந்து இந்தக் காரியத்திற்கு உதவிசெய்வா[illegible]களென்பதுநிச்சயம். ஏனெனில் இஸ்லாத்தின் சகோ[illegible]தரவாஞ்சையானது அவ்வளவு மேலானதும் உண்[illegible]யானதுமாம். மேலும்[illegible]ந்த கிதாபை அவரவர்களாயிஎ[illegible] வண்டியில் செலவுசெய்து வைப்பதினால் நாமெல்லோரும் நற்[illegible] யடைய விடமாகும்.

[illegible]கையால் எனது சகோதரர்களே சக்தியுள்ள ஒவ்வொ[illegible]ருவரும் [illegible]க்கிதாபை வாங்குவது மன்றி தங்கள் உற[illegible]சினேகிதர்கள் முதலியவர்களும் வாங்கு

ம்படி முயற்சி செய்வது வாஜிபு. மேலும் சக்தியற்ற உறவினர்களுக்கும் சினேகிதர்களுக்கும் சக்தியுள்ளவர்கள் வாங்கிக்கொடுப்பதினாலும் எவ்வளவோ நன்மை கிடைக்கும்.

இவ்விதம் ஏலாதவர்களும் பிறர் வாங்கும்படி முயற்சியேனும் செய்வதினாலும் அவ்வளவிற் குறையாமலே நன்மை கிடைக்குமென்பதிற் சந்தேகமோ. இதனால் மிஸ்கீனது கருத்தெல்... னில் ஒவ்வொரு முஸ்லிமும் மேற்கண்ட காரிய... தேனும் ஒன்றை அவசியம் செய்யவேண்டு மென்பதே.

மேற்படி நிலம் வாங்குவதற்காக ... லும் மற்றவிடங்களிலுமுள்ள முஸ்லிம்கள் சிறு தொகைப்பணம் அனுப்பியிருக்கிறார்கள். இன்னும் அனுப்பியும் வருகிறார்கள். இந்தியாவில் நிலம்சகாயமாய்க்கிடைப்பதுபோல அவ்விடங்கிடைக்கிறதில்லை. சிறுதுண்டு நிலம்வாங்க பெருந்தொகைப்பணம் வேண்டும்; ஆகையால் இந்த தர்ஜுமாவினால் வரும் லாபத்தில் ஒரு பாகத்... மேற்படி ஸ்தலம் வாங்கவும் மற்றவரைப்பாகத்தை மிஸ்கீனது ஜனன ஊராகிய பாப்புராஜபுரம் என்னும் ஊரில் ஒரு சிறு மத்ரஸா ஏற்படுத்தவேண்டுமென்னும் நோக்முள்ளவனாகையால் அதற்காகவும் ஹதியாச்செய்திருக்கிறேன். இந்தவிஷயத்திற்காக மிஸ்கீனது சகோதரர் முகம்மது நிஜாமுகைதீன் சாயபும் முயற்சிசெய்து வருவதால் மிஸ்கீன்களாகிய எங்கள் ... க்கைகளை அல்லாகுத்தஆலா நிறைவேற்றிவைப்பானாகவும் ஆமீன்.

ஆகையால் இந்த கிதாபை வாங்கி வாசிப்பவர்களும், தங்கள் சினேகிதர்களை வாங்கும்படி மு... செய்பவர்க

களும், இதற்கு உதவிசெய்வோர்களும் மற்றெல்லோரு மான நாம் துன்யாவிலும் ஆகிறத்திலும் தவாபிற்குப்பா த்திரவாளியாகின்றோம்.

இந்த கிதாபின் முஸன்னிபு இதற்கு இஸ்லாம் மார்க்கம் அல்லது இஸ்லாத்தின் அகீதாவென பெயரிட்டிருந்தாலும் குபிராகிய இருளடைந்திருக்கும் சீமையில் இதனால் அந்த அந்தகாரம்நீங்கி இஸ்லாமாகிய நூர் பர[illegible] ஏதுவானதாகையால் "[illegible]ஸுல் இஸ்லாம்" இஸ்[illegible]த்தின் சூரியன் எனப் பெய[illegible]டத் துணிந்தேன்.

மேற்படி காரியங்களில் ஒவ்வொருவரும் அவர்களுக்கியன்றவரையில் உதவிசெய்ய ஆண்டவன் கிருபைசெய்வானாகவும்.

இதை வாசிக்கும் ஒவ்வொருவரும் மிஸ்கீனுடைய அக்கிலும், காளது ரஜபுமீ 12உ வெள்ளிக்கிழமை தாருல் பகாவவையடைந்தவரும் என்னுயிருக்குயிரான சகோதரருமான பா. அகீம் முகம்மது காசிம்சாயபு அக்கிலும், அவர்களது உறவினர்களுடைய அக்கிலும் அவன[illegible] சிநேகிதர்களின் அக்கிலும் மற்றும் எல்லா [illegible] முஸ்லிம்களுடைய அக்கிலும் துஆயேகயிர்" செய[illegible]ம்படி கேட்டுக்கொள்ளும்

ம[illegible]ராஸ்	மிஸ்கீன்
ரஜபு மீ	பா. ஹகீம் முகம்மது
[illegible]பிப்ருவரி மீ	அப்துல்லா

[illegible]லிஷ் இரண்[illegible]ம் பதிப்பின் முகவுரை.

இ[illegible]றிய கி[illegible]ம முதற்பதிப்பு இரண்டாயிரம் பிரதிக[illegible] அச்சிட்டும், எட்டுமாதங்களுக்குள்ளாகவே யெல்லா[illegible]செலவாகி வெற்றியடைந்தபடியினாலும், அப்பிரதிக[illegible] இன்னும் வேண்டுமென அநேகர் அடிக்கடி கேட்டுக்[illegible]காண்டபடியினாலும் இதை யிரண்டாந்தரமும் பதி

ப்பிக்க ஆவசியகமாயிற்று. ஆகையால் இந்நூலை அதிக சாக்கிரதையுடன் பரிசோதித்து, அஸல் பிரதியிலுள்ள ஒருவரியையும் நீக்கவேண்டியதில்லையெனத் தெரிந்து கொண்டாலும் அதில் சொல்லப்பட்டிருக்கிற சில விஷயங்களை அதிகமாய் விவரித்து விளக்கிக்காண்பிக்கவேண்டியது உத்தமமெனத் தெரிந்துகொண்டேன்.

இச்சிறிய கிரந்தத்தின் மூலமுண்டான விருப்பமானது மிகவும் அகண்டது. அதற்குதாரணமாக, ஸ்விட்ஸர்லாண்ட் (Switzerland) ஸெண்ட் பீ[illegible] (St. Petersburg) இ[illegible]ங்கை, பஞ்சாப், கல்கத்தா, பம்பாய், லாஹோர், இந்தியாவின் மற்றும் பற்பலவிடங்கள், மிஸர் (Egypt), ஸ்டிரேயிட்ஸ் ஸெட்டல்மெண்ட்ஸ் (Straits Settlement) இரங்கூன், முதலியவிடங்களிலுள்ள முஸ்லிம்களிடமிருந்து அப்பிரதிகள் வேண்டுமென அநேக கடிதங்கள் வந்துகொண்டிருக்கின்றன. மேலும் மஹாகாருண்யமும் மாட்சிமையுமுள்ள இங்கிலாந்து ராணியும் இந்தியா சக்கரவர்த்தினியுமாகிய விக்டோரியா அம்மா அவர்களாலும், மகத்துவம் பொருந்திய மிஸர் பாஷா (எகிப்துகதீவு) அவர்களாலும் பார்வையிடப்பட்டிருக்கிறது. இன்னும் பர்மா, பார்ஸி, அரபி, இந்துஸ்தானி முதலிய அனேகபாஷை[illegible]ல் மொழி பெயர்ப்பிக்க உத்தரவு கொடுக்கப்பட்[illegible]ருக்கிறது.

இச்சிலவக்கங்கள், குரானேஷரீபில் முன்னறிவித்திருக்கிற விஷயம்நிறைவேறு[illegible]காலம் சமீபி[illegible]கதுரிதப்படுத்த உதவியாமென நான் நம்பு[illegible]றேன்; அந்தவிஷய[illegible]து "அல்லாகுத்தஆலாவின் உத[illegible] வெற்றி[illegible]முண்டாகும்போது, அவனது மார்க்கத்தில் சனங்கள் கூட்டங்கூட்டமாய் வருகிறவர்களாய்க் காணப்படுவார்க[illegible] *" என்பதே. *சூரா. 110

Signed. W.H. [illegible]D.

ஷம்ஸுல் இஸ்லாம்.

இஸ்லாம் மார்க்கமானது பிரிடானிய(இங்கிலீஷ்)அர ... மிகுவிசேஷமாக மிஸ்ரம்பித்திருக்கவும்,இதே ஆளுகையின்கீழ் அனேககோடி முஸ்லீமான குடிகள்ஜீவித்து வரவும்,இம் மார்க்கத்தைப் பற்றியும்,இம்மத சரித்திரத்தைப் பற்றியும், இம் மார்க்கத்தைப் பின் பற்றுவோரை (தாபியீன்களை)ப் பற்றியும், சாதாரணமாய் (இங்கிலீஷ்) சனங்கள் ஒன்றும் அறிந்து கொள்ளாதிருப்பதை நாம் யோசிக்குங்கால் மிகவும் ஆச்சரியகரமாகவிருக்கிறது; இம்மதகபு விஷயத்தில் நமக்குள்ள பெருத்த ஓர் அறியாமையே நாம் மோசம் போக நேரிடுகிறது. இம்மதகபைப் பற்றி தெரிந்து கொள்ளாமையே, நமக்குளுள்ள கபடர்களின் (மாகிரீன்களின்) ஏமாற்று ...க்கு (ஹீலாவிற்கு) நாம் எளிதில் உள்பட காரணமாயி...க்கின்றது ; இன்னும் இசுலாத்திற்கு விரோதமாய் மதல...வராக்கியத்தை(ஜோஷை)யுண்டாக்க அந்த கபடர்கள் மு...னும் போது, அதன் உண்மை யின்னதென அறியாது தப்பு அபிப்பிராயங் கொள்ளும்படியாய், தங்கள்...சுய புத்தி நி...மையை மன மொருவி எளிதில் கைவிடவும் அதுவே காரணமாக விருக்கின்றது. ஆயினும், ஒருவரோடொருவர் சித்த சமாதானத்தோடு ஒத்து வாழ்தலும், தங்கள் வசத்திலுள்ள தீமைகளை விட்டு நன்மைகளை மாத்திரமே பிறர்க்குச்செய்து வருதலுமே மனிதர்களுடைய கடமையாயின்,, இவ்விஷயத்தையும்

இதை யொத்த வேறு விஷயங்களையும் பற்றி நாம் விசேஷித்துப் பேசிக் கொள்ளக் கூடாது.

1839-ஆவது வருஷம் ஸ்பிரிட் ஆவ் தி ஈஸ்ட் (Spirit of the East) என்னும் பெயரால் பிரசுரம் செய்யபட்ட தேவித் அர்குவார்ட் (David Urquhárt) செய்த சாமர்த்தியமான நூலின் முதல் வாலியத்தின் முகவுரையில் இஸ்லாம் மார்க்கத்தின் அகீதாக்களைப் பற்றி மிகவும் சுருக்கமாகவும் நன்றாகவும் சொல்லப்பட்டிருக்கின்றது. அதென்னவெனில், இஸ்லாம் மார்க்கமானது யாதொரு நூதன மத சித்தாந்தங்களை (அகாயதுகளை) யாவது, நூதன ரகசியார்த்தங்களை (வஹீகளை) யாவது, நூதன கட்டளைகளை (அஹகாம்களை) யாவது, கற்பிக்கின்றதில்லை; இதில் * குருத்துவமும் † ஆலய அதிகாரமுங் கிடையாது. இஃது மார்க்க விதிப்படி சனங்களுக்கு ஓர் சட்ட திட்டத்தையும் (ஷரஹையும்,) அரசாங்கத்திற்கு ஓர் ஏற்பாட்டையும் (பந்தோபஸ்தையும்) கொடுக்கிறது; என்பதே.

அர்குவார்ட் என்பவர் சொல்லியது உண்மையே.

---

*குருத்துவம்:—மார்க்கத்தைப்பற்றிய காரியங்களை நேமிக்கப்பட்ட பாதிரிமார்களே செய்யவேண்டுமென்பது, ஹிந்துக்களின் சடங்கு முதலியவைகளை பிராமணர்களே செய்விப்பது போலவாம். இசுலாத்தில் இந்த ஏற்பாடு அவசியமில்லை. எவரேனும் பேதமின்றி செய்து கொள்ளலாம். இது இஸ்லாமாகிய எல்லாருக்கும் சங்க சமத்துவ முடையது.

† ஆலய அதிகாரம்:—(Church Government) வருஷத்திற் கொருதடவை அல்லது அவசியமான காலங்களில் பாதிரிமார்கள் சேர்ந்து மத விஷயங்களைப் பற்றி, மாறுதல், நூதன ஏற்பாடு முதலியன செய்து அவ்விதம் நடத்துவதாம். இஸ்லாத்திற்கு இவ்விதமாறுதலும், நூதன ஏற்பாடும் அவசியமில்லை. அது எப்போதும் காயிமான ஏற்பாடுகளையும் ஒழுங்குகளையும் உடையதாகவே ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது.

என்று அனேகர் ஒப்புக் கொண்டார்கள். பால்கிரேவ் (Palgrave), வாம்பெரி (Vambery), ராலின்சன் (Rawlinson) லேயார்டு, (Layard) ரோலாண்டு, (Rolland), அல்டர்லி யின் ஸ்டான்லி (Stanley of Alderley), டிகோன்ஸ்கி (De Chonski) முதலிய வர்களும்* மற்றவர்களும், இவர் கருத்திற் கிசைந்தவர் களாய் இவர் வாக்கியத்தையே ஸ்தாபித்தார்கள். முஸ் லீமான சனங்களோடு நெருங்கி சந்தித்த ஒவ் வொரு பிரயாணியும் அவர்களுக்கு அனுகூலமாய் சிலவற்றைப் பேச வேண்டியவர்க ளாகவே யிருந்தார்கள். அதுக ளெல்லாம் இப்படி யிருக்க பெரிய பிரிடானிய சனங்க ளின் எண்ணம் மாத்திரம் அசையா நிலை கொண்டிருக் கிறது. ஏனெனில் இங்கிலீஷ் பாஷையைப் பேசும் படி யான சனங்க ளெல்லாம் எந்த வகுப்பைச் சேர்ந்த போதிலும் கிறிஸ்துமதம் ஒன்றையே தொன்று தொட் டு பின் பற்றி வருகிறபடியால் பரம்பரையாய் இவ்விசு லாம் மார்க்கத்தில் யாதொரு நியாயமில்லாமல் தப்பு அபிப்பிராயம்கொண் டிருக்கிறார்கள். இப்படி இருப்பது தங்கள் மதத்தின் முக்கியமாகிய கடமையாக (வாஜிபா க) அவர்களுக்குத் தோன்றுகிறது போலும்.

$ கனன் ஐசக் டெய்லர் (Canon Isaac Taylor) என்பவரைப் போலவே, ஆலயத்தைச்சேர்ந்த ஒரு பெ ரிய மனிதர், ஆலயத்தில் கூடியிருந்த ஒரு கூட்டத்தில், யதார்த்தமாய் தாம் கொண்டிருந்த இஸ்லாம் மார்க்கத் தினது மனோபாவத்தின் உண்மையை தைரியத்தோடு வெளியிட்டார். வெளியிடவே தூஷணைகளாலும், தூர

* இவர்கள் இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ் முதலிய தே சங்களிலுள்ள, ஐரோப்பிய சிரேஷ்ட கல்விமான்கள்.

$ இவர் இங்கிலீஷ் சர்சில் ஓர் பெரிய குரு (பாதிரியார்).

க்கிர்த மத துவேஷத் துர் பாஷைகளாலும் சனங்கள் இவரை எதிர்த்தார்கள்.

1887-ஆம் ஆண்டிலே அக்டோபர் மாதம் 7உ யிலே ஊல்வராம்டன் (Wolverhampton) என்னும் பட்டணத்திலே கானன் டெய்லர் என்னப் பட்டவர் ஆலய கூட்டத் தவர்களுக்குப்பிரசங்கம் செய்ததை மறுநாள் டைம்ஸ் பத்திரிகையில் வெளிப்படுத்தி யிருந்தார்கள். இதைக் கவனமாய் வாசித்து யோசிக்கத் தக்கது. அந்த வியாசத்தை முற்றிலும் வெளியிட எமக்குக் காலமும் இடமும் போதியதா யில்லா விடினும் அதி லொரு பாகத்தை யாவது வெளியிடா திருக்க எமக்கு மனங் கொள்ளவில்லை.

ரெவரண்டு கானன் ஐசக் டெய்லர் என்பார் பின்வருமாறு பிரசங்கம் செய்தார் "பாவஞ் செய்யும் மதங்களில் (இன்திஷார் செய்யும் மார்க்கங்களில்) இஸ்லாம் மதகமானது கிறிஸ்து மதத்தைப் பார்க்கினும் மிகவும் வெற்றி பெற்ற" தெனச் சொன்னார். (இதைச் செவியுற்ற எல்லோருக்கும் திடுக்கிட்டது). கிறிஸ்து மதத்திற் புகுந்த புத்தைவணங்குவோரைப் பார்க்கினும் இஸ்லாம் மார்க்கத்தை கபூல்செய்த காபிரீன்களின் தொகை மிகவிசேஷமா யிருப்பதே யல்லாமல், இஸ்லாம் மதகமிற்குமுன்னே, கிறிஸ்துமதமானது சோபைகுன்றி முஸ்லீம்களை போதனையால் தன்வசப் படுத்த முடியாமல் பின்வாங்கிப்போவது வெட்டவெளிச்சமாகத் தெரிந்திருக்கின்றது. (கிறிஸ்தவர்களாகிய)நாம் அவர்களை வசப் படுத்துவது அசாத்தியமா யிருப்பது மல்லாமல், நமது சொந்தகொள்கையையே கைசோரவிடக்கூடியதாயிருக்கிறது. இஸ்லாம் மார்க்கமானது முன்னமே மூராகோ(மக்ரி

ப்தேசம்)முதல் மஷ்ரிகில் ஜாவா வரையிலும்,(தெற்கே) ஜான்ஜிபார் முதல் வடக்கே சீனதேசம் வரையிலும் பரவி யிருப்பதேயல்லாமல், ஆபிரிகா தேசத்திலும்இராக்ஷஸ(தேவின்)நடையேபோல வெகுதீவிரமாய்ப் பரவுகிறது. இஃது* காங்கோவிலும் †ஜம்பீஜியிலும் இடங்தேடிக் கொண்டது. ஹப்ஷி நாடுகளில் மிகவும் வலிமையுள்ள அகண்டா ராஜ்ஜியம் முழுதும் இப்போது தான் இஸ்லாம் ஆகிவிட்டது. மேற்றிசை சீர்திருத்தமானது (இங்கிலீஷ் அரசாங்கத்தினுலும் இங்கிலீஷ் கல்வியினுலும் உண்டாகும் சீர் திருத்தம்) இந்தியாவி லுள்ள இந்து மத காம்புகளை அழித்துத் திருத்தி இஸ்லாம் மதத்திற்கு வழி செய்து வைக்கின்றது. இந்தியாவிலுள்ள இருபத்தைந்தனா கோடிசனத்தில், ஐந்து கோடிபேர் முன்னமே முஸ்லீம்களா யிருக்கின்றார்கள்; ஆபிரிகாவிலுள்ள சனத்தொகை முழுவதிலும் அரைவாசிக்கு அதிகமாகவே முஸ்லீம்களுண்டு.நாம் விவரிக்க வேண்டியது;இஸ்லாம் மார்க்கம் முதல்முதல் பரவினதைப் பற்றி யல்ல, அது சாஸ்விதமாய் மதம் புகுந்தோருக்குப் பற்றுக்கோடா யிருப்பதைப் பற்றியே. கிறிஸ்து மதமானது, கைப்பற்றுகைக்கு இஸ்லாம் மார்க்கத்தைக் காட்டினும் குறைந்த ஏது (சபபு) உடையதா யிருக்கின்றது.

அதாவது இஸ்லாம் மதகபானது, தன்னைகபூல் செய்தவர்களை வேறெந்த மதத்திலுந் திரும்பாதிருக்கச் செய்வதுமின்றி, என்றென்றும் உறுதியான ஈமானுடன் காயிமாக இருக்கச் செய்கிறது. கிறீஸ்து மதமோ அப்படி யல்ல, தன்னை கபூல் செய்தவர்களை அவ்வளவு உறுதியா யிருக்கச் செய்வது அரிது என்பதே.

---

* ஆபிரிகா கண்டத்தின் தென்மேற்குப் பாகத்தில் காங்கோ நதி தீரத்திலுள்ள தேசம்.

† ஆபிரிகா கண்டத்தின் கீழ்ப்பாகத்தில் ஜாம்பீஜி நதி தீரத்திலுள்ள தேசம்.

இஸ்லாம்மார்க்கத்திற்குத்திருப்பப்பட்ட ஆபிரிக குடிகள் புத்தை வணங்கத் திரும்பிச் செல்வது மில்லை. கிறிஸ்து மதத்தைக் கைப்பற்றுவது மில்லை. கிறிஸ்து மதத்தைப் பார்க்கிலும் இஸ்லாம் மதமே சீர்திருத்த அபிவிர்த்திக்கு (இன்ஸானியத்தை யுண்டாக்க)மிகவும் அனுகூலமாக விருக்கிறது. இஸ்லாம் மதத்தின் பயனை (நதிஜாவைப்) பார்க்க வேண்டில்,மதசம்பந்த மில்லாத பிரயாணிக ளுடையவும், இரா ணுவ உத்தி யோகத்தருடையவும வாக்கு மூலங்களை திருஷ்டாந்தமாக வெடுத்துக் கொள்ளுங்கள். இசுலாம் மதகபானது அபஷிவம்சத்தார்களால் கபூல் செய்யப்பட்ட வுடனே, புத்தை வணங்குதல், ஷைத்தான்களை வணங்குதல், கிரக ஆராதனை, நரபலி, (மனிதர்களை பலியிடுதல்), நரமாமிச பக்ஷணம் (மனிதர்களைக்கொன்று தின்னல்),சிசுவதை, மந்திரோச்சாடனம் (பில்லி சூனியம் வைத்தல்), முதலியன மாயமாய் மறைந் தோடுகின்றன, அவர்கள் (அதபாய்) உடை உடுக்க ஆரம்பிக் கின்றார்கள்; அசுத்தம் (நஜிஸ்) ஒழிந்து, சுத்தம் (தஹாரத்) எற்படுகின்றது. மரியாதையும் யோக்கியதையும் உடையவர்களாகின்றார்கள். தயாளமே மத உரிமையாக (வாஜிபாக) எற்படுகின்றது. மதுபானம் (கட்குடித்தல், சாராயங் குடித்தல்) அரிதாய் விடுகின்றது. சூதாட்டம் கண்டிக்கப் படுகின்றது. தலைவிரி கோலமாய் (ஹிஜாபில்லாமல்) கூத்தாடுதலும், ஹத்தில்லாது ஆண்பெண்கள் (பு)லாகாத்துச் செய்கிறதும்,ஒழிந்து போகின்றன. பெண்களின் கற்புடைமையே (அஸ்மத்தே) பெருத்த சவாபாகக் கருதப் படுகின்றது. சோம்பல் நீங்கி சுறு சுறுப்புண்டாகின்றது. சுய இச்சைக்குப்பதிலாக சட்டமே(கானூனே)யுண்டாயிருக்கிறது.ஒழுங்கு விஸ்தரிக்கிறது.லா

கிரி அடியோட ஒழிந்து போகின்றது. ஜீவஹிம்சையும், அடிமைகளை அநியாயமாய் நடப்பித்தலும், கண்டிக்கப் படுகின்றன. மானுஷீக அநுதாபமும் (ரஹம் செய்தலும்), தயாளத்துவமும் (கரம் செய்தலும்), சகோதரத்துவமும் (அக்வியத்தும்) உள்ளத்தே உதிக்கப் பண்ணுகிறது. பலஸ்திரி விவாகமும் (ஒன்றிற்கதிகம் பெண்சாதிகளை யுடைத்தாயிருத்தலும்), அடிமையை ஆளுதலும் ஒழுங்காக்கப்பட்டு, இவற்றால் விளையும் கொடுமைகளும் தடுக்கப் படுகின்றன. இவற்றிற் கெல்லாம் மேலாக, மஸ்துள்ள வஸ்துக்களை முற்றும் கிரககரிப்பதில் (த க்குச் செய்வதில்) துன்யாவிலுள்ள எல்லா மார்க்க ங்களைப் பார்க்கிலும் இஸ்லாமே உறுதிப்பா டுடையது. ஆனால் ஐரோப்பிய வர்த்தகமென்றாலோ மதுபானாதி பாவங்களை விர்த்தி செய்து சனங்களைத் தாழ்ந்த படித்தரத்திற்கு (தாழ்ந்த தர்ஜாவிற்கு)க் கொண்டு வருகிறது. இஸ்லாம் மார்க்கமோ (அப்பாவங்களை யெல்லாம் ஒழித்து) சனங்களை மேலான தர்ஜாவிற்கு நடத்துகிறது. அதாவது,—தன் மானத்தை (தன்னுடைய இஸ்ஜத்தை)க் காப்பாற்றிக்கொள்ளுதல், உண்மைபேசல், தேக சுசிகரம் (தஹார தேஜிஸ்மானி), (அதபாய்) உடை உடுத்திக்கொள்ளல், எழுதவும் படிக்கவும் திராணியுண்டாக்கல் முதலியகியானத்தை யுண்டாக்குவதே. இஸ்லாமானது துர்க்கிருத்தியங்களை ஒழித்து சீர்திருத்தத்தை விர்த்திசெய்யுந் திராணி மிகவியக்கத்தக்கதே. ஆப்ரிகா (தேசத்திலுள்ளவர்களை கிறிஸ்தவர்களாக்க)பாதிரிமார்கள் மூலமாய் இவ்வளவுபெருந் தொகை செலவழிந்த தென்றும், அருமையான இத்தனை பேர்களின் பிராணசேதமாயிற் றென்றும் நாம் அளவிட்டுச் சொல்ல முடியாது. அப்படி செய்தும் கிறி

ஸ்துமதம்புகுந்தவர்கள் ஆயிரக்கணக்காகவும், இஸ்லாம் மார்க்கத்தை கபூல்செய்தவர்கள் பத்து லக்ஷக்கணக்காகவும் எண்ணப்படுகின்றார்கள். ஆதலால் நாம் கவனிக்க வேண்டியது இந்தமாறுதவிஷயங்களையே; இவை (ஆங்கிலேயர்களுக்கு) மிகுதியும்வருத்தத்தை யுண்டாக்கத்தக்க விஷயங்கள்: இவ்விஷயங்களை யெல்லாம் கவனியாது (கண்ணை மூடிக் கொண்டு) இருப்பது அறிவீனம். இஸ்லாம் மார்க்கமானது ஈஸாயி மதகபுக்கு விரோதமானதல்ல வென்றும், அது அனைப்பங்கு ஈஸாயிமதகபிற்சேர்ந்ததே என்றும் அறிந்து கொண்டே நாம் (பேசவும், எழுதவும்) ஆரம்பிக்க வேண்டும். இப்ராஹீம் அலைகிஸ்ஸலாம், மூஸா அலைகிஸ்ஸலாம் ஆகிய இவர்களுடைய மதகபுகளுடன் ஈஸாயி மதாங்ஸங்கள்பொருந்திய இஸ்லாமானது ஒர் அச்சில்உதித்ததே. ஆனால் இஸ்லாம் மார்க்கமானதுசுயவகுப்பில்மாத்திரம் கவுப்புரிமையுடைய யகூதி மார்க்கத்தைப்போலாகாது, உலக முற்றிலும் அபேதசம்பந்தம் பாராட்டத்தக்கது. (இதன் கருத்தாகிறது யகூதிமார்க்கம் முதலியவைகள் ஒரு கவுமுகளுக்கு அல்லது ஒரு கூட்டத்திற்குச் சொந்தமாயிருந்தது, இஸ்லாமோ துன்யாவி லுள்ள எல்லாகல்கு களுக்கும் (ஆஸாத்) உரிமையுடையது).' முஸ்லீம்கள் *பெருத்த நான்கு பேஷுவாக்களை (உலுல் ஆஜம்களை) அங்கீகரிக்கின்றார்கள். இவர்களோ அல்லாகுத்த ஆலாவின், கலீலாகிய இப்ராஹீம் அலைகிஸ்ஸலாமும், அல்லாகுத்த

---

* முஸ்லீம்களின் அகீதாவாகிறது (உலுல்ஆ[illegible] ஆறுபேர்களாயிருக்கும். மேலே சொல்லப்பட்ட நால்வருடன் ஸபியுல்லாவாகிய ஆதம் அலைகிஸ்ஸலாம், பெருவெள்ளத்தில் பிரதானமாய் பாதுகாக்கப்பட்ட நூஹுநபியுல்லா அலைகிஸ்ஸலாம். அந்த விஷயத்தைக்காணன் டெய்லர் கவனிக்கவில்லை போலும்.

ஆலாவின் கலீமாகிய மூஸா அலைகிஸ்ஸலாமும், ரூகுல்லாவாகிய ஈஸா அலைகிஸ்ஸலாமும், அல்லாகுத்த ஆலாவின் கல்மாராயத்தை இரு ஜஹானிலும், பரவச் செய்ய வந்த ஹபீபுல்லாவாகிய முகம்மது ரசூலுல்லாகி சல்லல்லாஹு அலைகிவ சல்லம் அவர்களுமே.

முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களுடைய இர்ஷாதுகளில் ஈஸாயி மதகபுக்கு எதிரேகமான ஒன்றுங் கிடையாது. இஸ்லாமானது மூஸாயி மதகபிற்கும் ஈஸாயி மதகபிற்கும் மத்திப பாதையில் உள்ளது. ஆபிரிகா, ஷாம் ஆகிய இத்தேசங்களிலிருந்த கிறிஸ்துவ பண்டிதர்கள் அஸலான ஈஸாயி மதகபிற்கு பதிலாய் நிச்சய மற்றதும் கருத்துப் பொருளுள்ளதுமான அஹகாம்களை நூதனமாய் ஸ்தாபித்தார்கள். எப்படியெனில்.—அந்தப் பண்டிதர்கள் காமவிகாரத்தை (தஅயுஷை), பிரமசாரித்துவம் (தஜ்ரீத்), கன்னியாஸ்திரித்துவம் (பாகிராத் தன்மை) ஆகியவைகளினால் தடுக்க முயன்றார்கள். லோகாசாரத்தை யொழித்தலே (துன் யாவைதரக்கு செய்தலே) சுத்தாத்மிதத்திற்கு (குதுஸியத்திற்கு) வழியாகவும், அசுத்தமே (நஜாஸதே) சந்நியாசித்துவத்திற்கு இயல்பாகவும் (காஸாகவும்) நினைத்தார்கள். சாதாரணமாகவே சனங்கள் முஷ்ரிக்குகளாகவும், எண்ணிறந்த ஷுஹதாக்களையும், மலாயிக்குகளையும், பீர்மார்களையும் தொழுது வந்தார்கள். இவ்விதம் ஈஸாயி மதகபானது சீர்குலைந்திருந்தபடியால், ஆபிரிகா, ஷாம் ஆகிய தேசங்களில் சீர்திருத்தப்பட்ட மூஸாயி மதகபு (அதாவது இஸ்லாம்) வெகு துரிதத்தில் பரவி, இத்தியாதி குற்றங்களையும், மூட பக்திகளையும் (தஅஸ்ஸுபாதுகளையும்) ஒழித்துவிட்டது. இ

ஸ்லாமோ பிரயோசன மற்ற மதப்போ நக்கு வைரிய னது. பிரம்ம சாரித்துவமே தேவ பதிக்குச்(தக்வா விற்கு) சிரோபூஷணம் (தாஜ்) என வியந்து பேசுப கொள்கையை அது ஆண்மையோடு மறுதளிக்கத் த கது. இஸ்லாமோ, அது மூலாதாரமான மத சித்தாந் தங்களாகிய அல்லாகுத்த ஆலாவின் பெருமையையும் (அஜ்மத்தையும்),ஏகத்துவத்தையும் வஹதானியத்தை யும் வெளிக்குக் கொண்டுவந்தது. அது சந்நியாசத்து திற்கு பதிலாய் இன்ஸானியத்தையும் வீரியத்தை நிலைநாட்டியது. அது அடிமைகளுக்கு மீட்சியையும், கலருகளுக்குசகோதரவாஞ்சையையும்,(அகவியத்தின் ரிஷ்தாக்களேயும்) மனுஷசுபாவத்தின்(இன்ஸானிபித்ரா த்தின்) உணர்ச்சியையும் ஈந்தது.

இஸ்லாம்மார்க்கத்தின் பாக்கியம் (அளீலத்) ஆவது இச்சையடக்கல் (நப்ஸே அம்மாராவை யடக்கல்),சுசி கரம் (தஹாரத்),கற்பு(அஸ்மத்), நீதி(அதாலத்), மனோ திடம் (இஸ்திக்லால்), தைரியம் (ஷுஜாஅத்) தருமம் (ஸகாவத்), உபசரணை (விருந்தோம்பல்) சத்தியம் (ச தாகத்),அமைதி (தவக்கல், சபூரி) ஆகியஇவைகள், இ ன்னதென சாதாரண சனங்களும் தெரிந்து கைக்கொ ள்ளும்படியானவைகளென்பதே. அவர்களுக்கு முக்கி யமான நால்வகைச் சன்மார்க்கங்களை விருத்தி செய்ய வும், எழுவகை மாபாதகங்களை (கபீராக்களை)ப் பரித் தியாகம் (தாக்கு) செய்யவும் போதிக்கக் கூடும். ம னிதருள் சகோதரத்துவமே சிரேஷ்டமானது (ஆலா வான்) தென்பது கிறிஸ்து சமயத்தவர்கள் மனப்பாவ னையே யொழிய அனுபவத்தில் அவ்வித மல்ல. ஆ னல் இஸ்லாம் மதகமோ உண்மையான சகோதரத்துவ அனுசாரத்தையே கற்பிக்கின்றது. அதாவது முஸ்லீ

களுக்குள் ச[illegible] சமத்துவம் *(முஸ்லீம்களின் மஜாலி ஸில் ஒவ்வொரு[illegible]ரும் மஸாவியான மர்தபாவை யுடைந்தாயிருத்தல்)எ[illegible]பதே. இஸ்லாம்மார்க்கம் கொடுக்கிறபெருத்த பரிதானம் இதுவே. இஸ்லாமாகிய தவுலத்தைப் பெற நசீபுள்ளவர்கள் ஈமான் கொண்ட வுடனே [illegible]தொரு தடையு மில்லாமல் (முஸ்லீம்களின் முஜ்மா[illegible] சேர்க்கப்பட்டு, பதினைந்து கோடி முஸ்லீம் களுக்[illegible] சமமாகிய ருத்பாவை யுடைய ஒருவராய் விடுகி[illegible]ர்கள். கிறீஸ்துமதத்திற் புகுந்த ஒருவன் அவர்கள்சங்கத்தில் சமத்துவ முடையனாகக் கருதப்படுகின்றதில்லை; ஆனால் இஸ்லாத்தை கபூல் செய்த ஒருவனே சத்தியமாக அங்ஙனமே கருதப் படுகின்றான். (கிறீஸ் தவராகிய)நாம், மிகவும் அன்புள்ள என்சகோதரனே! எ[illegible]னருமை ச[illegible]தரனே! என் கடிதங்களிலும், புஸ்தகங்களிலும் அபி[illegible]தமாய் எழுதுவது வழமை. ஆனால் இப்படி காகிதத்தி[illegible] எழுதி யிருப்ப[illegible]த (எட்டுச் சுரக்காயாக) மாத்திரம் காணலாமே யொழிய தினுசார வாழ்க்கையிலோ உண்மையாய் ஒருவருங்காணப் படுவதில்லை. குர்ஆனே ஷரீபானது அஸலாகிய ஜன்னத்தின்(வஅதா)செய்கிறது உண்மையே யாயினும், இவ்வுலக சங்கமத்தியில் அனுபவிக்கும் சுகானுபவங்கள்(துன்யாவின் ஹுகூகுகள்) அதனினும் விசேஷமாக கருதப்படத் தக்கவைகளே.

ஆபிரிகா தேசத்தவரை மனந்திரும்பச் செய்யும்விஷயத்தில் ப[illegible]த்துவம், குடியடிமையாட்சி (குடிகள்

* [illegible]மையாய் மூமினானவர்க ளெல்லாம் தீனில் சகோதரர்கள் தான். ஆனதால் உங்கள் சகோதரர்களுக் கிடையில் ஸுல்ஹு செய்து கொள்ளுங்கள். உங்களுக்கு ரகமத்துச்செய்யப் படுவதற்காக அல்லாகுத்த ஆலாவைப் பயந்து கொள்ளுங்கள். (சகூ-வது ஸூறா அல்ஹுஜ்ராத்)

அடிமைகளை ஆளுதல்)என்னப்பட்ட இரண்டுவித அஞ சார கஷ்டங்கள் நேரிட்டிருக் கின்றன. அநுபவத்தில் மிககஷ்டமானவைகள் இவையிரண்டுமே.இவற்றைமுற்றும் ஒழியப் பண்ணுதல் அசாத்தியமா மெனக் கருதி அலாத்மூஸா அலைகிஸ்ஸலாம் அவற்றை தடுக்காதது போலவே சர்வரே ஆலம் முகம்மதுசல்லல்லாகூ அலைகிவசல்லம் அவற்றைமுற்றுங் கடிய வில்லையாயினும் இவர்கள் அவற்றின் கொடுமைகளை மாத்திரம் தணியப் பண்ணும் படி பெற்றிருக்கிறார்கள். அடிமையாட்சி (எவ்வாற்றானும்)இஸ்லாம் மார்க்கத்தின்(ஜ-ஸ்)சம்பந்தப் பட்டதேயல்ல. அவை இன்றியமையாக் கொடுமையாமென்று மூஸா அலைகிஸ்ஸலாம்அவர்களினாலும்*போலூஸினாலும் விடப்பட்டது. முகம்மது சல்லல்லாகூ அலைகிவசல்லம் அவர்களும் பராமரிக்கையாய் விட்டு விட்டார்கள். அமெரிக்கா கண்டத்திலுள்ள யூனைடெட் ஸ்டேட்ஸ்என்னப்பட்ட தேசத்தில் உள்ள $ஆங்கிலேயர்களுக்குள் அடிமையாட்சி எவ்வளவு சொற்பமாய்ப் பரவியிருக்கின்றதோ அதனினும் மிகு சொற்பமாகவே முஸ்லீம்களின் கைக்கீழ் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. பலபாரித்துவம் மிகவும் கஷ்டமான சங்கை (மஸ் அலா). மூஸா அலைகிஸ்ஸலாமும் அதைத் தடுக்க வில்லை. அது தாவூது அலைகிஸ்ஸலாம் அவர்களினாலும் அனுசரிக்கப் பட்டது; அதைப்பற்றிப் புதிய ஏற்பாட்டிலும் (இஞ்சி

---

*போலூஸ் (St. Paul)ஈஸாயிமதகபை பரவச் செய்ததில் இவர் மஹா வல்லமைசாலி. ஈஸாயிகளினால் கொண்டாடப்பட்ட ஓர் பெரிய (கத்தீஸ்) மகாத்துமா.

$ இவர்கள் சீர்திருத்தப்பட்டார்க ளென்னும் இங்கிலீஷ்காரரின் சகோதரர்களும் கிறிஸ்தவர்களுமே. இவர்களுள்ளும் அடிமை யாட்சி யிருக்கிறபடியால் இசுலாத்தில் சொற்பமாயுள்ளது மாத்திரம் ஆச்சரியமா வென்பது கருத்து.

விலும்) நேரே கண்டிக்கப்பட வில்லை. எல்லையில்லாமல் முறைகடந்து பரவி யிருந்த பலபாரித்துவத்திற்கு முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்கள் எல்லை வகுத்தார்கள். ஐரோப்பாதுருக்கி(ரூம்), எஜிப்து(மிஸர்), ஆல் ஜீரியா, என்னப்பட்ட மிகவும் சீர்திருத்தமுள்ள இஸ்லாம் *தேசங்களில் (பலபாரித்துவம்) அபூர்வமே யல்லாமல் சாதாரணப் பொது வழக்கம் அல்ல. பலபாரித்துவத்தில் எவ்வளவு கெடுதிகளிருக்கின்றனவோ அவ்வளவிற்கும் [illegible] களுமிருக்கின்றன. இது பெண் குழந்தை கொலையை நிவிர்த்தித்ததல்லாமல் பெண்கள் ஒவ்வொருவரும் விதிப்படி (ஷரகின்படி) [illegible]மிக்கப்பட்ட புருஷர்களினால் காக்கப்பட வேண்டு[illegible]மென்றும் ஏற்படுகின்றது.

பலபா[illegible]த்துவ விதி யிருப்பதனுல் இஸ்லாம் பட்டணங்களில் தெ[illegible]ழிலாளிகளான விபசாரிகள் (பாஜா[illegible]க்கள்) ஒருவரேனும் இருக்க ஏது வில்லை. பலபாரித்துவ விதியில்லாததனால் கிறிஸ்துவ நாட்டில் தொழிலாளிகளான விபசாரிகள் அநேகரிருக்க ஏது வாகிறது. ஆகையினுல் இஸ்லாம் நாட்டி லுள்ள மார்க்கமான பலபாரித்துவத்தைக் காட்டிலும், கிறிஸ்துவ நாட்டிலுள்ள முறைகடந்த விபசாரத்துவம் பெரிய ஐப்பல்லவா? நிச்சயமாய் அது ஒரு பெருத்த ஐப்பே.

பலபுருஷகம[illegible] இன்னதென்பதும் இஸ்லாத்திற்கு எள்ளளவேனு[illegible] தெரியாது; ஆனால் கிறிஸ்தவ நாட்டிலு

---

* [illegible]பதினையிரம் முஸ்லீம் ஜனத்தொகையுடைய காண்டி[illegible] என்னும் நகரத்தில் ஒருவரேனும் ஒன்றிற் கதிகம் பெண் சாதிகளை யுடைத்தாயிருந்தார்க ளென்னும் சங்கதியில்லை.

அர்குவார்ட்டினுடைய ஸ்பிரிட் ஆவ் இ ஈஸ்ட் என்னும் கிரந்தத்தின் 2-ம் வாலுயூம், 388-ம் பக்கம்.

ள்ள இரதசிய மார்க்கமான பல புருஷ கமனம், ஓர் பெருத்த சாபத்தை (பலாவை)ப் போல் அந்த நாடுகளைச் சூழ்ந்து கொண் டிருக்கிறது; மேலும் அந்த ஸ்திரிகளுக்கு இழிவையும், புருஷர்களுக்குப் பிணியையும் வருவிக்கின்றது. ஆனல் இஸ்லாத்தில் கண்டிப்பாய் ஷாத்திடப்பட்ட பலபாரித்துவத்தினல் அப்படி நேரிட விடமில்லை.

(ஆணையால் நீதிமுறைகடந்த) பல புருஷ கமனிகளாகிய ஆங்கிலேயர், (நீதிமுறைப்படி) பல ஸ்திரீ விவாகம்செய்யும் முஸ்லீம்கள்மீது(அவதூருகிய) கற்களை எறியத்தக்க யோக்கிதை யுடையவர்க ளல்ல. நமது சகோதரன் கண்ணிலிருக்கிற சிறுதுரும்பை எடுப்பதற்குமுன்னே நமது கண்ணிலுள்ள உத்திரத்தைப்பிடுங்கிக்கொள்வோமாக. முஸ்லீம் பூமியிலுள்ள பல ஸ்திரி விவாகம், அடிமையாட்சி, ஸதாரியைத்துவைப்பது, தலாகு (விவாகபந்தம் ஒழுத்தல்), ஆகிய இந்நான்கும் (ஆங்கிலேயர்கள் கருதுவதுபோல) இஸ்லாம் மார்க்கத்திற்கே உரிய ஐப்பல்ல. ஆங்கிலேய சகோதரர்களால் குடியேறப்பெற்றதும், பேருக்கு மாத்திரம் கிறிஸ்த்துவ நாடு என்று வழங்கப்பட்டதுமாகிய யூனைடெட்ஸ்டேட்ஸ் என்னப்பட்ட தேசத்தில் மேற்கண்ட குற்றங்களெல்லாம் வெகுவாய் ப்ரவியிருந்ததாக நமக்கு ஞாபகமிருக்கிறது.

நம்முடைய நடவடிக்கைகளைப் பார்க்கிலும் முஸ்லீம்களுடைய அக்லாகுகள் பலவிஷயங்களில் மிக விசேஷமானதென்றே நாம் கருதுதல் வேண்டும். அவ்விஷயங்களாவன. சர்வமும் அல்லாகுத்தாலாவின் இராதத்து என்றெண்ணும் எண்ணம் (தவக்கல்), மதுவிலக்

கு, ஸகாவத்து, உண்மை பேசுவது, முஸ்லீமாகி யதங்களுக்குள் ஒவ்வொருவருக் கிடையிலுள்ள சமகா தர வாஞ்சை முதலானவைகளே. இவ்விஷயங்களில் அவர்கள் மாதிரியை நாம் பின்பற்றினால் நமக்கு வெகு லமாயிருக்கும். கிறீஸ்துவநாட்டிற்கு பலாவைப் போ ன்ற முக்குற்றங்கள் (ஐய்புகள்)—கள்ளுண்ணல், சூதா டுதல், விபசாரத்துவம், ஆகியவைகளை இஸ்லாம் கடிந் துவிட்டது. கீழ்த்திசைத் தென்திசை சனங்களைக் கவர்ந்துகொள்ளும் விஷயத்தில் இஸ்லாம் மார்க்கமே ஈஸாயி மதகபிற்கு மிகவும் நெருக்கமானது. (இசுலாம் உண்டாவதற்கு முன் கீழ்த்திசையிலும் தென் திசையி லும் ஈஸாயி மதகபு எப்படி அதி துரிதமாய்ப் பரவின தோ, அவ்விதமே அவ்விடங்களில் இப்பொழுது இசு லாம் பரவுகிறது.) காப்டிக் கிறிஸ்தவர்கள், அபிஸ்லி னா கிறிஸ்தவர்கள் ஆகிய இவர்களின் இழிவான மூட பக்திகளைக் காட்டிலும் இசுலாமே சிறந்தது,"

மேற்கண்ட விதமாய் கானன் டெய்லர் என்பவர்* சர்ச் கான்கிரஸில் செய்த பிரசங்கமானது டைம்ஸ் என் னும் பத்திரிகையில் வெளியிடப்பட்டது. இவர் அபிப் பிராயத்தைப்பற்றி அதே பேபரில் அநேக மும்முர விகி தவாதம் (கடிதங்கள் மூலமாய் பஹஸ்) நடந்தது. இக் கடிதங்களில் அனேகம் மறுபடி பதிக்கத்தக்க யோக்கி தையுடையவைகளேனும், நமக்குக் கிடைத் திருக்கிற இடம் போதாமையால் ஆபிரிகா தேசத்துப் பிரசித்தப் பிரயாணியாகிய மெஸ்டர் ஜோஸப் தாம்சன் (Mr. Jo-

* சர்ச் கான்கிரஸ் என்பது மதவிஷயங்களைக் குறித்துப் பேச, கூடப்பட்ட மஹாநாடு. இந்த மஹாசபைக்கு அநேகவூ ர்களிலிருந்து அனேக பாதிரிமார்கள், குருமார்கள் முதலிய கிறிஸ்துவ போதகாசியர்கள் வருவார்கள்.

seph Thompson)என்பவருடைய கடிதமொன்றையே எடுக்கக் கூடியவர்களாக விருக்கின்றோம். இவர் நவம்பர் 10ஆ எடின்பரோவி லிருந்து அடியிற்கண்டவாறு எழுதுகின்றார்:*

ஜீவியாயிருக்கிற ஒரு மதத்திலுள்ள நன்மைகள் ஒருவனுடைய மதக் கொள்கைகளுக்குப் புறம்பாயும் அ... த்தா... மிருந்தால், அந்த நற்காரியங்களை அவன் ஒப்புக்கொள்வது அல்லது, பாதிரிமார்கள் தங்கள் மதத்தை ப்பரவச்செய்யும் ஏற்பாடுகளின் குற்றகுற்றங்களை நேரே எடுத்துக் காட்டுவது மிக்க அபாயகரமான தென்று எனக்கு அனுபவத்தால் தெரியவருகின்றது. இங்ஙனம் குற்ற குற்றங்களை எடுத்துக் காட்டுவோருடைய நியாயங்கள் மதிக்கத்தக்கனவேனும், ஜனங்களுக்கு நிச்சயமாய் அவை தப்பாயெடுத்துக் காண்பிக்கப்படுவதினால் அவை இகழப் படுகின்றன. ஆகையால், அவ்வித குற்ற குற்றங்களை யெடுத்துக் காட்டுவோர்களின் நியாயங்கள் பெரும்பாலாரால் அறியப்படாமையாய் விடுகின்றன வென்பது நிச்சயம்.

இவ்விதம், கிறிஸ்தவர்களாவது, கிறிஸ்துமதத்தைப் பரவச்செய்யும் அதிகாரிகளாவது (சத்தியம்—அக்; வி ன்னும்) தீபச்சுடரை நேரே நேசிக்கார்கள். ஒருவேளை நேசிக்காதிருக்கக் கூடாவிட்டால் அத்தீபக்கூட்டில் ஏற்படுத்தப்பட்ட திருட்டுத் துவாரவழியாயேனும், அல்லது பலவர்னக் கண்ணாடிகள் மூலமாயேனும் நேசிப்பார்களென்பதை அவர் விரைவில் கண்டுகொண்டார்.

"அதாவது கிறிஸ்து மதத்திலுள்ள ஒருவன் இஸ்லாத்தைப்போல ஜீவியாயிருக்கிறஒருமதகபின்மேன்மைப

---

* இக்கடிதமானது 1887ஆம் நவம்பர்மீ 14உ வெளிப்பட்ட டைம்ஸ் பேபரில் பிரசுரிக்கப்பட்டது.

பாடான நன்மைகளை ஒப்புக்கொண்டாலும் அல்லது கிறிஸ்துமதபாதிரிகள் தங்கள்மதத்தைப பரவச்செய்யும்வழியிலுள்ள குற்றங்களை யெடுத்துக் காண்பித்தாலும் அவன் கிறிஸ்தவர்கள்யாவராலும் தூஷிக்கப்பட்டு,நிந்திக்கப் படுகின்றான். மேலும் அவனுடைய நியாயங்கள் தப்பா யெடுத்துக் காண்பிக்கப்பட்டு,கையாண்டியாக்கி, நகைக்கப் படுகின்றன. ஆகையால், பாதிரிமார்களும், கிறிஸ்தவர்களும், பிறமதத்திலுள்ள நன்மைகளையும், தம் மதத்திலுள்ள குற்றங்களையும் ஒப்புக் கொள்ளார்கள். ஒருவேளை ஒப்புக்கொள்ளும்படி நேரிட்டால் அப்பொழுது எதேனும் சாக்குப்போக்குச் சொல்லி பிறமத நன்மையை தீமையாகவும், தம்மத தீமையை நன்மையாகவும் மாற்றி காண்பிப்பார்களென்றும், ஆக்ஷேபிக்கிறவர்களின் நியாயங்களை ஒருக்காலும் ஒப்புக்கொள்ளார்களென்றும் கண்டு கொண்டார். என்பது கருத்து"

ஆயினும் ஆபிரிகா தேசத்தின் கீழ்ப்பாகம், மத்தியபாகம் மேற்பாகம் ஆகிய இவ்விடங்களிலுள்ள அப்பிகளுக்குள் கிறிஸ்துமதமும் *முகம்மது மார்க்கமும் எவ்விதமிருக்கிறதென கண்ணெதிரே பார்த்த ஒருவித அநுபவ

* முஸ்லீம்கள் தங்களுடைய மார்க்கத்தை முகம்மது மார்க்கமென்று வழங்குகிறதுமில்லை, அவர்கள் தங்களுடைய நபியாகிய முகம்மது சல்லல்லாகூ அலைகிவசல்லம் அவர்களை (சிலர் எண்ணுவதுபோல) வணங்குவது மில்லை. முகம்மது மார்க்கமென்று வழங்கப்படுவ தெல்லாம் அன்னிய மதஸ்தர்களாலேதான். கிறிஸ்தவர்களுள் ஒருவன் தான் போலுஸை, அல்லது செபாஸை, அல்லது அபொல்லாஸைச் சேர்ந்தவனென, கூப்பிடப் படாதென, கிறிஸ்தவர்களால் செண்ட் பால் என்னப்பட்டவர் ஆக்ஷேபிக்கிறது போலவே, முஸ்லீம்களும் தங்களை முகம்மது மார்க்கத்தாரென கூப்பிடுதல் தகாதென ஆக்ஷேபிக்கின்றார்கள்.

முடையவன் ஆனதலால் நான் சொல்வதையே ஏற்றுக்கொள்விக்க அதிக பாத்தியப்பட்டவனு யிருக்கின்றேன்.

ஆபிரிகாதேசத்துக் கீழ்பாரிசத்திலும், நீல் நதிதீரத்திலும், அடிமைவர்த்தக முதலிய மற்றெல்லா இழிகைமையாலும், கொடுமையாலும் அளவறாவிக் கலந்திருக்கும் இஸ்லாம் மதத்தைச் சுயமாய்ப் பார்க்கலாமென்று உமது விகிதர்களில் சிலர் வாதித்திருக்கிறார்கள். இதுவோ கனவிலும் நினைக்கக் கூடாத ஆதரவற்ற வசனம். இவ்வித ஆதரவற்றதும் வெறுங் கட்டானதுமான வசனத்தைவிட வேறொன்றுமே யில்லை யென்று யாதொரு தடையின்றி நிரூபிப்பேன். ஆபிரிகாதேசத்தின் மத்திய கீழ் பாரிசங்களின் அனுபவம் உமது விகிதர்கள் எல்லாரையும் விட எனக்கு அதிகமாயிருக்கிறதென்று நான் சந்தேகமில்லாமல் சொல்லமாட்டேனவன்; எவ்விடங்களில் அடிமைவர்த்தகம் நடந்தேறி வருமோ அவ்விடங்களில் இஸ்லாம் மார்க்கம் பரவச் செய்யப்படவில்லை யென்பது நிச்சயம். மேலும் இஸ்லாம் பரவியது என்பதின் பொருளென்ன வென்றால் உடனே அடிமைவர்த்தகம் அடியோடே ஒழிந்துபோய்விட்டது என்பதே. இதுவே எல்லாவற்றைக் காட்டிலும் மேலான அத்தாக்ஷி.

உமது விகிதர்கள் சொல்வதுபோல், ஆபிரிகாதேசத்துக் கீழ்பாகத்திலும், நீல் நதிதீரத்திலும் அடிமைவியாபாரம் இருப்பதின் காரணம் அவ்விடங்களில் இஸ்லாம் பரவாததே. அப்படி யிஸ்லாம் பரவினால் அடிமைவியாபாரம் அடியோடே ஒழிந்துபோ யிருக்கும். அங்ஙனம் இஸ்லாம் ஏன் பரவவில்லை யெனில்;—

முஸ்கத்திலுள்ள அரபிகள் தங்களுக்குச் சமீபமாயுள்ள அவ்விடங்களில் அடிமை விற்பிடங்களை வைத்திருக்க வேண்டுமென்னும் பிரீதியுடையவர்களாதலால் அங்குள்ள கருநிறமுடைய அப்ஷி சன்களுக்கு இஸ்லாம்மார்க்கத்தைப்போதிக்கிறதில்லை. போதித்தாலோ, அடிமைகளாக பற்றிச் செல்லப் பட்டவர்களை முஸ்லீம் சகோதரர்களாகக் கொண்டாட வேண்டி நேரிடுமே என்றுதான், மேலும் அடிமைகளாக கைக்கொள்ளுங் காடும் அழிந்துபோ மென்றுதான்.

(உதாரணமாக) கிறிஸ்து மதமான து அப்ஷிகளுக்குள் பரவப் பரவ சாராய வியாபாரமும் அதிகரிக்கும் என்னும் நோக்கத்தினலேயே, கிறிஸ்தவ வர்த்தகர்கள் தங்கள் வியாபார விடங்களுக்குப்பாதிரிமார்கள் வர அநுமதிக்கிறார்கள். ஆனால் கிறிஸ்துமதம் பரவுவதினல் சாராய வியாபாரம் குறைவா மென்றாலோ அந்த வர்த்தகர்கள் கிறிஸ்துமத போதகாசிரியர்களை அவ்விடங்களில் (ஒருபோதும்) சேரவொட்டாமல் எதிர்ப்பார்களென்பதை நீங்கள் உறுதியாய் நம்பலாம். (இவ்விதமாகவே, மேற்கண்ட முஸ்கத்து அரபிகள் தங்கள் வியாபாரம் க்ஷீணித்துப் போரு மென்று, அவ்விடங்களில் இஸ்லாத்தைப் போதிக்கிறதில்லை).

இன்னும் ஒருமதத்திலுள்ள ஒருவன் செய்யும் ஓர் தகாத காரியத்துடன் அவன் மதமும் தகாதென வென்று இரண்டையும் ஒன்றுய்க் கலந்து, தர்க்கித்துப்பேசுவது, அவன் நம்மோடுதர்க்கித்துப் பேசாத வரையில் சில வேளை மிக்க சுலபமாயிருக்கும்.

"அதாவது,—முஸ்லீமாகிய ஒருவன் தெரிந்தும் தெரியாதும் அவ்விடங்களில் செய்யும் அடிமை வியாபார

த்தினுல் அவன் மதகபாகிய இஸ்லாமுங் கெட்ட தென்றும், ஆகையால் இஸ்லாம் பரவுவதினுல் அடிஸைம வியாபாரம் அதிகரித்து அத்தேசத்திற்கு மோசம் நேரிடுமென்றும் சட்டங்கட்டி ஒழுங்காய் நீட்டி கல்விபேசுவது கிறிஸ்தவர்களாகிய நமக்கு மிக்க சுலபம். ஆனுல் கிறிஸ்துமதம் பரவுவதினுல் பகிரங்கமாய் சாராயகுடி, சூது முதலியவைகள் அதிகரித்து தேசம் நாசமாய்ப் போக நேரிடுமே யென முஸ்லீம் நம்மை யெதிர்த்து கேட்கும்போது அவர்களுக்கு நாம் மறுமொழி சொல்வது அதிக கஷ்டமா யிருக்கு மென்பது கருத்து."

"மேலும், இஸ்லாம் மார்க்கம் ஆபிரிகா கண்டத்தின் கீழ்ப்பாகங்களில் பரவவில்லை யென்று வெகு மேன்மைப்பாடாக உமதுலிகிதர்கள் எடுத்துக் காட்டியிருக்கின்றூர்கள். அதுமுற்றும் உண்மையே. அவ்விடங்களில் இஸ்லாம் பரவாத காரணத்திற்கு முன்னமே ஒரு உறுதியான நியாயங்காட்டி யிருக்கின்றேன். இதனேடு சமமாகிய இரண்டாவது நியாயமும் ஒன்று இருக்கின்றது. (அவ்விடத்தில் மிகவும் சொற்பமாய் இஸ்லாம் பரவியிருப்பதானது) கிறிஸ்துமதத்தைப் போலவே இஸ்லாம் மதமும் * அன்னிய வம்ஸத்தார்களால் அத்தேசத்தவர்களாகிய அப்ஷிகளின் மத்தியில் கொண்டுவரப்பட் டிருக்கின்றது. இந்த அன்னிய சனங்களோ எல்லா விஷயத்திலும் அப்ஷிகளுக்கு மேலானவர்களே; இவர்கள் அந்த அப்ஷிகளை விவேகமற்ற காட்டுமனுஷர் (வஹ்ஷி)எனப் பாராட்டத்தக்கவர்கள். மேலும் முஸ்கத் அரபிகள், அபஷி சனங்களி னின்றும் ஓர் அகன்ற குடாக்கடலால் பிரிக்கப்பட் டிருக்கின்றூர்

* அதாவது சொந்தமாய் அரபிகளினுல் கொண்டு வரப்படவில்லை என்பது.

கள். அதைக்கடந்து செல்ல அவர்கள் முயல்வதில்லை. இம்மாதிரியாக நாகரீகமுடைய அரபி சனங்களி னின்றும் பிரிக்கப்பட்டிருக்கின்ற முரட்டு அபஷி சனங்கள் அவர்களுடைய நடையுடை பாவனைகளையும் (தரீகாகளையும்), மதகபையும் அடைய முயற்சிக்கிறது மில்லை. இக்காரணங்களினால் ஆபிரிகாவின் மத்திய கீழ்பாரிசங்களில் இஸ்லாம் அதிகமாய்ப் பரவ ஏதுவில்லை.

ஆனால் மத்திய கீழ்பாகத்தில் அடிமை வியாபாரம் இருப்பதின் காரணமாவது, அவ்விடங்களில் முன் சொன்னதுபோல சில முஸ்லீம்க ளிருக்கிறார்களே யல்லாமல் இஸ்லாம் மதகபு பரவவில்லை யென்பதே. அப்படியில்லாமையால் அடிமைவியாபாரம் விர்த்தியடைகின்றதென்று எவ்வளவு சந்தேகமறச் சொன்னேனோ அவ்வளவு நிச்சயமாகவே மேலே (ஆங்கிலேயர்களினால் இழிவாய்ப் பேசப்பட்ட) இந்த இஸ்லாம் மதகபும் (அங்கு வெகு சொற்பமா யிருந்தும்) அவ்விடத்தில் ஓர் பெருத்த காரியம் செய்திருக்கின்றதென்று சொல்லமாட்டுவேன். அதுவோ சாராய வியாபாரத்தைப் பரவவொட்டாமல் தடைசெய்து விட்டதேயாம்.

வர்த்தக விஷயத்தில் எவ்வித தடையும் செய்யப்படாதென்று கிறிஸ்தவ சாதியார்கள் அனேகர் ஆக்ஷேபம் செய்தபடியால், ஜன்ஜிபார் என்னும் நகரத்தில் மாத்திரம் (கிறிஸ்துவ வியாபாரிகளும், கிறிஸ்துவ குடிசனங்களு மிருக்கிறபடியால்) அங்கு சாராய வர்த்தகத்தைத் தடைபண்ண சுல்தான் மன்னிக்கப்பட்டவராய் விட்டார். ஆயினும் இவர் தன் மதகபின் காயிதாவின் நிபந்தனைகளைத் தடையறத் தன் பிரதானநாட்டில் நடத்தும்படி அனுமதிக்கப் பட்டபடியால் அவ்வனுமதியா

னது, எளிதில் கெடுதிக்கு ஆட்படத்தக்க அப்ஷி மனிதர்கள் சாராயங் குடித்தல் முதலிய தீதிவழுவினைத் தடுப்பதற்குப் பெருத்த ஓர் அனுகூலமாக விருக்கிறது. தற்காலம் ஜர்மானிய தேசத்து சீர்திருத்த வழிகாட்டிகள் என்பவர்கள் இங்கிலத்தில் வருத்துப் போக்கா யிருத்தலால், இவ்வனுகூலம் எவ்வளவுகாலம் நீடித்திருக்குமோ பார்க்கவேண்டும்.

(இதுவரையில் கீழ்புற ஆபிரிகா, மத்திய ஆபிரிகா கீழ்ப்பாரிசம் ஆகிய இவ்விடங்களில் இஸ்லாம் ஏன் பரவவில்லை யென்றும், அப்படி பரவாததினால் அங்கு அடிமை வியாபாரம் நடக்கிற தென்றும் நிரூபித்தோம்.)

இனி மேற்புற ஆபிரிகா, மத்திய சவுடான் ஆகியனவைகளைப்பற்றிப் பேசுவோமாக.—

நான் முன்னொரு சமயத்தில் பார்த்துள்ள மேற்புற ஆபிரிகா, மத்திய செளடானென்னுந் தேசங்களிற் சென்றுபார்ப்புழி, முன் சொல்லப்பட்டவைகளுக்குமிகவும் வேறுபாடான நடவடிக்கைகளைக் காண்கின்றோம்.

இவ்விடங்களில் இஸ்லாம்மதமானது உயிருள்ள ஜீவசத்தைப்போல உயிர்த்தோங்கிப் பரவுகின்றது. இஸ்லாமோ, உன்னத வல்லமையினாலும், சொலற்கரிய ஆண்மையினாலும், ஜோஷேமும், மும்முரத்தோடும் தனக்கடிகாளிலிருந்த ஆச்சரியமான வெற்றியோடும் பிறமதத்தினரை தனக்குட்படுத்திவருகின்றது. (அதாவது இஸ்லாத்தின் ஆரம்பத்தில் கூட்டங் கூட்டமாகவும், பவுஜ் பவுஜ்களாகவும், இஸ்லாத்தில் தாக்கிலானதுபோலவே, இவ்விடங்களில் இப்பொழுது கூட்டங் கூட்டமாகவும், கவுமு, கவுமுகளாகவும் இசுலாத்தில் தாகிலாகிறார்கள். என்பது). இஸ்லாமோ, * சைராலியோன் என்னும் பட்ட

* ஆபிரிகா கண்டத்தின் மேற்பாகத்திலுள்ள கரைதுறைப் பட்டணம்.

ணத்தில் பிரசங்கஞ் செய்யப்படுவேதுபோலவே, நரமாமிச பட்சணிகளுள்ள, நைஜர்நதி தீரத்திலுள்ள நாடுகளிலும் சமமாய்ப்போதிக்கப்பட்டு வருகின்றது.* கிறிஸ்து மதத்தை அனுவதித்துப் பேசுவோர் அடிமைவர்த்தகத்தின் தீமையை அவ்விஸ்லாம் மதத்துடன் பிணைத்து,அதைச் சாக்கிட்டு கபடமார்க்கமாய் நன்மைகளையெல்லாம் தீமைகளாக வெகு சாமர்த்தியமாய்ப் புரட்டிக் காண்பிப்பது போலவே, ஆபிரிகாவின் மேற்புறத்தில் இஸ்லாம்மதம் செயம் பெறும் உண்மையை வெகு சாமர்த்தியமாக அடக்கி ஒடுக்கிச் சுருக்கிப் புரட்டிக் காண்பிக்க முயல்கின்றார்கள். மதசம்பந்தமான மார்க்கமாய் (பாதிரிமார்கள் மூலமாய்) வருவதே யல்லாமல் இஸ்லாத்தின் யாதொரு நன்மையும் ஒப்புக்கொள்ள சக்தியற்றவர்களாய், இஸ்லாத்தினது விர்த்தியை ஆபிரிகா தேசத்து ப்பெரிய தீமையென்று பேச முயல்கின்றார்கள்.

ஆங்கிலேயர்கள் தங்கள் வாலப்பருவம் தொடங்கி தங்களுக்குப் போதிக்கப்பட்டது போலவே, முகம்மது மதமானது அக்கினி, வாள் (ஸய்பு) ஆகியவைகளினால் மாத்திரமே பரவச் செய்தல் கூடுமென்று சொல்லுகின்றார்கள்.

---

* அதாவது, பட்டணங்களிலுள்ள சீர்திருத்தப்பட்ட சனங்களுக்கு இஸ்லாத்தின் வகளு செய்யப்படுவது போலவே, நாடுகளிலும், காடுகளிலுமுள்ள சீர்திருத்த மில்லா மூடர்களாகிய வஹஷிகளுக்கும் சமமாகவே இஸ்லாத்தின் தஅவத்துச்செய்யப் படுகிறது. ஆகையினல் இவ்விடங்களில் இஸ்லாம் அதிகம் பரவுகிறது, மேற் சொன்ன, ஆபிரிகா மேற்த்திசையிலும், மத்திய ஆபிரிகா கீழ்த்திசையிலும் மேற்கண்ட விதமாய் இஸ்லாம் பிரசங்கம் செய்யப்படாத படியால் இசுலாம் அவ்விடங்களில் பரவ ஏது வில்லை. பிரசங்கம் செய்யப்பட்டால் எங்குந் தடையின்றி இஸ்லாம் பரவும் என்பது கருத்து.

இதுவொன்றோ, கீழ்க்காணும் விதமாகவும் உத்தே ச படம்பிடித்து எல்லோருக்கும் மனப்பாவனை காண் பித்து மகிழச்செய்து தாங்களும் அகமகிழ்கின்றார்கள். அதாவது,—

கிர்ப்பாக்கியனும், பயமுறுத்தப்பட்டவனுமான ஒரு வு ஷியொருவன் விடவிடென நடுக்கத்தோடு முழங்காலி ட்டிருப்பதாகவும், அவனுக்குப்பின்னால் அவன் சிறு கு டிசை தீப்பற்றி எரிவதாகவும், அவன் மனைவி, மக்கள் கழுத்தில் தளைபூட்டப்பட்டு அடிமையாக்க மூர்க்கர் கள் இழுப்பதாகவும், அந்த அப்வுஷியினெதிரில் ஷைத் தானைப்போன்ற ஒரு அரபி உருவினகத்தியுடன் நின்று கொண்டு "குரானை கபூல் செய், அல்லது மரணதண்ட னையே" யென்று பயமுறுத்துவதாகவும் பாவனை படம் பிடித்து, இவ்வித அநியாயங் கூடுமோ வென பலவிதம் அலங்கரித்துப்பேசுவதிலேயே அவர்களுக்கு மிகவும்பி ரீதி.

முகம்மதுமதத்தை இம்மாதிரியாகவே பரவச் செய்கி றார்களென்னும் பாவனை சிலாசாசனம் போல நம்மவர் களுக்குள் இருக்கின்றது. இந்த எண்ணம் (இப்பொழு துள்ள ஆங்கிலேயர்களின்) முன்சந்ததியால் விளைந்த தென யான் எண்ணுகின்றேன். இந்த எண்ணத்திற்கு முற்றிலும் மாறாக யானே நேரேபார்த்து கவனித்துண ர எனக்கு சமயம் வாய்த்ததற்காக நான் மிகவும் சந் தோஷிக்கிறேன். இவ்விடங்களில் இசுலாமானது மிகு அமைதியோடும், பெருகு ஜயத்தோடும் பரவுகிறதை அதி ர்ஷ்ட வசமாய் யான் நேரே பார்க்க நேரிட்டது. இவ்வி தமிருக்க, பாதிரிகள் சொன்னது முற்றும் விரோதமெ ன்று நிச்சயித்து உணர்த்திக்கிறேன்.

இஸ்லாமானது அமைதியோடும் ஜயத்தோடும் எவ்விதம் பரவி வருகிறதென்றால்:—

முற்காலத்தில் மனம்போனபடி போகத்தக்க ஆட்டிடையர்களாகிய பல்லாநி வம்ஸ முஸ்லீம்களும், தற்காலத்தில் தைரியமும் ஊக்கமுமுள்ள ஹாஸா அல்லது நூபி வம்ஸ முஸ்லீம் வர்த்தகர்களும், ஆகிய அமைதியுடைய உத்தேசமில்லாத இத் தலைவர்களால் மத்தியமேற்புற சௌதானில் இஸ்லாம் மார்க்கம் மிகவும் வெற்றி பெற்று வருகிறது.*

சுமார் சற்றேறக் குறைய பன்னிரண்டாவது நூற்றாண்டில் சாக் ஏரிமுதல் மேற்கு சமுத்திரம்வரையில் முஸ்லீமாகிய ஆட்டிடையர்கள் தம் மார்க்கத்தைப் பரவச் செய்ததால், சென்ற நூற்றாண்டுக்குள் சிறு தொகையினராகிய மகம்மதியர் கூடிய நாடுகள்

---

* "இவ்விடங்களில், கத்தியினாலும், அக்கினியினாலும் பயமுறுத்தி பலவந்தப்படுத்தியே இஸ்லாம் பரவச் செய்யப்படுகின்றதென முன் சொன்னதுபோல ஆங்கிலேயர்கள் பாவனை. இது முற்றுங் கட்டானவார்த்தையேயொழிய சற்றும் நம்பத்தக்கதல்ல. இவ்விடங்களில் முஸ்லீமான இடையர்களினாலும், சாதாரண வியாபாரிகளினாலும் இஸ்லாம் பரவப்படுகின்றது. இவர்களுக்கு சேனை பலமுங் கிடையாது, அதிகார பலமுங் கிடையாது. இவர்களுக்குத் தலைவர்களுங் கிடையாது. எல்லாவற்றிற்கு மேலான பண உதவியுங் கிடையாது. பாதிரிமார்களுக்கோ ஏராளமான திரவிய சகாயமிருப்பதால், காசின் ஆசைகாட்டியும், காலத்திற் கேற்ற கோலமாகவும், தேசத்திற் கேற்ற வேஷமாகவும் தங்கள் மதத்தைப் பரவச்செய்ய முயல்கின்றார்கள். மேற்கண்ட இடையர்களும், சாதாரண வியாபாரிகளும் ரகமானுடைய உதவியைத்தவிர வேறு சகாயமில்லையாயினும் அவர்கள் தங்கள் மதகபாகிய இஸ்லாத்தை மிக்க அமைதியாகவும், உறுதியாகவும் பரவச் செய்து வருகிறார்களென்பது கருத்து."

ஓர் தேன் கூண்டைப் போல் ஒன்றன் பின் ஒன்ருய்ச் சேர்ந்து அந்ததேசம் முழுவதும் இஸ்லாமாகிய நாடுகளாய் மாறி விட்டது. புத்தை வணங்கு மதமாகிய நுகத்தடியை எறிந்துவிட்டு ஏகநாயகனுகிய அல்லாகுத்தாலாவை வணங்குவதற்கு வழிகாட்டியாகிய ஒரு (பேஷ்வா) தலைவன் மாத்திரம் அவர்களுக்குத் தேவையாயிருந்தது. இந்த நூற்ருண்டின் ஆரம்பத்திலேயே(Fodiyo) போடியோ என்னப்பட்ட தலைவன் ஏற்பட்டு விட்டார். இவ்விதம் மிகவும் சொற்ப காலத்திற்குள் ஆச்சரியப்படத்தக்க விதமாய் இசுலாமானது சிறிது சிறிதாய்ப் பரவி ஓர் பெரிய விசாலமான பாக முழுவதினும் இராஜாங்க மதகமாகி விட்டது. ஆகையினுல் இசுலாமானது காட்டு மனிதர்களாகிய மூடாத்துமாக்களை (இன்ஸாணுக்கி) பலத்தையும் சக்தியையும் உண்டாக்கினது அமைதியினுலா? பலவந்தத்தினுலா? நிச்சயமாய் அமைதியினுலேயே.

இன்னும் இந்த பிற்காலங்களில் இஸ்லா மதகலைப் பரவச் செய்வதற்கு முக்கியமானவர்கள் நான் முன் சொன்னது போலவே ஹவுஸா அல்லது நாட்டுத்தகர்களே. இந்த அப்ஷி வர்த்தகர் தன் வர்த்தக ஆதரவினுல் தன் வாழ்மனைக்கு நூறுமைலுக்கு உட்பட்ட விடத்திலுள்ள எல்லா வமிசத்தார் மத்தியிலும் செல்வதுண்டு. வஹுஷிகளை யொத்த அந்த விக்கிரக ஆராதனிகளோடு சொந்த இரத்த பாத்தியத்தை யுடையான் போல கலப்பான்: அவர்களோடு ஒரே வீட்டில் வசிப்பான். அவர்கள் உண்பதைத் தானும் உண்பன். ஆயினும் அவன் செல்லு மிடங்களுக் கெல்லாம் தன்மதகமாகிய இஸ்லாத்தை தன் கூடவே கொண்டுபோவான். இஸ்லாத்தின் அஹ்காம்கள் மிக தெளிவானதும் அதிக

வெளிப்படையானதும் ஆனவைகள். மற்ற மதத்திலுள்ளது போல, மனதிற் கெட்டாததும், உபயோகமற்றதுமான அகீதாக்கள் இஸ்லாத்திலில்லை. புத்தை வணங்குபவர்களாகிய அவனுடைய சகோதரர்கள் அறிந்து உணர்ந்து கைக்கொள்ளத்தக்க அளவு அவன் உணர்ந்திருக்கிறான். இந்தவர்த்தகன் ஒருவருடம், ஆறுமாதம், அல்லது ஒரு மாசம் வரையினும் அவ்விடமிருப்பன். அக்காலங்களில் அவனுடுத்திய ஆடையின் அலங்காரத்தைக் கண்ட அவ்வூரார்கள் அம்மாதிரியே தாங்களும் உடுத்துக்கொள்ள முயல்வார்கள். அவர்கள் தாங்கள் அடையும்படி விரும்பாத யாதொன்றையும் இவனிடம் பார்க்கின்றதில்லை; (அவன் மார்க்கபடி நடக்கிறபடியால் அவன் செய்ப்வைகளெல்லாம் அவர்கள் பிரியப்படத் தக்கவைகளே. வெறுக்கத்க்கவைகளொன்றுமில்லை.) இவனுடைய மதகபில் அவர்கள் விளங்கிக் கொள்ளக் கூடாததொன்றுங் கிடையாது.

இவ்விதம் காகீசம், இஸ்லாம், என்னும் பயிர்களின் விதைகள் சீர்திருந்தாத அநேக காட்டுசாதியார்கள் என்னும் நிலங்களில், ஏராளமாய் விதைக்கப்பட்டு, (அல்லாகுத் தாலாவின் ரகமத்தாகிய மழை வருஷிக்கப்பட்டு, அவை முளைத்து வேரூன்றி தினே தினே செழித்து வளர்ந்தோங்கி வருகின்றபடியால்) சோம்பல் நீங்கி, சுறுசுறுப்புண்டாகி, நூற்றுக்கணக்கான தொழிலாளிகளின் கருவிகளின் முழக்கம் (முன் நிசப்தமாயிருந்த நிலத்தில்) இப்பொழுது எதிரொலிக்கவும்; பஜர், ளுகர், (அஸர்), மக்ரிப், (இஷா) என்னும் ஐந்துநேரங்களிலும் பஹிரங்கமாய் உற்சாகத்தோடு தொழுகைக்காக கூப்பிடப்பட்ட சப்தம் அதாவது பாங்கிேசை முழங்கவும்; முன்னே கட்டைகளுக்கும், கல்களுக்கும் எதி

ரில் குனிந்த தலையானது இப்போது ஏக நாயகனுகிய அல்லாகுத் தாலாவுக்கு ஸிஜ்தா செய்யவும்; முன்னே தன் சகோதரனுடைய சதையை (கடித்து)சப்பி,இரத்தத்தை யுருஞ்சி, ருசிபார்த்த (பல்), உதடு, (நா) முதலியவைகள் இப்பொழுது அந்த ஏகநாயகனுடைய பெருமையையும் (அஜ்மத்தையும்), ரகமத்தையும் மனப்பூர்வமாய் ஒப்புக்கொண்டு அவனையே புகழ்ந்து துதிக்கவும் ஆகிவிட்டன.

இஸ்லாம் மார்க்கத்தை சதாகாலம் இப்படி சமாதானத்தோடு அவ்விடங்களில் பரவச் செய்யாவிடின் ஆச்சரியப்படத் தக்கது வேறென்ன விருக்கின்றது. (ஆங்கிலேயர்களாகிய)நாம் நம்முடைய கிறீஸ்து மதத்தைப் பிறர் கைக்கொள்ளும்படி வலாத்காரம் செய்தல் தப்பென்பதை தெரிந்து கொள்ள நமக்குப் பதினெட்டு நூற்றாண்டுகள் பிடித்ததல்லவா. (இஸ்லாமானது மேம் கண்ட விதமாய் சதாகாலம் அமைதியோடும் ஜயத்தோடும்பரவப்பட்டுவருகிறது. ஆனால் காலாகாலத்திலே இஸ்லாம் பலாத்காரம் செய்யப்படுகிறதென சில கிறிஸ்தவர்கள்எண்ணம். கிறிஸ்தவர்கள் தங்கள் மதத்தினர்களுக்குள்ளேயே ஒருவர்க்கொருவர் செய்துகொண்ட கொடுமைகளையும், கொலைகளையும், அவர்கள் பிறமதத்தவர்களுக்குச் செய்த அநியாயங்களையும் இப்பொழுது நினைக்கவுந் திடுக்கிடுகின்றதே. இப்பொழுது சீர்திருத்தப்பட்டோமென்னும் ஆங்கிலேயர்களாகிய நாம் முன் செய்தவை யெல்லாம் மாபாதகமென்றும், நம்மதத்தை பிறர் கைக்கொள்ள பலாத்காரம் செய்வது கூடாதென்றும் தெரிந்து கொள்ள நமக்கே பதினெட்டு நூற்றாண்டுகள் பிடிக்கவில்லையா?) அப்படியிருக்க ஒரு வைராக்கியமுள்ள கிறிஸ்தவ போதகாசிரியன் ஒரு காலாகாலத்தி

லே தான் பெற்றிருக்கிற மதத்தின் (மேன்மைகளை) பளீலத்துகளை நம்பிக்கை யில்லாத மூட வைராக்கியங் கொண்ட தன் சங்கத்தாளை வலாத்காரம் செய்து போதித்தால் அதில் என்ன ஆச்சரிய மிருக்கின்றது ? (யாதொரு ஆச்சரியமு மில்லை.)

இதுகாறும் இஸ்லாததின் விஷயங்களைப்பற்றி நமது தேசத்தார்கள் எழுதிய வற்றையும் பேசியவற்றையும் சங்கிரகமாய்ச் சொல்லி விட்டோ மாகையால் இப்போது இஸ்லா மதகமானது என்னவென்று அமரிக்கையோடும், அபிமானத்தோடும் யோசிக்க முயல்வோம் ; இங்ஙனம் செய்தபின் அம்மதகம் சாதாரண யோசனைக்கும் நியாயத்திற்கும் ஒத்ததா வென்பதனையும் பார்ப்போம்.

இஸ்லாத்தின் மூலாதார சித்தாந்தம் (இஸ்லாத்தின் அஸலான மஅரிபா, அல்லது கானூன்) ஆனது அல்லாகுத்த ஆலாவின் வஹதானியத்தே. துன்யா உண்டானது முதல் இருந்ததும், துன்யாமுடிவு வரையில் இருக்கப் போகிறதும் இந்த ஒரேயுண்மையான அகீதாவா யிருக்கும். எப்போதும் காயிமானது இந்த அகீதாவே. "உண்மையான நாயகன் ஒருவனே" அக்கென்று கல்பில் உண்மை கொள்வதே, இஸ்லாத்தின் மூலாதாரம் அல்லது அஸ்திவாரம்.

அதாவது "அல்லாவையே தவிர வேறொரு நாயகனேயில்லை" "லாயிலாஹ இல்லல்லாஹு" என்பதே.

இன்னும், "அவனுகிறது, அவன்றி வேறொரு நாயனே யில்லாத அல்லாவாயிருக்கும், மறைவானதையும், வெளியானதையும் அறிகிறவன்; சர்வதயாளன்; அவனுகிறது, அவனன்றி வேறொரு நாயனே யில்லாத அல்லாவா யிருக்கும், ராஜாதிராஜன் (மலிகுன்); நிர்மலன் (குத்தூஸுன்) ; ஈடேற்றங்

கொடுக்கிறவன் (ஸலாமுன்); காவலன் (மூமினுன்); ஆதரிப்போன் (முஹய்மினுன்); தத்துவமுள்ளவன் (அஸீஸுன்) (Azeezun), வல்லமை யுள்ளவன் (ஜப்பாருன்) (jabbarun); மஹாமேன்மை யுள்ளவன் (முதகப்பிருன்); அவனே நாயன்; சிருஷ்டிகருத்தா (காலிகுன்); உண்டாக்குகிறவன் (பாரியுன்); சூரத்தாக்குகிறவன் (முஸவ்விருன்); அழகான நாமங்கள் அவனுக்கே யுண்டு, வானத்திலும் பூமியிலும் உள்ள யாவும் அவனையே புகழ்கின்றன. அவனே சர்வ சக்தியுள்ளவன். அவனே சர்வஹிக்மத்துடையவன் (ஹகீமுன்)".

இந்த அகீதா குர்ஆனெஷரீபில் பலவிடங்களில் தாக்கீதாய் வற்புறுத்தித் திருவுளம் பற்றப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி நிரூபிக்க (குரானே ஷரீபில்) ஆயத்துகளின் மேல் ஆயத்துகள் எடுத்துச்சொல்லலாம். ஆனால் அவற்றுள் சிலவற்றை மாத்திரம் இங்கு எழுதுவது போதுமானது.

அவையாவன :—

"வானங்களையும், பூமிகளையும் ஆறுநாளில் படைத்து பின்பு அர்ஷின்பேரில் தன்னிஷ்டப்படி சரியொத்தானே அந்நாயனே இ[illegible]னாக உங்களுடைய அல்லாவா யிருக்கும்; பகலை, இரவு[illegible]க்கும்படி செய்கிறான்; ஒன்றையொன்று விரை[illegible]ப்பின் தொடர்கிறது; இன்னும் சூரியனையும், சந்திரனையும், நட்சத்திரங்களையும் படைத்தான், அவை யெல்லாம் முற்றிலும் அவனுடைய கட்டளைக்குட் பட்டவைகளே. எல்லா கல்குகளும் எல்லா அதிகாரமும் அவனுடை[illegible]தல்லனவா? (அவனுடையதே ஆகையால் சாக்கிரதையா யிருங்கள்) ஆலத்தார்களின் இறையோனாகிய அல்லாகுத்த ஆலா, அதிக பரக்கத்தையுடையவன்! (அதிக வல்லமை யுள்ளவன்!) (ஆகையால்) நீங்கள் தாழ்மை யாகவும் ரகசியமாகவும் உங்களுடைய நாயக[illegible]க் கூப்பிடுங்கள். ஏனெனில் அதிக்கிரமித்து நடக்கிறவர்களை அவன் நேசிக்கிறதில்லை. பூமியைத் திருத்தியபின் அதில் பசாது செய்யாதே யுங்கள். (அதாவது. ரசூல்மார்களை யனுப்பி பூமியில் பரவி யிருந்த ஷிர்க்கு முதலியவைக

ளை நீக்கி அதைத் திருத்திய பின் அதில் மறுபடியும் ஷிர்க்கு முதலிய பாவங்களைச் செய்து அதை கெடுக்காதேயுங்கள்; என்பது). (அவனுடைய அதாபின்) பயத்துடனும் (அவனுடைய ரகமத்தின்) விருப்பத்துடனும், அவனை கூப்பிடுங்கள். ஏனெனில், திடனாக அல்லாகுத்த ஆலாவுடைய ரகமத்தாகிறது நல்லோர்களுக்குச் சமீபித்ததா யிருக்கும். தண்ணீர் கொண்ட கனமான மேகத்தைக் காற்றுகள் சேர்த்து கொண்டு வருகிறவரையில், தன்னுடைய ரகமத்தாகிய மழைக்கு முன்னே அவையெங்கும் பரவும்படியாய்ச் செய்கிறது அந்த நாயனே. பின்பு, (புற்பூண்டுமுளையாது) உயிரற்ற வூர்களுக்கு அதைவிரட்டி, அங்கு அதிலிருந்து தண்ணீரை யிறக்கி, அதனால் எல்லாவகை கனிவர்க்கங்களையு முண்டாக்குகிறதும் அவனே.'' (சூரா-எ-வது அல்அராப்).

அல்லாகுத்த ஆலாவின் சிபாத்துகளின் விபரம் (குர்ஆனெஷரீபில்) வெகு நேர்த்தியாய் வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. இரண்டாவது சூராவிலிருந்தும், மற்ற சூராக்களிலிருந்தும் சுருக்கமாய் எடுத்து (உதாரணமாக) காட்டப்படும்.

''அல்லாஹு!—என்னும் அவனன்றி வேறொரு நாயனே இல்லை; (சர்வஜீவி) ஹயாத்தானவன், எப்போதும் ஸ்தாயிமானவன் (சாஸ்வதமானவன்); தூக்கமும் நித்திரையும் அவனிடம் அண்டா. வானத்திலுள்ள எல்லா வஸ்துக்களும், பூமியிலுள்ள எல்லாவஸ்துக்களும் அவனுக்கே சொந்தமானவைகள். அவனுடைய உத்திரவின்றி அவனிடத்தில் சிபாரிஷ் செய்கிறவன் யார்? (ஒருவரும் செய்யார்கள்) அவனுடைய கிருபை பெற்றவர்களே செய்வார்கள்). அவர்களுக்கு முன்னுண்டானதையும் பின்னுண்டாவதையும் அறிவான், அவன் சித்தத்திலுள்ளதில் ஒன்றையும் ஒருவரும் அறியார்கள். அவன் எவ்வளவாய் விரும்புகிறானோ அவ்வளவே அறிவார்கள். அவனுடை

ய அரசாங்க மானது வானத்தையும் பூமியையும் பார்க்கிலும் அதிக விஸ்தீரணமானது; இவ்விரண்டையும் பேணிக்காப்பதுஅவனுக்குப் பாரமல்ல. அவன் சர்வ மேன்மையுள்ளவன், சர்வவல்லமை யுள்ளவன்."

இன்னும்—

யார் கைவசம் இராச்சியம் நிலை பெற்றிருக்கிறதோ அவனே (அந்த நாயனே) தூய்மை யானவன் (வலுப்பமானவன்)(பரக்கத் துள்ளவன்;)ஒவ்வொரு வஸ்துவின் பேரிலும்காதிரானவன் (சக்திபெற்றவன்) அவனே. இன்னும் அவன் எப்பேர்க் கொத்தவன் நீங்கள் உங்களுடைய அமல்களில் யார் நல்லவர்க ளென பரிசோதிக்க, மவுத்தையும் ஹயாத்தையும் படைத்தவன். சர்வ சக்தியுள்ளவன் அவனே. பிழை பொறுக்கிறவன் அவனே;இன்னும் அவன் எப்பேர்க்கொத்தவன.—ஏழு வானங்களை ஒன்றின்மே லொன்றாய்ப் படைத்தவன் அவனே; சர்வதயாபரனான அல்லாகுத்த ஆலாவின் சிருஷ்டிகளில் யாதொரு வித்தியாசத்தையுங் காணமாட்டாய், மறுபடியும் உற்றுப்பார் யாதேனும் ஓர் சிறிய கீறலை (குற்றத்தை)க்காண்பாயோ (காணமாட்டாய்).மடக்கி, மடக்கி யிரண்டு தடவை யுற்றுப்பார், (நன்றாய் யோசித்துப்பார்) அது மழுங்கப் பட்டதாகவும், சோர்வடைந்ததாகவும் உன் பக்கமே திருப்பப்படும். (அதாவது குற்ற மற்றதில் குற்றங்கண்டுபிடிக்க முடியாதாகையால் வீணாய் உன் அறிவு கெடுக்கப் பட்டு திருப்பப்படும் என்பது).

அநாதி நித்தியத்துவம் (அபதியத்தையும்), சர்வவியாபகத்துவம், (இல்முல்கைபையும்), சர்வவல்லமை (குத்ரத்தையும்), சர்வக்ஞத்துவம்(ஹிக்மத்தையும்), உடைய அல்லாசுபகானகுத்தஆலாவின் பேரிலுள்ள இந்த

சுபாஹனஹு, அந்த நாயகனுடைய மார்க்கமும், உயிர் வாழ்க்கையின் ஒழுங்கும், எக்காலத்திலும் ஒரு படித்தாயிருக்க வேண்டு மென்னும் உண்மையை நியாயோத்தமாய் (மன்திகின்கா நூன்படி.) உடன்கொண்டு செல்கின்றது. (அதாவது ஏகநாயகனாகிய அல்லாஹுத்த ஆலா, ஆவிருல்கையும், இன்னும் மற்றும் எலலாசிபத்துகளுடையவனு மாகையால் அவன் உண்டாக்கின மார்க்கமும், மனிதர்களின் உயிர் வாழ்க்கையின் கானூனும் ஆகிய இவ்விரண்டும்மாறுதலடையாது. எப்போதும் ஒரே மாதிரியா யிருக்க வேண்டு மென்பது நியாயம். அப்படியே ஆதிகாலந் தொடங்கி இந்த அகீதா உண்டாக்கப்பட்டிருக்கிறதுஎன்பது). அது (லாயிலாஹ இல்லல்லாஹு)என்னும் கலிமாவாயிருக்கும், இந்தமதகயிற்குத் தான்இஸ்லாமென்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இஸ்லாம் என்னும் வார்த்தைக்குக் கீழ்ப்பணிதல் அதாவது,—அல்லாஹுத்த ஆலாவின் கட்டளைக்கும் அவன் பணிவிடைக்கும் முற்றுங் கீழ்ப்பணிதல் என்பது அருத்தமாம்.

ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் உண்டாக்கப்பட்ட போது அல்லா சுபஹானஹுத்த ஆலாவானவன், உண்மையும் திருத்தமுமான இந்த அகீதாவை முதல் முதல் வெளிப்படுத்தின னென மூஸ்லீம்களின் அகீதா. (அவர் காலத்திலும் அவருக்குப் பின் சில காலம் வரையிலும் இஸ்லாமே யிருந்தது.) ஆனால் காலஞ் செல்லச் செல்ல சந்ததிக்குப் பின் சந்ததியுற்பவித்து அவர்களின் முன்னோர்களின் அஸலான இஸ்லாமார்க்கத்தில் வீணான ரிவாயத்துகளும், புத்து வணக்க மூட பக்திகளும் கலக்கப்பட்டு, மார்க்கம் கெட்டு, உலகத்திலுள்ளவர்களில் அநேகர் முற்றும் காபிராகி விட்டார்கள்.

பின்பு (அர்றஹமா னிர்றஹீமாகிய) அல்லா சுபகாஹு தஆலா, தன் அகண்ட கிருபையினால், துன்யாவிலுள்ள சனங்கள் தாங்கள் செய்த பாவங்களினின்று விலகும்படி (தோபா, இஸ்தக்பார் செய்ய) அவர்களுக்கு மறுபடியும் ஓர் சமையம் உண்டுபண்ணமல் அவர்களைத் தண்டிக்க லாகாதென, நூகு அலைகிஸ்ஸலாம் அவர்களை யனுப்பி அவர்களுக்கு வஹீ யிறக்கி சனங்களிடம் போய், அவர்கள் புத்து வணக்கங்களை விட்டு நீங்கி, துன்மார்க்கச் செய்கைகளையும் விட்டு உண்மையான ஏகநாயகனை அல்லா சுபகாஹுத் தாலாவை வணங்க இஸ்லாத்தை கபூல் செய்யும்படி பய முறுத்த கட்டளை செய்தான். ஆனால் நூகு அலைகிஸ்ஸலாம் அவர்களுடைய நசீகத்துகளும், எச்சரிக்கைகளும் அந்த கவுமுகளுக்கு பிரயோசனப் படவில்லை; (கூா, வருஷம் வரையில் போதித்தும் அந்தசனங்கள் நபியவர்களின் நசீகத்துகளையும் எச்சரிக்கைகளையும் கேட்க வில்லை). ஆகையால், பெரு வெள்ளமானது, அந்த குற்றவாளிகளை அடித்துக் கொண்டு போய் விட்டது.

இப்படி நூகு அலைகிஸ்ஸலாம் அந்த கவுமுகளிடம் அனுப்பப்பட்டதையும், அவர்களின் நசீகத்தை அந்த கவுமுகள்கேட்காததையும்பற்றி குர்ஆனெஷரீபில மிகவும் சாங்கோபாங்கமாய் திருவுளம்பற்றப்பட்டிருக்கிறது. (நூகு) என்னும் எக-ஆவது சூராவின் சங்கிரகத்தினுல்(முக்தஸரினுல்)மேற்கண்ட விஷயம் தெரியவரும்.

அல்லாகுத் ஆலா திருவுளமானன்-

"திடனுக நாம் நூகை அவருடைய கவுமுகளிடம் அனுப்பினேம், வருத்தத்தை யுண்டாக்கத்தக்க அதாபு அவர்களுக்கு வருமுன் அவர்களை பயமுறுத்தும் என்று அனுப்பினேம் அவர் தன் கவுமுகளுக்குச் சொன்னர். ஓ என் கவுமுகளே

திடனாக நான் உங்களுக்கு பஹிரங்கமாய் அச்சம் வருத்துகிறவனாயிருக்கும், நீங்கள் அல்லாகுத்தாலாவை வணங்குங்கள், அவனுக்குப் பயப்படுங்கள், என் வார்த்தைக்கு வழிபடுங்கள் அல்லாகுத்தாலா நீங்கள் முன்செய்த பாவங்களை மன்னிப்பான். குறிக்கப்பட்ட தவணைவரையில் பிற்படுத்துவான்; ஏனென்னால் அந்த தவணை வந்துவிட்டால் அப்பொழுது அது பிற்படுத்தப்படாது, நீங்கள் அறிவுள்ளவர்களானால் இதைத் தெரிந்து கொள்வீர்கள் (அதாவது நீங்கள் ஈமான் கொள்ளாவிட்டால் அல்லாவின் அதாபும் நீங்காது) என்று சொன்னார். அந்த கவுமுகள் அவருக்கு வழிபடவில்லை. நூகு அலைஹிஸ்ஸலாம் சொன்னார்கள் - என்னுடைய நாயனே என்னுடைய கவுமுகளை பிராப்பகலாய் ஈமான் கொள்ளும்படி அழைத்தேன்; ஆனால் நான் அழைத்தது அவர்கள் வெறுப்பை அதிகப்படுத்தினதே யொழிய அவர்கள் அதற்குட்படவில்லை.' நீ அவர்கள் பிழையைப் பொறுப்பதாக நான் அவர்களை ஈமானளவில் அழைக்கும்போதெல்லாம் (என் சப்தம் கேளாதபடி) அவர்கள் தங்கள் விரல்களை தங்கள் காதுகளில் நுழைத்துவைத்துக் கொள்கிறார்கள்.) என்னைப் பாராதிருக்கும்படி) தங்கள் வஸ்திரங்களினால் தங்களை மூடிக்கொள்கிறார்கள்; அவர்கள் தங்கள் குபிரிலேயே பிடிவாதமாய் நிற்கிறார்கள். என்னுடைய எச்சரிப்பை அகங்காரமாய் இகழ்கிறார்கள். ஆகிலும் அவர்களை பகிரங்கமாய்க் கூப்பிட்டேன், மறுபடியும் வெளிப்படையாய்ப் பேசினேன், இன்னும் அவர்களை இரகசியமாகவும் ஈமானில் அழைத்தேன், (அப்படியெல்லாம் கூப்பிட்டு) அவர்களுக்கு நான் சொன்னதாவது, ஷிர்கைவிட்டு உங்களுடைய நாயனிடம் பிழை பொறுக்கத் தேடிக் கொள்ளுங்கள், ஏனெனில் அவன் பிழைப் பொறுக்கப்பட்டவன். வானங்களை பூரணமாய் மழைபெய்யும்படி செய்வான்; (அக்காலத்தில் மழையில்லாதிருந்தது.) செல்வத்தையும் சந்ததியையும் அதிகப்படுத்துவான். உங்களுக்குத் தோட்டங்களை யேற்படுத்தி ஆறுகளையும் மூஸ்திப்பாக்குவான்; உங்களுக்கு வந்த கேடென்ன, உங்களை அவன் படைத்தவனாயிருக்கிற பொழுது அல்லாகுத்தாலாவின் மிஹர்பா

னியை நினைக்கிற இல்லை. ஏழுவானத்தை ஒன்றன்மேல் ஒன்ருக எப்படி அவன் படைத்திருக்கிருன், என்று பார்க்கவில்லையா ? அதில் சந்திரனை ஒளியாக்கி யிருக்கிருன். சூரியனை (பகலில் வெளிச்சங் கொடுக்கும்) விளக்காக்கி யிருக்கிருன், இதை பார்க்கவில்லையா ? அல்லாகுத்தால உங்களை மண்ணிலிருந்து நூதனமாய் உண்டாக்கவில்லையா [illegible] லேயே நீங்கள் திரும்பி போகும்படி செய்வான் [illegible] அந்த பூமியிலிருந்தே வெளிப்படுத்துவான். பூமியில விசாலமான பாதைகளில் நீங்கள் நடப்பதற்காக பூமியை உங்களுக்கு விரிக்கப்பட்ட தாக்கினுன். (கவுமுகள் இவர் நசீகத்தைக் கேளாதபடியால்) பின்பு நூகு அலைகிஸ்ஸலாம் சொன்னுர் என்னுயனே திடஞச அவர்கள் எனக்கு மாறுசெய்கிருர்கள்."

இவ்விதம் மாறு செய்தபடியால் மேற்சொன்னபடி குற்றவாளிகளை பெருவெள்ளம் அடித்துகொண்டுபோய் விட்டது. ஈமான் கொண்டவர்கள் மாத்திரம் நூகு அலைகிஸ்ஸலாம் அவர்களுடன் காக்கப்பட்டார்கள். பின்பு இஸ்லாமே யிருந்தது.

பின்பு காலம் செல்லச் செல்ல துன்யாவில் சனங்கள் உற்பத்தியாகி தம் காஸான மார்க்கமாகிய இஸ்லாத்தை விட்டுவிட்டு புத்தை வணங்க ஆரம்பிக்கவே காதிரே முதலகாகிய அல்லா சுபகானுகுத்த ஆலாவானவன், சனங்களை பாபத்தினின்று நீக்கவும், தம் காஸான மார்க்கமாகிய இஸ்லாம் இன்னதென அவர்களுக்குத் தெரிவிக்கவும் சிறந்த இன்னெரு ரசூலை யனுப்பினுன். அவர் இப்ராகீம் கலீலுல்லாவா யிருக்கும். இப்ராஹீம் அலைகிஸ்ஸலாம் அவர்களின் தந்தையும் சந்தேக மில்லாமல் புத்தை வணங்கினவர்தான். அவர் அன்னியதேவுகளுக்கு வழிபட்டதாக கிறிஸ்தவ வேதபுஸ்தகத்தில் சொல்லப் பட்டிருக்கிறது.

அதாவது (Joshua) யோசுவா 24-ஆம் அதிகாரம் 2-வது வாக்கியம்:—

(அப்பொழுது யோசுவா சகல சனங்களையும் நோக்கி, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர்சொல்லுகிறது என்னவென்றால், பூர்வத்திலே உங்கள் பிதாக்களாகிய ஆபிரகாமுக்கும் நாகோருக்கும் தந்தையாகிய தேராக் என்பவர் நதிக்கு அப்புறத்திலே குடியிருந்த போது அவர்கள் வேறே தேவர்களை சேவித்தார்கள். (14-ம் வாக்கியம்). ஆகையால் நீங்கள் கர்த்தருக்குப் பயந்து, உங்கள் பிதாக்கள் நதிக்கு அப்புறத்திலும், எகிப்திலும் சேவித்த தேவர்களை அகற்றி விட்டு, கர்த்தரை சேவியுங்கள் என்பதே. இதனால் தெரியவருகிறதாவது—

இப்றாஹீம் அலைகிஸ்ஸலாம் அவர்களுடைய தந்தை விக்கிரக ஆராதனியா யிருந்தபடியால் அவரும் அவருடைய சிறுவயதில் விக்கிரக ஆராதனியாகவே யிருந்திருக்க வேண்டுமென்பது ஆவசியகம்; இது மேற்கண்ட விதமாய் கிறிஸ்துவ வேதபுஸ்தகமாகிய யோசுவாவில் சொல்லப்பட்டிருப்பது மல்லாமல் *யகூதிகளாலும் அங்கிகரிக்கப்படுகின்றது. ஆனால் அவர் எந்தவயதில் மெய்யான ஏகநாயகனை அறிந்து விக்கிரக ஆராதனையை விட்டுவிட்டார்என்பதைப் பற்பலர்பற்பலவாறுகூறுகின்றனர். அவர்தன்மூன்று¶பிராயத்திலேயே அங்ஙனமாய் விட்டா ரென்று சில யகூதி கிரந்தகர்த்தாக்கள் சொல்கின்றார்கள், மற்றவர்கள் அவர்தன மத்தியவயசிலேயே அங்ஙனமானாரென்கிறார்கள். முக்கியமாய் (மெய்நிமோனைட்ஸ் என்பவரும், ராபி ஆபிரகாம் ஜக்கூத் என்பவரும் அவருக்கு அப்போது ௪0-வயது என்கிறார்கள். இந்தாற்பது வருஷமே குரானேஷரீபிலும் சொல்லப்பட்டிருக்கி

* Joseph, Ant 1. 1.c. 7. Maimon, More Neo. part III. c. 29.

¶ Tanchuma, Talmud, Nedarin, 32; I. et apud Maimo.

றது. இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மார்க்கபேத ப்பட்டஹிஸ்லாவை குரானேஷரீபில் அடியிற்கண்டவா று -சு-வது சூராவில் திருவுளம்பற்றப்பட்டிருக்கிறது. அல்லாகுத்த ஆலா திருவுளமானுன்.

"இவ்விதம் இப்ராஹீம் (தலீல் ஆராய்ந்து) உறுதியா ன மூமீன்களில் ஒருவராகும்படி அவருக்கு வானம், பூ மி ஆகியவைகளின் இராஜாங்கத்தைக்காண்பித்தோம். அவரை யிரவு சூழ்ந்தபோது ஒரு நக்ஷத்திரத்தைக்க ண்டு, "இது என்னுடைய நாயன்" என்றுர். ஆனுல் அந்த நக்ஷத்திரம் மறைந்ததைக் கண்டு, "மறைகிற தே வதைகளை நான் விரும்புகிறதில்லை" என்றுர். சந்திரன் உதயமாவதைக் கண்டு "இது என்னுடைய நாயன்" என்றுர். ஆனுல் அது மறைந்தபோது "திடனுக என் னுடைய நாயன் எனக்கு நேர்வழி காட்டா விட்டால் வழிதப்பிப் போனவர்களில் (நானும்) ஒருவனுகி விடு வேன்" என்று சொன்னுர்.

சூரியன் உதயமாவதைக் கண்டு, "எல்லாவற் றைக் காட்டிலும் இது அதிக பெரிதா யிருக்கிறபடி யால் இது என்னுடைய நாயன்" என்றுர். ஆனுல் அது அஸ்தமித்தபோது அவர் சொன்னுர் "ஒ என்னுடைய கவுமுகளே, நாயனேடுநீங்கள் இணைவைக்கிறீர்களே அ தில் நின்றும் நான் சுத்தமானவன் (விலகினவன்). வான த்தையும்பூமியையும்படைத்த அக்களவில் என்முகத்தை த்திருப்புகிறேன். நான் முஷ்ரிகீன் களிலுள்ளவனல்லன். அப்பொழுது அவருடைய கவுமுகள் அவரோடுதர்க்கஞ் செய்தார்கள். (அப்பொழுது) அவர்சொன்னுர்.

அல்லாவை தவ்ஹீதுசெய்வதில் நீங்கள் என்னிடம் தர்க்கஞ் செய்வீர்களோ? உண்மையாய் தவ்ஹீதளவில்

நாயன் எனக்கு நேர்வழி காட்டிவிட்டபடியால், அவன் எதை நாடுகிறானோ அதற்கே யொழிய நீங்கள் ஷிர்க்கு ஆக்கும் வஸ்துவிற்கு நான் பயப்பட மாட்டேன். ஏனெனில் என்னுடைய நாயன் தன்னுடைய இல்மினால் எல்லா வஸ்துக்களையும் அறிந்து கொள்கிறான். ஆகையினால் நீங்கள் யோசித்துப் பார்க்கிறீர்களா? அல்லாவினால் உங்களுக்கு கட்டளை யிடப்படாததை, அவனுக்கு ஷிர்க்குவைப்பதற்கு நீங்கள் பயப்படாதிருக்க, நீங்கள் அவனுக்கு இணையாக்கும் வஸ்துவிற்கு நான் எப்படி பயப்படுவேன். ஆகையால் நீங்கள் சரியான அறிவுள்ளவர்களானால் அந்த இரண்டு கூட்டத்தில் எது சேமமானது(என தெரிந்துகொள்வீர்கள்). ஈமான்கொண்டு, அந்த அகீதாவுடன் ஷிர்க்குகளை கலக்காதிருக்கிறார்களே அவர்கள் தான் அமன் பெறுபவர்கள். அவர்கள் தான் நேர்வழி காட்டப்படுவார்கள்.”

இப்ராஹீம் அலைகிஸ்ஸலாம் அவர்களுக்குப் பின், அல்லா சுபகானுகுத்த ஆலா, மறுபடியும் இன்னொரு பிரபலமான ரசூலாகிய மூஸா அலைகிஸ்ஸலாம் அவர்கள் மூலமாய், தன் எண்ணத்தை மனிதர்களுக்குத் தெரிவித்தான். மூஸா அலைகிஸ்ஸலாம் அவர்களைப்பற்றி குரானேஷரீபில் திருவுளம் பற்றப்பட்டிருப்பது கிறிஸ்துவ சுவிசேஷத்திற்கு மிகவும் ஒத்திருக்கின்றமையால் அவருடைய கிஸ்ஸாவை நாம் அவ்வளவாய் விஸ்திரித்து (இவ்விடம்) சொல்லவேண்டிய அவசியமில்லை. அப்படிச் சொன்னாலோ நன்றாய்த்தெரிந்த ஒரு கிஸ்ஸாவை மடக்கிச் மடக்கி சொல்வதாய் முடியும். ஆனால் மூஸா அலைகிஸ்ஸலாம் அவர்களால் சொல்லப்பட்ட நசீகத்துகளோ நாம் எல்லாரும் அவற்றை மனதிற்கொண்டு அப்படியே நடக்கக் கூடியவைகளா யிருக்கின்றன. அந்த நசீகத்துகளாவன.—“அல்லாகுத்த ஆ

லாவினிடம் உதவிதேடுங்கள். முஸீபத்து வந்துசேரிட்டபோது பொறுமையாயிருங்கள். ஏனெனில் பூமியானது நாயனுடையது. அல்லாகுத்தாலா தன் அடியார்களுள் எந்த அடியானை விரும்புகிறுனே அந்த அடியானுக்குப் பூமியைக் கொடுக்கிறுன். யார் அவனுக்கு பயப்படுகின்றார்களோ அவர்களே கயிரான காதிமாவை(முடிவை உடைத்தாயிருப்பார்கள்." என்பனவே.

மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குப் பின் உலுல் ஆஜம்களாகிய ரசூல்மார்களில் அஞ்சாவது அலாத் ஈஸாமஸீகு ரூஹுல்லாவாயிருக்கும். அலாத் ஈஸா ரூகுல்லா யாரென்றால் கிறிஸ்தவர்கள் தங்கள் ரக்ஷகரென்று வணங்கி அல்லாகுத்த ஆலாவுக்குச் சமானமானவரென்று கொள்கின்றார்களே அவர்தான். கிறிஸ்துவ நம்பிக்கைக்கும் இசுலாத்தின் அகீதாவிற்கும் நிச்சயமாய் பெருத்த வித்தியாசம் இதுவே. (இஸ்லாத்தின் அகீதாவாகிறது அல்லாகுத்த ஆலாவின் (ஏகத்துவத்தில்) வஹ்தானியத்திலாயிருக்கும். கிறிஸ்தவர்களின் கொள்கையோ திரித்துவத்தில் (தஸ்லீஸில்) ஆயிருக்கும். இத்திரித்துவமோ விநோதமும், சிக்கலும், குழப்பமுமானதுமாம். கிறுஸ்துவவேத சாஸ்திரத்தில் மிக பூரணமாய்கியானமில்லாத சாதாரணகிறிஸ்தவர்கள் தாம் திரித்துவத்தில் (தஸ்லீஸில்) நம்புகிறதாக ஒருவிதகலவரமான நம்பிக்கையையுடைத்தாயிருக்கிறார்கள். இத்திரித்துவம் யாவென வினவினக்கால், பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்றும், அதை விளக்கும்பொருட்டாக "மூன்றுமனிதர் ஆனால் ஒரே கடவுள்" என்றும் பதில் சொல்வார்.

"மூவராயிருப்பினும் ஒரேகடவுள்" என்று சொல்வது பிரத்தியக்ஷ விரோதம்; அதெப்படியெனின்—மூன்

று என்னும் கவனம் உள்ள காலத்தில் ஒன்று என்னும் கவனம் ஒழித்திருத்தல் வேண்டும். ஒன்று என்னும் கவனமுள்ள காலத்தில் மூன்றென்னும் கவனமில்லாதிருக்கும்; ஏக காலத்தில்மூன்று ஒன்ருகவும், ஒன்றுமூன்ருகவும் கவனப்படாது. மேலும் மூன்று என்னுங்கால் ஒவ்வொனறிற்கும்அசம்பந்தத்துவம் உண்டாகின்றது; ஒன்று என்னுங்கால் வேறுகுறிக்க விரண்டாவதுபொருளின்மையால் அவ்வசப்பத்துவங்கிடையாது; ஆதலால் அவ்வசம்பத்துவம் உண்மைக்கு அவ்வசம்பத்துவமின்மை பிரத்தியக்ஷவிரோதந்தான். மூன்று தீபத்லைத ஒன்ருய்ச்சேர்த்தபோது ஒரு தீபந்தானே என்கிருர்கள். மூன்றில் ஒன்ருய்ப்பிரிந்திருந்த தீபத்திற்கும் மூன்றும் ஒன்ருயிருக்கும் தீபத்திற்கும் ஒளி காங்கை பிரமாணம் முதலிய பேதங்களிருத்தலால் ஒன்றே மூன்றும் மூன்றே ஒன்றுய யிருத்தல் பிரத்தியக்ஷ விரோதமே.

(இவ்விதம் திரித்துவத்திலுள்ள) பிரத்தியக்ஷ பரஸ்பர விரோதத்தை விளங்கச் சொல்லும்படி கேட்டால் (தனக்கே யொன்றுந் தோண்டாதவர்களாய்விடைசொல்ல ஏலாது) அது ஒருதேவரகசியமென்று (கடுகடுப்பாய்) விடைவிடுப்பர். அவர்கள் கத்தோலிக்கர்களாகவேனும், ஆங்கிலேய எபிஸ்கோபேலியர்களாகவேனும் இருந்தால் அந்த சுத்த கிறீஸ்துவ* தயாளத்துவமுள்ள அத்தநேஷியமதத்தொகை சித்தாந்தமெ

---

* அததநேஷிய வகுப்பு கிறிஸ்தவர்களின் விளம்பரத்தில் சொல்லப்பட்டிருக்கிற ஒவ்வொன்றையும் நம்பாத ஒவ்வொருவரும் நித்திய நகரத்திற் காளாவார்களென்னும் தீர்மானம் மகாகொடுமையான தாகையால் அதை விகடாலங்காரமாய் சுத்ததயாளத்துவமானதெனச் சொல்லியிருக்கிருர்.

ன்னும் பகிரங்கமான விளம்பரத்தைப் பார்க்கச்சொல்வர். *அந்த விளம்பரமோ கத்தோலிக்குமத முக்கியாம்ஸங்களைக் கூட்டிச்சேர்த்து, யாவர் அந்த மதத்தொகை சித்தாந்தத்தின் ஒவ்வொருவரியையும், வாக்கியத்தையும், அசையையும் அங்கீகரிக்கின்றலரோ அவர்கள் நித்திய நரகத்திற்கு ஆளாவார்களென்று முடிகின்றது. பைரன்என்னப்பட்ட கவிராயர் தமக்கே சுவாபீகமாயுள்ள விகடவாசகதாட்டியுடன் மதப்பற்றுள்ளகிறீஸ்தவர்களுடைய கருத்தை அடியிற்குறித்த கவியில் சாமர்த்தியத்தோடு விகடமாய் வர்ணிக்கின்றார்.

அதாவது :—

"இங்ஙனமாக 'எல்லாவஸ்துக்களும் ச[illegible]க்கப்பட்டிருக்கின்றன. உண்மையான வி[illegible]வாசி[illegible]ய மிகவும் களிக்கச்செய்கின்ற அதனேஷியரு[illegible]டைய சாபத்தை வாசித்தபின்தான் ஒருவர் திருப்தியடைவர். மிகவும் கொடிய பகையாளியின் பொருட்டாகுலும் அந்த சாபத்தை இன்னும் கொடுமையாய்ச்செய்ய முழங்காலிட்டு எ[illegible]னங்கும் ஒருவராலுங் கூடுமோவெனச் சந்தேகிக்கின்[illegible]ன். மேகங்கள் கலையுங்காலத்தில் ஆகாயத்தை அணிபெறச்செய்யும் வானவில்லைப்போல அது (சாபம்) மிகவும் உறுத்தக்கூடியதாகவும் தீர்மானமானதாகவும் அளவிலமைந்ததாகவும் இருப்பதால்' பிரார்த்தனைப்புத்தகத்தை அலங்கரிக்கின்றது", என்பதே.

(இதன்கருத்[illegible]ாவது இந்த அதனேஷியருடைய சாபத்தைப் போன்ற சாபம் வேறெக் கொள்கையிலுங் கி

---

* திரித்துவத்தைப் பற்றி யாதொரு நியாயம் முதலியவைகளை விசாரியாது அப்படியே ஒப்புக்கொள்ள வேண்டுமென்பது கருத்து.

டையாமையாலும் இதனினுங் கொடிதாகிய சாபம் மிகக் கடும்பகையாளியாலும் இட முடியாதாதலாலும் இஃது உயர்வொப்பில்லாச்சாபம் என்பது கருத்து.)

'திரித்துவம்' என்னப்பட்ட வாக்கியம் கிறிஸ்தவர்கள் வேதபுஸ்தகத்திலுள்ள வாக்கியங்களிலெங்கும் காணமுடியாது; ஓர் முழுமுதற்கடவுளுக்கே மும்மூர்த்தித்துவம் உண்டென்னும் நம்பிக்கையை விளக்கும் பொருட்டு இரண்டாவது நூற்றாண்டில் (அவ்வாக்கியம்) ஆலயக் கூட்டத்தாரால் நூதனமாய்ச் சேர்க்கப்பட்டது. இச்சித்தாந்தத்தைவிளங்கஉரைப்பது கிறிஸ்துவ பெரிய வைதிக சாத்திர நூலாசிரியர்களுக்கே அசாத்தியமாகின்றது ;இவ்விஷயத்தைப்பற்றிய அவர்கள் நூலிலெல்லாம் அ[illegible] மொழிகளாகவும் மனதிற்கு எட்டொணாதத[illegible]சயமென்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. டாக்டர் ராபின்சன் என்னப்பட்டவர் தன் எண்ணத்தை இம்மாதிரியாகவெழுதுகிறார்.—"ஓர் ந[illegible]ளசாரியத்தைச்செய்ய மனுஷனுடைய யூகைக்கு எ[illegible]துபோலவும் ஓர் விஷயத்தைப் பூ[illegible]ணமாய்த் தெரிந்துகொள்ளக்கூடாத மனிதஉணர்ச்சிக்கு மேற்பட்டதாயும் உள்ளது நித்தியாசீர்வாதத்தையுடைய திரித்துவத்தின் பரமரகசியமேயாம்".

ராபின்சன்துரைசொல்வது உண்மையாகவும் இப்பேர்க்கொத்த இரகசியம் மனுஷ கியா[illegible]த்திற்கு அதீதப்பட்டிருப்பதும் வாஸ்தவமேயானால் இதைப்போன்ற ஸ்காந்தினேவியர்கள், பூர்வ எகிப்தியர்கள், ஆகியஇவர்களின் புராணங்களும், பலா தூனுடைய சித்தாந்தமும், தற்கால இந்து வைதிக சித்தாந்தங்களும் மனித சிருஷ்டியாகாமல் தேவதாவுபதேசமாதல் வேண்டும். (இ

தமேவா) கிறீஸ்தவர்கள் ஒப்பத்தகாத ஓர் ஏற்பாட்டை நாம் பாவித்ததாகின்றது. இதே விஷயத்தைப் பற்றி இன்னொரு கிரந்தகர்த்தா சொல்லுகிறார்—" இந்த பரிசுத்தமாகிய திரித்துவம் கிறிஸ்தவர்களுக்குள்ளே நம்பிக்கைக்குரியதா யிருக்கிறதேதவிர விசாரணைக்குரியதல்ல. இதுவிஷயத்தில் கடவுள் சொல்லிய தன் பரிசுத்தமொழியை மீறி விசாரிக்க முயலுவதெல்லாம் அபசாரமும், பக்தியைக்கெடுக்கும் அபாயமுமான விஷயம். யோக்கிதையும், விசாரசித்தமும், தேவதாஸீச்வாசமும்உடைய கிறீஸ்தவ சகோதரனே நீ இந்த இரகசியத்தில் பிரவேசிக்க ஒருக்காலும் முயலுதல் கூடாது. விசாரணையும் பரிசோதனையும் இல்லாமல் அதை அப்படியே விழுங்கிவிட [illegible]ம் ; இவ்வாறு நடப்பதற்குமீறி இது சுத்தோ[illegible]கத்தைப்போல திருத்தப்படாத [illegible]திரியா யிருக்கிறதென்று உன் சுயபுத்திமுறனுமானல், அந்த சுத்தோவிக்கமதத்தை ஒருசிறிதும் அலக்கழிக்காமல் அப்படியே ஒப்புக்கொள்ளாத பாதர்களுக்கு எந்த நித்தியநரகம் சம்பவிக்குமோ அதுவே உனக்குக் கதி, என்று திருப்தி யடைந்துகொள்."

கிறீஸ்துமத சுவிசேஷங்கள் முழுதிலும் திரித்துவத்தை நிரூபிக்கக்கூடிய வசனம்(முதல்யோவான் V·7-வது வசனம் ஒன்றுதவிர) வேறொன்றும் நிச்சயமாகவே கிடையாதென்[illegible]னுஞ்சொல் கிறீஸ்தவர்களுக்கு நூதனமாகத்தோன்றும். அந்த ஒரு வசனம் யாதெனின் "பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர், பிதா, வார்த்தை,பரிசுத்த ஆவி,என்பவர்களே, இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்."மறுமுறை பரிசோதிக்கும் கூட்டத்தார் பரிசோதித்த ஏற்பாட்டில் இவ்வசனத்தை அப்படி

யேவிட்டுவைப்பது யோக்கிதையல்லவென்று சொல்லி எடுத்துவிட்டது பிரசித்தியான விஷயம். இந்த பரிசோதனைக்கூட்டத்தார் எந்தஆதாரத்தின் பேரில் செய்தார்களெனின், நியூட்டன் (Newton,) கிப்பன் (Gibbon), போர்சன் (Porson), முதலிய எல்லோரும் தங்கள் நூலில் அவ்வாக்கியம் நூதனசிருஷ்டி என்று ரூபித்திருக்கின்றார்கள். இந்த வசனம் பழயவேதபுத்தகம் யாதொன்றிலும் காணப்படவில்லையென்று (Calmet) கால்மெட் என்பவரே அங்கீகரித்துக்கொள்கின்றார்.

மேது புத்தகத்தை வாசித்துவருபவர்கள் இவ்விஷயத்தை வாசிக்கும்போது தலைவன் ஒருவன் கிறீஸ்துவை கேட்டதற்கு அவரே நேரில்கூறிய மறுமொழியை கவனிப்பார்கள் "நல்லபோதகரே நித்தியசீவனைச் சுதந்தரித்துக் கொள்வதற்கு நான் என்ன செய்யவேண்டும்? ஏசு அவருக்குச்சொன்னதாவது" நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர்தவிர நல்லவர் இல்லையே (லூகா-18-18-19) கிறீஸ்துவே தன்னைத்தானே இம்மாதிரியாக வேறுகுறித்த விஷயத்தில் திருப்தியுள்ளவர்கள் இந்தவசனத்தை நன்றாய்ஊன்றி கவனிக்கவேண்டியது.

கிறீஸ்துமத திரித்துவசித்தாந்தத்தைப்பற்றியும் யேசுவாகிய பெரிய போதகாசிரியருடைய தெய்வத்தன்மையைப்பற்றியும் இவ்வளவு சொன்னோம். இப்போது இந்தவிஷயத்தைப்பற்றி இஸ்லாம் மதக்கொள்கை என்னசொல்கிறதென்று பார்ப்போம். இப்படிச்செய்யவென்றால் குராணெஷரிபில் உள்ள வாக்கியத்தையே மொழிபேதப்படாமல்மேற்கோள்காட்டுவதைவிட நாம் விசேஷம் ஒன்றும்செய்யக்கூடியவர்களல்ல.

ஸூரா - ச - ல் அல்லாகுத்த்ஆலா திருவுளமானுன்.

"மரியமுடையமகன் மஸீஹென்னும் ஈஸாவாகிறது அல்லாவுடைய ரசூலும், மரியமிடம் சேர்த்துவைத்தானே அவனுடைய கலிமாவாயுமிருக்கும். இன்னும் அவனுடைய ரூகுமாயிருக்கும்.

ஆகையினுல் நீங்கள் அல்லாவின்பேரிலும் அவனுடைய ரசூலின்பேரிலும் ஈமான்கொள்ளுங்கள். மூன்றுநாயனென்று சொல்லாதேயுங்கள்; இப்படி சொல்வதை விட்டுவிடுங்கள். இப்படி சொல்வதைக்காட்டிலும் அல்லாவின் வகதானியத்தை கபூல்செய்வதே நன்மை. வணக்கத்திற்குரியவன் அல்லாஒருவனே.

அவனுக்குப்பிள்ளையுண்டென்று சொல்லுவதில்லென்றும் அவன் தூய்மையானவன். (அவனுக்குப் பிள்ளையின் அவசியமென்னவிருக்கிறது).

வானத்திலும் பூமியிலுமுள்ள யாவற்றும் அவனுக்கே சொந்தமானவைகள். வேலையை நிறைவேற்ற அல்லா போதுமானவன். மஸீகு அல்லாவின் அப்தாகிறதினுல் அவருக்கு ஒரு அவமானமுங்கிடையாது.

நீங்கள் தப்பிப்போகாதபடி அல்லாவானவன் தன்னுடைய கட்டளைகளையெல்லாந் தெரியப்படுத்துகிறுன்; அல்லாவிற்கு எல்லாந்தெரியும்.

(ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுப்பின் அஸலானமதப் பலவிதமாய் மாற்றப்பட்டு முஷ்ரிக்குகள் அதிகம் பரவிவிட்டபடியால்) அர்றகுமா நிற்றநீமாகிய ஏகநாயகனுனவன, ரகமத்துள்ளில் ஆலமீன், அகமத்முஜ்தபா, முகம்மத்முஸ்தபா, காதிமுல் அன்பியாவாகிய ஜனுப் முகம்மத் ரசூலுல்லாகிசல்லல்லாகூ அலைகிவசல்லம்அ

ர்களை யனுப்பினான். இவர்களே உலுல்ஆஜம்எல்லோர்
களிலும் மஹாமேன்மையுள்ளவர்கள், எல்லா நபிகளுக்
கும் நாயகமான வள்ளல். இவர்களுக்குப்பின் கியாமம்வ
ரையில் வேறொருநபியுமில்லை. இதுவே முஸ்லீம்களி
ன் அகீதா. நபிஸல்லல்லாகு அலைகிவஸல்லம் அவர்கள்
கிறிஸ்து ௫௱௭௰௧ ஆண்டு ஏப்ரல் மாதம் ௰-தி
கதி திருமக்கமாநகரத்தில்பிறந்தார்கள். அவர்கள் கீர்த்
திபெற்ற குறைஷ்வங்கிஷத்திலுள்ளவர்கள். இது அரபு
தேசமு[illegible]திலும் அதிகசெல்வாக்குள்ளதும் கௌரவ
முள்[illegible]மான வங்கிஷம். இது இப்ராஹீம் அலைகிஸ்ஸ
லாம் அவர்களின் புத்திராகிய இஸ்மா[illegible]ல் அலைகிஸ்ஸ
லாம் அவர்கள் சந்ததியிலுள்ளது; அரபு[illegible]தசத்து புத்
துவணக்க மஅபதாயிருந்த * கஃபாவின் அ[illegible]ம் [illegible]பி

---

* முகம்மது சல்லல்லாகு அலைகிவச[illegible]லம்அவர்களுடை
ய காலத்திற்கு முன் கஃபாவானது அரபிசாபிர்கள் புத்தை
வணங்குந்தலமாகவும் அவர்கள்யாத்திரை ஸ்தலமாகவுமிருந்த
து; ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு புத்தைவணங்கும்படி அர
பிவருஷத்திற்குச் சரியாய் ௩௬0 புத்துகளிருந்த[illegible] கஃபாவா
னது இப்ராஹீம் அலைகிஸ்ஸலாம் இஸ்மாயீல அலைகிவாஸல்
லாம் இவர்களினால் கட்டப்பட்டதென சொல்லப்பட்டிரு
க்கிறது. ஆயினும் நிச்சயமானசரித்திரத்தினால் தெரியவருகிற
தாவது, சுலைமான் அலைகிஸ்ஸலாம் அவர்களினால்கட்டப்பட்
ட பயிதுல் முகத்திஸிற்கு ௲௩- வருஷத்திற்குமுன் அல்
லது கிறிஸ்து ௨000 வருஷங்களுக்கு முன் கட்டப்பட்டிருக்
[illegible]து. இதிலுள்ள புத்துகள் நீக்கப்பட்டும் மறைக்கப்பட்டும்
உண்மையான ஏகநாயனுடைய வணக்கத்திற்கு நேமிக்கப்பட்
டும் இந்தக் கட்டிடம் இன்னும் நிலைபெற்று நி[illegible]
மச்சானது இலோமரத்தூண்களினால் சுமக்கப்படுகிறது. இத்
தூண்களுக்கிடையில் வெள்ளி வி[illegible]க்குகள் தொங்குகின்ற
ன, மச்சின்மேல் விழும் மழைத் தண்ணீர்ஓட பொன்குழாய்
வைக்கப்பட்டிருக்கிறது. பொன் சரிகைகளினால் அலங்கரிக்
கப்பட்ட இந்திரவர்ணசித்திரப்பட் டாடையினால் செய்யப்
பட்ட பர்தாக்களினால் அதன் சுவர்களின் வெளிமூடப்பட்

நாயகம் அவர்களின் பாட்டனார் அலாத் அப்துல் முத்தலிபு அவர்கள் வசமிருந்தது. நபியவர்களின் தகப்பனாரவர்கள் பெயர் அலாத் அப்துல்லாவாயிருக்கும். தாயாரவர்கள் பெயர் பீபீ ஆமினாவாயிருக்கும். அலாத் பீபீ ஆமினா அவர்கள் நபிநாயகம் அவர்களை ஹாமிலாவாயிருக்கும் போதே அலாத் அப்துல்லா அவர்கள் மவுத்தாகிவிட்டார்கள். நபிநாயகம் அவர்களின் ஆறும்வயதில் அலாத் பீபீ ஆமினா அம்மா மவுத்தாகிவிட்டார்கள். பின்பு நபிநாயகம் அவர்களை தங்கள் சிச்சாவாகிய அபூதாலிப் [illegible] பிள்ளையைப்போலவே வளர்த்து வந்தார்கள். ([illegible]யும் பயிர் முளையில் தெரியும்) என்பதுபோல நபிநாயகம் அவர்களின் பால்[illegible]த்திலேயே யிவர் ஒரு பெரிய ஹாதி (வழிகாட்டி) [illegible]வாரென்னும் அடையாளங்கள் வெளிப்பட்[illegible] நபிநாயகம் அவர்கள் மிகவும் [illegible]மையான தேகசுபாவமுடையவர்கள். தேகவருத்தங்களையுணர்வதில் அதிககூர்மையான உணர்ச்சியுள்ளவர்கள். நபியவர்களின் பால்யத்திலேயே யெவ்விதவிஷயங்களையும் ஆராய்ந்து அதன் உண்மையை அறிவதில் மிகவும் நுண்ணியவரான உள்ளமுடையவர்களென விளங்கினது. அப்போ[illegible]ம் தாங்கள் தனித்திருப்பதிலேயே பிரியம் தாங்கள் சிறு

டிருக்கின்றன. இந்த பர்தாக்கள் வருஷாவருஷம் புதிதாய் செய்யப் படுகின்றன.

பிரசித்தப் பிராணியாகிய (பர்கஹார்ட்) (Burckhard) என்பவர் கஃபாவின் தற்காலஸ்திதியைப் பற்றிச் சொல்கிறதாவது:—

கஃபாவின் முழுகாட்சியின் பலனும், வெள்ளி, பொன் ஆகிய இவைகளின் மிகுதியும், விளக்குகளின் பிரகாசமும், முழந்தாளிட்டிருக்கிற (சஜ்தா, விலிருக்கிற) ஜனத்தொகையும் நாம் உத்தேசிக்கக்கூடும் எந்த காட்சியையும் அதிகரித்தே யிருக்கின்றன.

வயதாயிருக்கையில் ஒருபிள்ளை தங்களைத்தன்னுடன்வி ளையாடக் கூப்பிட்டான்; அதற்கு அவர்கள் "லஹூ" வாகிய வீணனவிளையாட்டுகளைப்பார்க்கிலும் மேலான காரியங்களைச்செய்வதற்காகவே மனிதர்கள் படைக்கப் பட்டிருக்கிறார்கள்" என்றார்கள்.

அவர்களின் (தஸவ்வுரின்சக்தி) கற்பனாசக்தி மிகவும் ஆச்சரியப்படத்தக்கது. (எல்லாவிஷயங்களையும் யூகிக் கத்தக்க) அதிக மேன்மையான(மூனவ்வரான) (கல்பை யும்) மனதையும், லதீபானதும், (உசிதமானதும்) மு ஸப்பாவானதும் திருத்தமானதும் ஆன கருத்தையும் உடையவர்கள். மிகவும் மனதிற் கினிமையானவும் (ம க்பூலானவும்), அன்பானவும் குணமுடையவர்கள். கு ழந்தைகளின் மேல் அதிகப்பிரியமுள்ளவர்கள்; தரும ஞ்செய்வதே (கயிராத்து கொடுப்பதே) தங்கள்வழமை; தன்னயமறுப்புள்ளவர்கள்; அதாவது தன்னுடைய பா பிராக்களையே பெரிதென்று பார்க்கிறதில்லை. பிறர்பிர யோஜனத்தின் பேரிலேயே நோக்க முடையவர்கள்,பே ச்சுவார்த்தைகளில் ஒருபோதும்பாசாங்கு செய்கிறதே யில்லை. அதிலின்படி அவர்கள் உயரத்தில் சமரசமான வர்கள். மகிமையுள்ளதும், முஷர்றபானதும், அதிகார த்தோற்றமுடையதுமான சூரத்துள்ளவர்கள். *நபிஸல் லல்லாகூ அலைகிவசல்லம் அவர்களுக்கு ஒருவரும் கல் வி கற்றுக்கொடுக்கவில்லையென்பதை யாதொருசந்தேகமி ன்றி யாவரும் ஒப்புக் கொள்ளல் வேண்டும். புக்ககப் படிப்பு (அதாவது எழுதுதல், புஸ்தகத்தை வாசித்தல) என்று நாம்சொல்லுகிறோமே அந்த கல்வி அவருக்கு த் தெரியாது; அதாவது அவருக்கு எழுத்வும் படிக்க வும் சிறிதளவேனுந் தெரியாது; (ஆகையினால்தான் அ

* Islam Its Genius and Mission.—Lake.

ல்லா ஸுத்தஆலா அவர்களுக்கு அந்தரங்கம் பகிரங்கமான எல்லா இல்முகளைக் கொடுத்திருந்தும் அவருக்கு நபியேஉம்மி யென்று பேர்; இந்த விஷயத்தைப்பற்றி குரானேஷரீபில்-உகூ-வது, ஸூராவில் அல்லா ஸுத்தஆலா திருவுளமாகியிருக்கிறான். "ஓய்!முகம்மதே,இதற்குமுன் நீர் ஒன்றையும்வாசிக்கவும் மாட்டீர் அல்லது அதை உம்முடைய வலதுகையினால் எழுதவும்மாட்டீர்."

அவருக்கு நாற்பது வயதானபோது இதற்குமுன் வருஷா வருஷம் வழமையாய் தாம் போவதுபோல இப்போதும் மக்கமா நகரத்தி லிருந்து ஒரு மணிநேர நடையுள்ள ஹிராமலையிலுள்ள இருட்டான ஒரு குகையினுள்போய், மார்க்க விஷயங்களைப் பற்றிச் சிந்தித்தவராய்த் தனியாய் ஒருமாதம் அங்கிருந்தார்கள். இவ்விதம் அந்த குகையில் இருக்கும்போது ரமளான் மாதத்தில் ஒருநாள்* தன் போர்வை யினால் தன்னைப் போர்த்துக் கொண்டு நிசப்தமாய் விழித்திருக்கையில் பூரணமான இராத்திரியில் ஒரு சப்தத்தைக் கேட்டார்கள்.

ஆனால் அந்த சப்தத்தைக் கேட்க பயந்தவர்களாய் அதைக் கேளாதிருக்கும்படி முயற்சி செய்தும், ஒன்றும் பிரயோசனப் படவில்லை. மறுபடியும் அந்த சப்த முண்டாகவே அது தங்கள் காதில் விழாதிருக்கும்படி முன்னிலும் அதிகமாய்ப்பல முயற்சிகள்செய்தும் ஒன்றேனும் பிரயோசனப் படாமற் போயிற்று. ஆனால் தங்கள் முபாரக்கான தேகத்தின்மேல் பெருத்தபளுவான சுமை வைக்கப்பட்டதாகவும், சக்ராத்தினது வேளையின் ஒடுக்கத்தில் மூச்சுவிடுவது போலவுமிருந்தது. மூன்றுந்தடவையும் அந்த சப்தத்தைக்கேட்ட

*ரமளான் மாதம் உசு-ஆம், இரவு.

07 MAY 48

போது, அதிகம் பயந்தவர்களாய் அது தங்கள் காதில் வீழாதிருக்கும்படி முன்னிரண்டு தடவைகளைப் பார்க்கிலும் அதிகமாய் பிரயத்தினப்பட்டும் கொஞ்சமும் பிரயோசனப் படவில்லை. ஆகையால் தங்கள் முபாரக்கான சிரசிலிருந்த போர்வையை நீக்கினார்கள். நீக்கின தக்ஷணமே தாங்கக்கூடாத காந்தியுடனும் பிரகாசத்துடனும் நூரின் வெள்ளமானது தோற்றவே அதைப் பார்க்க சக்தியற்றவர்களாய் மூர்ச்சையாகி விட்டார்கள். சிறிது நேரஞ்சென்று மூர்ச்சை தெளிந்தபின், இன்ஸானுடைய சூரத்தாய் நிற்கிற ஒரு மலக்கைக் கண்டார்கள். அப்பொழுது அந்த மலக்கு நபியவர்களை நோக்கி "ஓய் முகம்மதே! நான் ஜிப்ரீல்" என்று சொன்னார்.

பின்பு அந்த மலக்கு, முழுவதும் அக்ஷரங்கள் நிறைந்திருந்த ஒரு பட்டு வஸ்திரத்தைக் காண்பித்து, "இதை ஓதும்" என்று சொன்னார்.

அதற்கு முகம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லம் "எப்படி ஓதுகிறதென்று எனக்குத் தெரியாது" நான் உம்மி (படிக்க கற்பிக்கப்படாதவன்) என்றார்கள். இதற்கு அந்த மலக்கு சொன்ன ஜவாபை குர்ஆனெஷரீபின் ௯௬-வது சூராவினால் தெரிந்துகொள்ளலாம்.

அல்லாகுத்தஆலாவின் திருநாமங்கொண்டு தொடங்கும்!

எல்லா வஸ்துக்களைப் படைத்தவனும் உறைந்த இரத்தத்திலிருந்து மனிதனை யுண்டாக்கினவனுமான நாயகனின் திருநாமங்கொண்டு ஓதும்.

மனிதனுக்கு கலத்தின் (எழுதுகோலின்) பாயிதாவை (பிரயோஜனத்தை)க்கற்பித்தானே அந்த கரீமாகிய நாயனுடைய திருநாமங்கொண்டு வாசியும்.

11640

இன்னும் அவன் (ஒன்றுந்தெரியாத) மனிதனுக்கு எல்லாம் கற்பித்தவன்.

உண்மை யுண்மை, மனிதன் முரண்டுத்தன முடையவன், (கீழ்ப்படியாதவன்.)

அவனுக்குச் செல்வம் அதிகப்படுகிறபடியால் அவன் இறுமாப்புள்ளவனுயிருக்கிறுன்.

யாவரும் அல்லாகுத்த ஆலாவினிடம் மீளவேண்டு மென்பது நிச்சயம்.

ஒரு அடியான் தொழுவதை வேண்டாமென விலக்கினவனை (அபூஜஹலை) பார்த்திரா ?

அவன் (அபூஜஹல்) நேர்வழியில் திரும்பினுலும் அல்லது ஆண்டனுக்குப் பயப்படும்படி கட்டளையிட்டாலுமென்ன?

உண்மையைத் [illegible]விட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டாலு மென்ன?

(அவன் செய்கைகளை யெல்லாம்) அல்லாகுத்த ஆலா பார்க்கிறுனென அவன் [illegible]க்கவில்லையா?

சாக்கிரதை சாக்கிரதை! அவன் தன் குபினையும், வலிர்க்கையும் விடானுகில் அவன் முன் நெற்றி மயிரை பிடித்திழுத்து (நரகத்திற்) போடுவிப்போம்.

பொய்யன்! பாவியின் முன் நெற்றி மயிர்,

(இப்பொழுது) அவன் தன்னுடைய கூட்டத்தாரைக் கூப்பிடட்டும்,

நாம் நரகத்தின் காவலாளிகளைக்கூப்பிடுவோம்.

சாக்கிரதை, அவன் பேச்சை நீர் ஒப்புக்கொள்ளவேண்டாம். அல்லாகுத்தஆலாவைத் தொழுது அவனிடம் சமீபியும்."

அந்த மலக்கு இதைச்சொல்லி நிறுத்தினபின் முகம் மது சல்லல்லாகூ அலேகிவசல்லம் அவர்களின்(முகத்த லாகிய)அறிவு அல்லாசுபகானுகுத்த ஆலாவின் நூரினு ல் முனவ்வராகி விட்டபடியால், அந்த பட்டுவஸ்திரத் தைப் பார்த்து,அதில் எழுதப்பட்டிருந்த அல்லாகுத்த ஆலாவின் தீர்மானங்களை வாசித்தார்கள்; அந்த தீர் மானங்கள்தான் பின்பு குரானேஷரீபாய் இறக்கப்ப ட்டது. அந்த பட்டுவஸ்திரத்தில் எழுதியிருந்ததை ப்பார்த்து வாசித்தபின் அந்த மலக்கு "ஓய்,முகம்மதே! நான் அல்லாவுடைய மலக்கு ஜிப்ரியீலாயிருப்பதுபோ ல, உண்மையாய் நீர் அவனுடைய ரசூலாயிருப்பீர்" என்று சொல்லி மறைந்துவிட்டார்.

முகம்மதுசல்லல்லாகூ அலேகிவசல்லம் இவற்றை யெ ல்லாம்கண்டு மிகவும்பயந்தவர்கள் அதிகாலையில்தங்க ளுடைய திருமாளிகைக்கு அவசரமாய் வந்து,விடெ விடென அதிக நடுக்கத்தோடு,தங்கள் நாயகி பீபீகதி ஜா அம்மா அவர்களிடம் தாங்கள் இரவில் கண்டவை களையெல்லாம் ஆதியோடந்தமாய்ச் சொல்லி, இவை யெல்லாம் கனவோ அல்லது நினைவோ அல்லது மன த் தடுமாற்றமோ அல்லது கெட்டிருக்கிற மார்க்கத்தை சீர்திருத்தும்படி ரசூலாவேன் என்பது உண்மைதானே அல்லது ஷைதானுடைய குழப்பந்தானோ வென்றுசொ ல்லி திகைத்தார்கள். ஷைதானுடைய குழப்பமா யிருக் கும்பக்ஷத்தில் எல்லாவற்றைக்காட்டிலும் அதிக கொடி தா யிருக்குமென்றும்பயந்தார்கள்,பிபீகதிஜா அம்மா அ வர்கள் சுபாவமாய் ஸ்திரிகளுக்குள்ள அதிவிசேஷ யூக த்திலும் அதிககூர்மையான யூகமுள்ளவர்களாகையால் இரவுநடந்ததெல்லாம் சந்தேகமின்றி உண்மையே யெ ன்று தெரிந்துகொண்டுசொன்னார்கள். "மங்களகரமான

செய்தி கொண்டுவந்தீர்; என்னுடைய ஹயாத்துயாரிடமிருக்கிறதோ அந்த நாயனுணை, இன்றுமுதல் நீர்ஈகுலேயென்று நான் ஈமான்கொண்டேன். நீர் அவமானப் படும்படி அல்லர் குத்தஆலாவிடான். நீர் சந்தோஷப்படும் ஏனெனில், நீர் உம்முடைய உறவினர்களை நேசிக்கிறதில்லையா? உம்முடைய அயலார்களை பக்ஷமாய் நடத்துகிறதில்லையா? ஏழைகளுக்கு தானம்தருமங்கொடுக்கிறதில்லையா? அன்னியர்களை ஆதரிக்கிறதில்லையா? உம்முடைய வார்த்தைகளை நிறைவேற்றுகிறதில்லையா? [illegible]னுளும் சத்தியத்தைக் காப்பாற்றுகிறவரல்லவா? (அப்படியிருக்க நீர் பயப்படுவானேன்.")

இப்படிச் சொல்லி தயிரியப்படுத்திவிட்டுத் தங்கள் உறன்முறையார்களில் ஒருவராகிய வொரிகா என்பவரிடம் துரிதமாய்ப் போய் நபிசல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்கள் சொன்னவைகளை யெல்லாம் சொன்னார்கள். அதைக் கேட்டவுடன், வொரிகா, தானும் இந்த அற்புதமான சங்கதிகளையெல்லாம் அதிக ஆவலுடன் கேட்டுடனே ஒப்புக்கொண்டார்கள். இன்னும் அவர் சொன்னதாவது, " எல்லாப்புகழும் அல்லாவுக்கே தகும். அப்துல்லாவின் குமாரர் உண்மையைச் சொல்லுகிறார், மூஸா அலைகிஸ்ஸலாம் அவர்களுக்கு சட்டதிட்டம் வந்ததுபோல, முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களுக்கும் பெரிய சட்ட திட்டம் வரும். அவர்மனதில் நம்பிக்கையுள்ளவரா யிருக்கும்படி கட்டளை யிடுங்கள். நான் அவருக்கு உதவியாயிருப்பேன்." என்பதே.

கதீஜா அம்மா அவர்களும், வொரிகாவும் இவ்வளவு தைரியம், தென்பும்சொல்லியும் நபிசல்லல்லாகு அலை

கிவசல்லம் அவர்கள் தங்களுக்குச் சம்பவித்ததெல்லாம் எப்படியாமோ வென்று விருப்பமும் மனக் கலக்கமுமுள்ளவர்களாகவும் இருந்தார்கள். அவர்களிடம் சம்பாவித்தது ஜிபரியீல் அலைகிஸ்ஸலாமே யென்று திட்டப்பட்டும், தாங்கள் பட்டு வஸ்திரத்தில் வாசித்ததெல்லாம் தங்கள் மனதில் பதிந்துபோயிருந்தும், தங்கள் வேலையானது சனங்களுக்கு நேர்வழி காட்டுவது என்று தங்களுக்கு இதுவரையிலும் நிச்சயப் படவில்லை. இவ்வித மனக்கலக்கமா யிருப்பதுடன், (இச்சங்கதியைக்கேட்ட)சில குறைஷிகளும் பரிகாசம் செய்தார்கள். ஆகையால் அதிகமனங்கலங்கினவர்களாய் மலையடிவாரத்திற் போய் தங்கள் வஸ்திரத்தைப்போர்த்துக்கொண்டு முன் நடந்த காரியங்களைச் சிந்தித்தவர்களா யிருந்தார்கள். இந்த ஸ்திதியிலிருக்கையில், அந்த மலக்கு மறுபடியும் தோன்றி.

"போர்த்துக்கொண் டிருக்கிறவரே! எழுந்திரும், சனங்களை பயப்படுத்தும். (பிரசங்கம் செய்யும்.)

உம்முடைய நாயகனின் பெருமையைப் பிரசங்கஞ் செய்யும்;

உம்முடைய வஸ்திரங்களைச் சுத்தியாய் வைத்துக் கொள்ளும்.

ஷிர்க்குகளை வெறுத்து விடும்,

அதி பிரதியுபகாரத்தைக் கருதி உபகாரஞ் செய்யாதேயும்.

அல்லாவின் கட்டளைக்கு வழிபார்த்திரும்.

ஸூர் ஊதப்படும் நாளானது காபிரீன்களுக்கு அதிக வருத்தமான நாளாயிருக்கும்."

எனசொல்லவே,

ஈபிசல்லல்லாகூ அலைகிவசல்லம் அவர்களுக்கு இப்பொழுதுதான் அந்தமலக்கு அல்லாவின் தூதர் ஜிப்ரியீல் அலைகிஸலஸ்லாம்என்றும், அவர்களோடு எதிர்நோனசம்பாஷணையைதாங்கள் உடைத்தாயிருக்கிறுர்களென்றும் திடப்பட்டதுமன்றி, தாங்கள்ஜனங்களுக்குநசீகத்துசெய்யஎற்படுத்தபட்டாருலஎன்றும், ஜனங்களுக்குத்தெரியப்படுத்த வேண்டியவைகளைத் தங்களுக்குத் தெரிவிக்கப்படுமென்றும் விச்சயப்பட்டது. முன்னர் தங்களுக்குண்டாயிருந்த எல்லா மனக் கலக்கங்களையும், கிலேயும் உதறி நீக்கிவிட்டு அதிமேலான தைரியத்தோடும் ஊக்கத்தோடும் எழுந்திருந்தார்கள்.

பின்பும்,

ளுஹார்நேரத்தின்பேரில் சத்தியம், தன்னிருட்டினுல் பரவப்பட்ட இரவின் பேரில் சத்தியம்.

உம்முடைய நாயன உம்மை விட்டுவிடவுமில்லே.

அல்லது உம்மை அவன் வெறுக்கவுமில்லை.

நிச்சயமாய், சென்றதைப் பார்க்கிலும் இனி வருவது உமக்கு அதிக மேலானதா யிருக்கும், (துன்யாவைப் பார்க்கிலும் ஆகிரம்மேலானது)

ஆகிரத்தில் உம்முடைய நாயன் உமக்கு வெகுமதி கொடுப்பான்.

நீர் திருப்தி படைவீர்.

உம்மை அவன் பெற்றோ ரற்றபிள்ளேயாய்க் காணவில்லேயா? உமக்குஇடந் தரவில்லேயா?

நீர் வழி தப்பிப்போனபோது அவன் உமக்கு வழிகாண்பிக்க வில்லேயா?

உம்மை அவன் ஏழையாய்ப்க் காணவில்லேயா? பின்பு உம்மை அவன் சீமானுக்க வில்லேயா?

ஆகையினால் அநாதபிள்ளைகளுக்கு நீர் அனியாயம் செய்ய வேண்டாம்.

அல்லது யாசிப்போரை விரட்ட வேண்டாம், ஆனால் அல்லாவின் நிஅமத்தைப் பிரசித்தம் செய்யும்."

முகம்மது சல்லல்லாகூ அலைகிஸ்ஸல்லம் தங்களுடைய திருமாளிகைக்குத் திரும்பிவந்து இந்த உண்மையை முதலில் சாந்தமாய் கற்பிக்க ஆரம்பித்தார்கள்.

தங்கள் பீபியாகிய கத்திஜா அம்மா அவர்களும், தம் சகோதரர் குமாரரும பாலியப்பருவ முள்ளவருமான அலாத் அலிரலியல்லாகூ அன்கு அவர்களும், தங்களுக்கு நெருங்கிய பந்துக்களில் சிலரும் ஆரம்பத்தில் ஈமான் கொண்டார்கள். ஆனால் தங்களுடைய வம்ஸத்தார்களில் சிலர் தாங்கள் சொல்வதை கவனியாது வெறுப்பாயிருந்தார்கள்.

நபியவர்கள்பாசாங்குசெய்கிறவர்களாயிருந்தால் பகிரங்கத்தில்ஒருவிதமாகவும், அந்தரங்கத்தில்ஒருவிதமாகவும் நடந்திருக்க வேண்டுமென்பது ஆவசியகம். அப்படியிருந்தால் நபியவர்களை சிறுபோதிலிருந்து நன்றாயறிந்த அவர்களுடைய நெருங்கிய பந்துக்களும், அவரது பிராணசினேகிதர்களும் அந்த பேதத்தை அறியாதிரார்களென்பது அதிநிச்சயம். அப்பொழுது ஒருக்காலும் அவர்கள் ஈமான் கொள்ளார்களென்பது அதிநிச்சயத்திலும் அதிநிச்சயம். நபியவர்கள் சிறிதளவேனும் பாசாங்கு செய்யாதபடியினால் அவர்கள் யாதொரு பேதத்தையும் காணவில்லை யாகையினால் இவர்கள் ஆரம்பத்திலேயே யீமான் கொண்டார்கள். இவ்விதம் நபியவர்களின் நெருங்கிய பந்துக்களும் அவரது பிராண சினேகிதர்களும் முதல்முதல் ஈமான் கொண்டிருப்பதி

ஞல் நபியவர்கள் உண்மையானவர்க ளென்பதில் யா தொரு சந்தேகமில்லையென நிச்சயப்படுகின்றது.

பின்னர் சிலவருஷம் நபியவர்களை சனங்கள் பழித்து ம், இழிவாய்ப் பேசியும், துன்பப்படுத்தியும் வந்தார்க ள். இவர்களை மாத்திரமோ இவர்களின் அஸ்காபிகளி ல் சிலரையும் அவ்விதமே நடத்திவந்தார்கள். ஒருத டவை நபியவர்களின் பகைஞர்கள் சொன்னூர்கள் "மு கம்மதே, நீர் இந்த கருத்தை விட்டுவிட்டால் உம க்கு வேண்டிய பொருள்களை அல்லது எங்களை யெல்லாம் நடத்தும் தலைமைப்பட்டத்தையாவது கொ டுப்போம்" அதற்கு ஜவாபாக நபியவர்கள் சக-வது சூராவை ஓதிக்காண்பித்தார்கள். அதின் ஒரு ஆயத்தி ன் அருத்தமாவது.

"ஷைதானுடைய வஸ்வஸா (ஏய்ப்பு) உம்மைத் தொடுமானுல் ஆண்டவனிடம் காவற்பாடு தேடிக்கொ ள்ளும். கேட்கிறவன் அவனே அறிகிறவனும் அவ னே" என்பதே.

முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களின் பகைவர்கள் இதைக்கேட்டு "நீர் அல்லாவினுல் அ னுப்பப்பட்ட நபியாயிருந்தால் ஒரு முஅஜிஸா (அற்புத ம்) காண்பியுமென்றூர்கள். (நபியவர்கள் இதற்குமுன் எத் தனையோ முஅஜிஸாக்கள் காண்பித்தும் அவை யெல் லாம் சூனியம், மாயவித்தை யென்று சொன்னபடி யால் இப்பொழுதும் அவ்விதஞ் சொல்வார்களென ந பியவர்களுக்குத் தெரியுமாகையால்) நான் முஅஜிஸா காண்பிக்கும்படி அனுப்பபடவில்லை. உண்மையை சனங்களுக்குத் தெரியப்படுத்த அனுப்பப்பட்டேன் எ ன்றும், நீங்கள் எல்லோரும் சேர்ந்தாலும் குர்ஆ

னே ஷரிபின் ஒரு சிறிய சூராவினது மாட்சிமைக்கும் அலங்காரத்திற்கும் சமானமானதைக் கொண்டுவாருங்கள் பார்ப்போம் (குரானே ஷரீபே ஒருபெரிய முஅஜிஸாவாயிருக்க அதைப்பார்க்கிலும் வேறெந்தமுஅஜிஸா வேண்டும்.) என்றார்கள். (அவர்கள் எல்லோருஞ்சேர்ந்து எவ்வளவோ முயற்சி செய்தும் ஒரு சிறு ஆயத்து மாதிரியுங்கொண்டுவரக் கூடவில்லை.)

நபியவர்கள் தங்கள் அஹ்காம்களை சனங்கள் ஒப்புக்கொள்ளும்படி பலவந்தப் படுத்தவாவது, அல்லது அல்லாகுத்தஆலாவின் ரசூல்மார்களில் தாங்கள் ஒருவரென நிலைகாட்டவாவது, எந்தகாலத்திலும் ஏதேனும் ஒரு தந்திரம், சூது, கபடம் செய்தார்களென ஒருவரும் நிரூபித்ததில்லை. ஆனால் நபியவர்கள் நடந்ததெல்லாம் அல்லாகுத்தஆலாவின் உத்தரவின்படி சாதாரண யுக்தியின்பேரிலும், சாதாரணநியாயத்தின்பேரிலும், மதுரபாஷியத்தின்பேரிலு மாயிருக்கும். ஆனால் பகைவர்கள் தங்கள் மூடத்தனத்தினாலும் மனவைராக்கியத்தினாலும் நாளுக்குநாள் அதிகமாய் எதிர்த்து வந்தாலும் நபியவர்கள் தங்கள் கடைமையான வேலையாகிய இஸ்லாத்தின் தஃவத்தை (இஸ்லாத்திலழைத்தலை) நிறுத்திவிடாது நடத்தி வந்தார்கள்.

முகம்மது சல்லல்லாகூ அலைகிவசல்லம் அவர்கள் திருமக்கமா நகரத்தில பஹிரங்கமாயும் பிரசங்கம்செய்து வந்தார்கள். தினேதினே மூமின்களும் தொகையில் அதிகப்பட்டு வந்தார்கள். திருமக்கமாநகரத்திற்குச் சமீபத்திலுள்ள ஸபா, குபைஸ் என்னும் இரண்டு மலைகளின்மேல்நின்றுகொண்டு முக்கியமாய் பிரசங்கம்செய்வார்கள். (மூமின்கள் நாளுக்குநாள் அதிகப்பட்டுவந்தபடியால் காபிரீன்களுக்குக்கோபமும் அதிகம் மும்மரித்து

(இனியிவனை சும்மாவிடாது பலத்தினுலும்,பயத்தினுலும் இவரை யடக்கவேண்டுமென்று முயன்றார்கள். காபிரீன்களின் கோபமும் அவர்கள் அனியாயமும் மும்மரமாகவாக நபியவர்களின்தைரியமும் மனஉற்சாகமும் அதிகமாகிவந்தன. இச்சமயத்தில்நபியவர்களின் சிச்சா, அவர்கள் குறுக்கிட்டுஇனிபிரசங்கம்செய்வதைநிறுத்திவிடும்படிமுயற்சிசெய்தார்கள். ஆனால் நபியவர்களோ மஹா ஊக்கத்தோடு சொன்னார்கள். "காபிரீன்கள் என துவலதுபுஜத்தில் சூரியனையும் இடதுபுஜத்தில் சந்திரனையும் வைத்தாலும் அல்லாகுத்த ஆலா ஏவின வேலையை நான் விடேன்."

முடிவில் மக்கமாநகரத்திலுள்ள காபிர்கள் நபியவர்களையும், தங்கள் அஸ்ஹாபிமார்களையும் நாளுக்குநாள் அதிகம் வருத்தப்படுத்த ஆரம்பிக்கவே, மதீனமாநகரத்தில் சில முஸ்லீம்களிருந்தபடியால் நபியவர்கள்தங்கள் அஸ்காபிகளில்சிலரை அந்நகரத்திற்குப்போய்விடும்படி உத்தரவு செய்தார்கள். அனேக முஸ்லீம்கள் நபியவர்களின்கட்டளையை யேற்றுக்கொண்டு மக்கமாநகரத்தை விட்டுவிட்டார்கள். காபிரீன்கள்இவ்வளவு துன்பப்படுத்தியும் நபியவர்கள் மக்கத்தை விட்டுப்போகாமல் அல்லாகுத்தஆலாவின் வஹதானியத்தைப் பிரசங்கம்செய்துவந்தார்கள். ஆனால்முடிவில்காபிரீன்கள் நபியவர்களைத்திருட்டுத்தனமாய்க்கொலைசெய்ய தீர்மானித்துஅவர்கள் தூங்கினவுடன் சிலதுஷ்டர்கள் பதிவிருந்தார்கள். ஆனால் இந்தசங்கதி அல்லாசுபகானுகுத்த ஆலா வஹியிறக்கி நபியவர்களுக்குத்தெரிவித்தபடியால்நபியவர்கள் அபூபக்கர்சித்தீக்ரலி யல்லாகூஅன்கு அவர்களுடையவீட்டிற்குப் போய் அவர்களுக்கு இந்தசமாசாரங்களைத் தெரிவித்து உடனே மதீனமாநகரத்திற்கு ஹிஜரத்துச் செ

ய்தார்கள், கொலைபாதகர்களாகிய துஷ்டர்கள் நபியவர் கள் வீட்டைச்சுற்றி வளைந்துகொண்டு கதவிடுக்கில் பார்க்க, ஒருவர் பச்சை வஸ்திரத்தைப் போர்த்துக்கொண்டு கட்டிலின்மேல் படுத்திருப்பதைக் கண்டு நபியவர்கள்தானென்றெண்ணி நாம் உள்ளே நுழைந்து அவரைக் கொலை செய்கிறதா அல்லது அவர் வெளியில் வந்த பின் கொலைசெய்கிறதா வென்றுயோசித்தார்கள். இவர்கள் அடக்கமுடியாக்கோபாவேசங்கொண்டிருந்தவர்களாகையால் கதவையுடைத்து உள்ளேநுழைந்து அங்கு படுத்திருந்தவரை (யாதொரு தொந்திரவும் படுத்தத் தைரிய மில்லாதவர்களாகி நிற்க) படுத்திருந்தவர் எழுந்திருந்தார்; அவர் அலாத் அலிரலியல்லாஹு அன்ஹுவா யிருக்கக் கண்டு உடனே திகைத்து ஆச்சரியப்பட்டு, முகம்மது எங்கே யென்று எல்லோரும் ஒன்றாய்ச் சேர்ந்து சத்தமிட்டுக் கேட்டார்கள் ; அதற்கு அலாத் அலியவர்கள் (அதிக வெறுப்பாகவும் கடுகடுப்பாகவும்) "எனக்குத் தெரியாது, அவர் என் கைவசம் இல்லை; அவர் காவலாளன் நானல்லன்" என மகா ஊக்கத்துடன் மறுமொழிகொடுத்துவிட்டு, நடந்துவிட்டார்கள். அலாத் அலியவர்களை இவர்களுக்கு இவ்வளவு அலக்ஷியமாய் விடைபகர்த்தும் அலாத் அலியை யாதொரு அன்பமும் செய்யக்கூடாது மயங்கி நின்றார்கள்.

இங்கு இவ்விதம் நடக்க, முகம்மத் முஸ்தபா சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களும் அபூபக்கர்சித்தீக்ரலியல்லாகு அவர்களும் அந்த இருட்டிலேயே புறப்பட்டுப் போய் தூர்மலையில் மறைந்திருந்தார்கள் ; குகைக்குள் நுழைந்தும் நுழையாததற்கு முன்னமே இவர்களைப்பின் தொடர்ந்து வந்தவர்களின் காலடி சப்தத்தைக் கேட்டார்கள். அபூபக்கர் ரலியல்லாகு அன்கு அவர்கள்

அதிக தைரியசாலியாயிருந்தும் இப்பொழுது பயந்துதா ங்கள் ஒளிந்திருக்கிற இடம் பகையாளிகளுக்குத் தெரிந் துபோய் விடுமெலன்று நடுங்கி, நாமோ இரண்டேபேர், நம்மைப்பின்தொடர்ந்தவர்களோ அநேகர் என்றுசொன் னார்கள். அதற்குநபியவர்கள் இல்லை, இல்லை, நாம் மூன் றுபேர் அல்லாகுத்தஆலா நம்முடனிருக்கிறான். அவன் நம்மைக்காப்பாற்றுவான்," என்றார்கள்.

பின் தொடர்ந்து வந்தவர்கள் எங்கெங்குந் தேடியும் இவர்களிருப்பது அவர்களுக்குத் தோற்றவில்லை யாகை யால் (நபிசலல்லல்லாகூ அலகிவசல்லம் இங்குவரவேயி ல்லையென்று தீர்மானித்துக்கொண்டு) அவர்கள் போய் விட்டார்கள். மூன்று நாள் குகைக்குள்ளிருந்து நாலா நாள் அங்கிருந்து புறப்பட்டு மதின நகரஞ் சென்றா ர்கள். அங்கரத்துள்ளவர்களோ நபியவர்களை அடை க்கலம்புகுந்த ஒருவனைப்போல பாவிக்காது ஓர் பெரிய வெற்றி யடைந்த ஜெயவிஜயனைப்போல் முன்வந்து அ திக கௌரவத்துடன் அழைத்துப் போனார்கள்.

மதின நகரத்திற்குள் பிரவேசிக்காததற்குமுன் தாம் மதினாநகரம் வந்து தங்கியிருப்பது அவ்வூரார்களின் பிரி யந்தானாவென்று நிச்சயப்படுத்தும் பொருட்டு, நபிய வர்கள் கூபா என்னும் இடத்திற்றங்கியிருந்தார்கள். ந பியவர்கள் தங்கள் பிரியம் போல செய்வது அங்குள் ள எல்லோருக்கும் அதிகப் பிரியந்தானென நிச்சயித் தறிந்த பின்னர், மறு வெள்ளிக்கிழமைதினம் அவ்வி டம் விட்டுப் புறப்படுகிறதாக நேமித்தார்கள். இதற்கு ள் நபியுள்ள அலாத் அலிரலியல்லாகு அன்கும் அ ங்கு வந்து விட்டார்கள். வெள்ளிக்கிழமை காலையில் தங்களுகப்புள்ள ஒட்டகத்தின் மீது சவாரியாகி, தங்க ளுக்குப்பின்பக்கம் அலாத் அபூபக்கர் ரலியல்லாகூ அன்

துவை யிருக்கச் செய்தார்கள். ஒரு கூட்டம் நபி அவர்களைச் சூழ்ந்தவர்களாய் நடந்தார்கள். மகா வீரமுள்ள ஒரு தலைவர், எழுபது குதிரை வீரர்களுக்கு அதிபதியாய் மெய்க் காவலாளர்களாய் வந்தார்கள். மற்ற மூமீன்களும் ஒவ்வொருவரும் முறையாய் பேரீச்சங் கொட்டை பிடித்தார்கள்.* மகா ஊக்கமுள்ள ஒரு முஸ்லிம் தன் தலையில் கட்டியிருந்த பச்சை வஸ்திரத்தை அவிழ்த்துத் தன்னுடையஈட்டியின் நுனியில்கட்டி ஒரு விருதாகக்கொண்டு சென்றனர்.

இப்படிச் சென்றதில் நாம் நோட்ட மிடுதற்குரிய விஷயமொன்றுளது அது யாதெனின் மதினா நகரத்திற்குப் பிரயாணப்பட்ட இவ்வருஷம் ஆரம்பமாக முகம்மதிய சரித்திராசியர்கள் எல்லாம்கணக்கிட்டு எண்ணுகிறார்கள். இந்த வருஷத்திற்கு ஹிஜ்ரி யென்று பேர். கிறிஸ்தவர்கள் கிறிஸ்து பிறந்ததாகஉத்தேசிக்கப்பட்ட வருஷம் ஆரம்பமாக எண்ணுகிறதுபோ லென்பதில்சந்தேகமில்லை.‡

முகம்மது சல்லல்லாகூ அலைஹிவசல்லம் அவர்களின் உபாத்திற்கு இரண்டு நாளைக்கு முன்னரே கடைசியாய் மஸ்ஜீதிற்குப் போய் அங்கிருந்த முஸ்லீம்களை நோக்கி "உங்களில் யாரையேனும் எப்போதாகிலும் யான் அடித்த துண்டோ? அப்படி யிருந்தால் அத்தனை அடியி

---

*ஆகையினால்தான் இஸ்லாத்தின் கொடி பச்சை வருணம்.

‡ முகம்மது சல்லல்லாகு அலைஹிவசல்லம் அவர்கள் உபாத்தான சில வருஷங்களுக்குப்பின், உமாளியல்லாகு அன்குஅவர்களினால் ஹிஜ்ரி வருஷம் ஏற்படுத்தப்பட்டது. அரபிகளின் வருஷம் முற்காலத்திலும் சந்திரவருஷமே. தற்காலத்திலும் சந்திரவருஷமே. முஹர்ர மாதம் முதற் தேதியிலிருந்து வருஷமாரம்பிக்கிறார்கள். Crichton's "History of Arabia"

தோ என்முதுகில் அடித்துக்கொள்ளுங்கள்" என்றார்கள். அதற்கொருவரும் ஜவாபு கொடுக்கவில்லை. பின்பு, நபியவர்கள் நான் யாருக்காகிலும் எதாகிலும் கொடுக்க வேண்டிய பாக்கியுண்டோ வென்றார்கள். அதற்கொருவர் "எனக்கு மூன்று திரகம் தாங்கள் கொடுக்க வேண்டும். இன்னசமயத்தில் கடன்வாங்கினதென்றார். முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் அந்த மூன்று திரகத்தை யுடனே கொடுத்துவிடும்படி கட்டளையிட்டார்கள். நபிசல்லல்லாகு அலைகிவசல்லம் சொன்னார்கள். "நாளை கியாமத்தில் அவமானப் படுகிறதைப்பார்க்கிலும் இப்போது அவமானப்படுகிறது நல்லது."

நபி சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களுடைய சரித்திரத்தையும், அவர்களின் அமல்களையும் எழுத, நமக்குக் கிடைத்திருக்கிற இடம் போதாதாகையால் இங்கு சுருக்கமாய் ஒரு வார்த்தை சொல்வதே போதுமானது; அது யாதெனின் முதலில் சிறியதொகையினர்களான முஸ்லிம், ஆயிரமாகவும் பதினாயிரமாகவும் பெருகி முடிவில் அரேபியா முழுவதும் உண்மையும்,வாகிதுமான நாயகனை வணங்க முழுங்காலிடும்படியாக ஆகிவிட்டதென்பதே. நபியவர்கள் துன்யாவிலிருந்து நகலேமகான் செய்யும்படியான நாள் நெருங்கிவிட்டபடியால் மிகுதி நாட்கள் முழுவதையும் தவாவிலும் தொழுகையிலும் கழித்துவந்தார்கள்.

ஜன்னத்துகளில் வாசஞ்செய்யும் நாளானது நெருங்கின போது, ஒரு கட்டிலின்மேல் படுத்தவர்களாய் பெருமூச்சு விட்டு "என்னுடைய அல்லாவே என் சக்ராத்து வேளையில் நீ உதவிசெய், உன்னுடைய அடியானின் சமீபம் வா" என சொன்னார்கள். அலாத் பீபீ ஆயிஷா ரலியல்லாகு அன்ஹா அவர்கள் கட்டிலி

ன் சமீபமிருந்து தஸ்பீகு, தக்பீரு சொல்லிக்கொண்டிருந்தார்கள். நபியவர்களோ "நாயனே உன் அடியான் பிழையைப் பொறுத்துக்கொள், அலா இல்லியீனில் அவனுக்கிடங்கொடு, சதா சுவர்க்கங்கொடு, மன்னி ஆமீன், சாலிகானவர்களின் கூட்டத்தில் இருக்கச்செய்" எனச் சொல்லி இவ்விதம் மிகு அமைதியாய் தரையின் மேல் விரித்திருந்த கம்பளத்தின்மேல் உபாத்தாளுர்கள் தங்களுடைய ரூஹேபுர்பதூஹ் ஆக்கோடு வாசில்லாயிற்று.

இந்த விசனகரமான சங்கதி, ஹிஜ்ரி பத்தாம் ஆண்டாகிய கிறிஸ்து 632-ம் ஆண்டு ஜூன்மாதம் எட்டாம் தேதி திங்கட்கிழமை சம்பவித்தது.

உலக சரித்திரத்தி லெல்லாம் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களுக்குச் சமானமானவர்கள் ஒருவரேனுங் கிடையாது. நபியவர்களோ பாவலர், ரசூல், சட்ட நிருபணர், மதாசாரியர், இராஜாங்க ஸ்தாபிதர்; இவ்வித மகத்துவங்கள் பொருந்திய நபி சல்லல்லாகு அலைகிவசல்லம் மேற்கண்டவிதமாய் நகமே... செய்தார்கள்.

... சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களுடைய நடவடிக்கைகளைப் பற்றிப் பற்பல கிறிஸ்தவர்களால் விசேஷம் எழுதப்பட்டுள்ளன. ...ஷ்கபடியும், நேசபாத்திரருமாகிய ஏசுவைப் பின்பற்று வோர்களாகிய (இக்கிறீஸ்தவர்கள்) எழுதிய கிரந்தங்களில் மத வைராக்கியமும், பொறாமையும் நிறைந்திருப்பதைக் காண விசனகரமாக விருக்கின்றது. ஆனபோதிலும் தற்காலத்தில்சிலகிரந்தகர்த்தாக்கள்,தூஷணையாவது நியாயமாகமாட்டாதெனத் தெரிந்துகொண்டது மல்லாமல், முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களின்நடவ

டிக்கைகளில் அனேகவிசேஷத்துவ முண்டென்றும், அவருக்குக் கொடுக்கப் பட்ட கிதாபானது வல்லமை யுடையதென்றும் அங்கீகரித்திருக்கின்றார்கள்.

இந்த விஷயத்தைப்பற்றி மெஸ்டர். ஜான்டெவன் போர்ட்என்பவர் "முகம்மதுவும் சல்லல்லாகூ அலைகிவசல்லம்கொராநும்" என்னப்பட்ட தமது உன்னத கிரந்தத்தில் எழுதுவதாவது "முகம்மதுசல்லல்லாகூ அலைகிவசல்லம் அவர்களினுடைய உத்தமமானநடவடிக்கைகளைப் பற்றி நிர்ச்சந்தேகமாகிய சரித்திராதாரங்களால் எவ்வளவு அதிகமாய் நிச்சயசங்கதிகிடைத்திருக்கிறதோ, அவ்வளவும் மராக்சி (Maracci) பிரிடோ (Prideau) என்னப்பட்டவர்களாலும், கொஞ்சம் காலத்திற்கு முன் பிரடரிக் ஷிலிகல்(Frederick Schlegel) என்பவராலும், ஏனையோரால் நபியவர்கள்மேல் எறியப்பட்ட கடுமையாகிய தூஷணைகள் நீதிக்கு நியாயக் குறைவாயிருக்கின்றன. (அதாவது மேற்கண்டவர்கள் முகம்மது சல்லல்லாகூ அலைகிவசல்லம் அவர்களின் மீது சில கடுமையான தூஷணைகள் எழுதியிருக்கிறார்கள் ஆனால் அவையுண்மையில் நியாயாதார மற்றவைகளாகவும், நிலை நாட்டக் கூடாதவைகளாகவு[illegible]; ஆகையால் அவை வெறுங்கட்டு என்பது.)

நபியவர்களைப்பற்றி தாமஸ் கார்லைல் என்பவர் கொண்ட அபிப்பிராயம் அவ்வளவுசுயமாகவும் (அஸல்.)பாரபக்ஷ மற்றதாகவும், மனதி லுறுத்தத்தக்கதாகவும் இருக்கின்றமையால் அதை நான் இவ்விடத்தில் எடுத்தெழுதாம லிருக்கக்கூடவில்லை: "ஆழ்ந்த கருத்தையுடைய இந்த வனசஞ்சாரி (நபிசல்லல்லாகூ அலைகிவசல்லம்) பிரகாசம் பொருந்தியகருவிழிகளையும், களவற்ற உல்லாசம் பொருந்திய மகாத்மாவையும் உடையராய், தன

து பேரவாவின்றி இதர எண்ணங்களையும் உடையரா
ய் இருந்தார். இவர் ஓர் அமரிக்கையான மகாத்மா;
யோக்கிதா புருஷத்துவம் தவிர மற்றொன்றினும் பிர
வேசியாதவர்களில் இவர் ஒருவர். இவரைச் சுவாபீசத்
திலேயே உண்மையாயிருக்கும்படி அல்லாகுத்தஆலா
இங்ஙனம் நியமித்தான். இதராள் புராதன ஒழுங்கின்
படியும், கேள்வியுற்றதன்படியும் திருப்தியுடையவர்க
ளாய் நடப்பவர்களாக விருக்க, இவர்மட்டும் புராதன
ஒழுங்கின்படி கரந்துறைபவரல்லர். இவர்யாதொன்றை
யும் தன்முழுமனதோடும் தேர்ந்துஉண்மையையே புரி
வதில்உயரொப்பில்லாதவர். பயங்கரமும் உன்னதமும்
பொருந்தியபிரபஞ்சத்தினது பரமரகசியத்தையுணர்ந்த
வர். 'இதோ நான் இருக்கின்றேன்' என்னும் உரையிகந்த
உண்மையை யாதொரு கேள்விச்சொல்லும் மழுதளிக்
காது. நாம்எடுத்துரைத்த இப்பேர்க்கொத்த நல்லொழு
க்கம் உண்மையாகவே தெய்வத்தன்மை பொருந்திய
து. இப்பேர்க்கொத்த மனிதருடைய வாக்கியம் கட
வுளினுடைய சொந்த இருதயத்தினின்றும் எழுந்த ச
த்தமாகும். மனிதர்கள் அதை கேட்கவும் அதன்படி
யே செய்யவும் வேண்டுமேயல்லாமல், வேறொன்றையு
ங் கேட்கவும் செய்யவும் படாது. மற்றவைகளெல்லா
ம் உவமித்துப் பேசுங்கால் (மாய்ந்துபோகும்) காற்றி
ற்குச் சமானம். நெடுநாள் தொடங்கி இவர் யாத்திரை
செய்யுங் காலங்களில் இவர் மனதில் எண்ணிறந்த
எண்ணங்கள் உண்டாயிருந்தன. "நான்யார்? பிரபஞ்
சமென்று மனிதர் அழைக்கின்றதும் நான் வாசம்
செய்கிறதும் ஆகிய அளவிடக்கூடாத இது என்ன"
பிராணனுவதென்ன? இறப்பாவதென்ன? நான் எதை
நம்புதல் வேண்டும்? நான் எதைச் செய்தல்வேண்டும்?

ஹிராபர்வதத்தினுடையவும், தூர்சீனாபர்வதத்தினுடைய வும் அசாத்தியமான பாறைகளும், கொடூரமுகமும், நிர்மானுஷியமுமான மணற்பாங்குகளும் விடை பகன் றில; நீலநிறமாகப் பிரகாசிக்கும் நக்ஷத்திரங்கள் பொருந்தி நமது தலைக்குமேல் சத்தமின்றிச் சுழலும் ஆகாயம் விடைபகன்றில; யாதொரு உத்திரவுங் காணேம். கடவுளினது உபதேசம் அமைந்த மனிதனது ஆன்மாவே விடைபகர்தல் வேண்டும்."

நாம் முன்னே குறிக்காத இஸ்லாம்மத சித்தாந்தங்களை (அர்கான்களை) இப்போது சுருக்கிச் சொல்வோமாக.

இஸ்லாம்மத சித்தாந்தத்தின் பெருத்த விஷயமான து, அல்லாஹு அகத் என்று ஈமான் கொள்வதும், எவ்வாற்றானும் விக்கிரக ஆராதனையைக் கடிதலுமேயென்று நாம் முன்னமே கண்டிருக்கிறோம். நாம் பெயர்பெற்ற பிரசித்தராகிய தீர்க்கதரிசிகள் (உலுல்அஅளம்) அறுவரையும் முன்னமேதானே குறித்திருக்கின்றோம். இவர்களுடன் பிரசித்தரல்லாத அனேக றசூல்மார்களுண்டு அவர்களாவன-தாவூத் அலைகிஸ்ஸலாம், சுலைமான் அலைகிஸ்ஸலாம், இஜ்ரா அலைகிஸ்ஸலாம் அய்யூப் அலைகிஸ்ஸலாம், யூனுஸ் அலைகிஸ்ஸலாம் இல்யாஸ் அலைகிஸ்ஸலாம், ஹூத் அலைகிஸ்ஸலாம் முதலிய இன்னுஞ்சிலரேயாம்.

முக்கியமான மற்ற அர்கான்களாவன. அல்லாகுத்த ஆலாவின் மலாயிகத்துகளின் மேல் ஈமான் கொள்ளுதல். மலாயிகத்துகள், மர்தபாக்களிலும், வணக்கங்களிலும், வேலைகளிலும் பலதரத்தாருண்டு. அல்லாகுத்த ஆலாவின் அரசைச் சூழ்ந்து சிலர் இபாதத்துச்செய்கிறார்கள். சிலர் அல்லாகுத்த ஆலாவை யெங்கோ மும் தஸ்பீகு செய்தவர்களா யிருக்கிறார்கள். சிலர் அல்லாகுத்த ஆலாவின் கட்டளைகளை நிறைவேற்ற இ

றக்கைகளுள்ள தூதரா யிருக்கிறார்கள். சிலர் மனிதர்களுக்காக சி:பாரிஷ் செய்கிறவர்களா யிருக்கிறார்கள். இம்மலாயிகத்துகளி லெல்லாம் அதிசிரேஷ்டமானவர்கள் நால்வர். முதலாவது - அலாத் ஜிப்ரியீல் அலைகிஸ்ஸலாம்; இவர் வஹிகொண்டுவருகிறவர்; இன்னும் அல்லாகுத்தஆலாவின் தீர்மானங்களை (தக்தீர்களை) எழுதுகிறதுமிவரே. ௨-வது அலாத் மீக்காயீல் அலைகிஸ்ஸலாம்; இவர் உண்மையான மார்க்கத்திற்காக போர் செய்கிறவர். ௩-வது அலாத் இஜ்ராயீல் அலைகிஸ்ஸலாம்; இவர் மவுத்தின் மலக்கு. ௪-வது அலாத் இஸ்ராபீல் அலைகிஸ்ஸலாம்; இவர் கியாமத்து நாளையில் ஸூர் ஊதுகிறவர். குறைந்த மர்தபாவுடைய மலக்குகளில் முஅகிபாதுகளென ஒரு கூட்டத்தாருண்டு. ஒவ்வொரு மனிதனுடைய வலதுதோளில் ஒவ்வொருவராகவும், இடதுதோளில் ஒவ்வொருவராகவும் ஒவ்வொரு இன்சானுக்கும் இவர்களுள் இரண்டிரண்டு பேர்கள் ஸ்தாபிக்கப்பட் டிருக்கிறார்கள். அவர்கள் அங்கிருந்துகொண்டு ஒவ்வொருவருஞ்செய்யும் நன்மைதீமைகளைக் கணக்கெடுக்கிறார்கள். பின்பு ஒவ்வொருநாளின் முடிவில் அவ்விருவரும் தாங்களெடுத்த கணக்கை யெடுத்துக்கொண்டு வானலோகம் போய் விடுவார்கள், அவர்கள் ஸ்தானத்தில் வேறிருவர் வந்துவிடுவார்கள். ஹதீஸில்வந்திருக்கிறதாவது ஒருஅடியானால் ஒரு நன்மை செய்யப்படுமானால் அதைப் பத்து நன்மைகளாக வலதுபக்கத்திலுள்ள மலக்கு கணக்கெழுதிக் கொள்வார். ஆனால் ஒருவன் ஒரு பாவம் செய்வானாகில் இடதுபக்கத்திலுள்ள மலக்கு அதைத் தன் கணக்கில் பதிய எத்தனிக்கையில் வலதுபக்கத்தி லிருக்கும் கிருபையுள்ள மலக்கு அவருக்குச் சொல்வார். ஓ, மலக்கே! நீர் எழுமணிவரையில் தாமதித்

துப்பின்பு, அதைக் கணக்கில் பதியும்; ஏனெனில் அந்த அடியான் ஒருவேளை தோபா செய்து அல்லாகுத்தஆலாவிடத்தில் பிழை பொறுக்கத் தேடுவான், என்பதே.

இன்னும் அல்லாகுத்தஆலாவினால் இறக்கப்பட்ட வேதம், ஸஹுபு ஆகியவைகளில் ஈமான்கொள்ளுதல்; முக்கியமாய் முடிவில் இறக்கப்பட்ட குரானேஷரீபில் ஈமான் கொள்ளுதல்.

குர்ஆன் என்னும் வார்த்தையானது (கரஅ) படிக்கிறது என்னும் வார்த்தையிலிருந்து வெளியானது: அரபியில் குர்ஆன் என்பதின் சாதாரண அருத்தமாவது, வாசித்தல் அல்லது அவசியம் வாசிக்கவேண்டிய ஒன்று, என்பது. இந்த குரானேஷரீபானது சமமில்லாத (சிறிதும்பெரிதுமான)-114-சூராக்களாய் வகுக்கப்பட்டிருக்கிறது. சூரா வென்பது அதிகாரமென்கலாம். இந்த சூராக்களும் சமமில்லாத ஆயத்துகளாக அல்லது வாக்கியங்களாக வகுக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு சூராக்களும் பிரசித்தமான பேர் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இப்பேரானது அந்தசூராக்களில் சொல்லப்பட்ட முக்கிய சங்கதியின் அல்லது முக்கியமானவர்களின் பேராயிருக்கும். ஆனால் அந்நாமங்களில் அநேகம் அந்த சூராவில் குறிப்பான முதல்வார்த்தையிலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் பேருக்குப்பின், (ஒன்பதாம் சூரா நீங்கலாக மற்றெல்லா) சூராக்களின் தலைப்பில், பிஸ்மில்லாஹி(அதிககிருபையுள்ள அல்லாவின் திருநாமங்கொண்டு துவக்கிறேன்) என்னும் ஷெளகத் நிறைந்த வாக்கியம் எழுதப்பட்டிருக்கிறது.

குரானேஷரீபானது எல்லாவித மதுரபாஷியத்துடனும், அலங்காரத்துடனும், இருக்கிறதென எல்லாரும்

ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அரபிபாஷையின் கலைஞானமென மனப்பூர்வமாய் (யாவராலும்) ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. அதின் வாசகமானது பெரும்பாலும் அலங்காரமாகவும் உசிதமாகவுமிருக்கிறது; முக்கியமாய் கட்டளையிடும் வாக்கியங்களில் காணலாம். (அதாவது இன்ன காரியத்தைச்செய் என அல்லாகுத்தஆலா ஏவுகிறானே அந்த ஆயத்துகளில் காணலாம்.) குரானேஷரீபின் ஒரு பாகத்தில் அல்லாகுத்த ஆலாவின் கிரியைகளும் (காயினாத்தும், ஸனஅத்தும்), முன்காலத்திலுள்ள அவனுடைய ரசூல்மார்களின் சங்கதிகளும் சொல்லப் பட்டிருக்கின்றன.

மற்றொருபாகத்தில முக்கியமான சட்டதிட்டங்களும், கட்டளைகளும், (ரிவாயத்துகளும்) மார்க்கத்திற்கடுத்த நசீகத்துகளும், துன்யாவுக்கான நசீகத்துகளும், இவற்றிற் கெல்லா மேலாக ஏகநாயகனை அல்லாகுத்தஆலாவை வணக்கம் செய்யும்விதமும், அவன்கட்டளைக் குட்படும் விபரங்களும், அவன்பேரில் தவக்கலாயிருக்கும் விதமும் சொல்லப்பட்டிருக்கின்றன.

குரானேஷரீபானது அல்லாகுத்தஆலாவினிடமிருந் திறங்கின தென்பதை ஓர் பக்கம் வைத்துக்கொண்டாலும், கலைஞானசம்பந்தமாய் குரானேஷரீபை கவனிக்குங்கால், அது தென்திசையிலுள்ளவைகளிலெல்லாம் மேலான செய்யுட் பாங்கான காவியமா யிருக்கிறது. பூகோளத்தின் மேற்கண்ட கீழ்பாகத்தில் உள்ளவர்கள் பூர்வகால மிருந்து எதுகை, மோனை முதலியன வுள்ள வாசகத்தில் அதிக பிரியமுள்ளவர்களா யிருந்தது போலவே குரானேஷரீபின்பெரும்பாகம் எதுகை, மோனை முதலியன வுள்ள செய்யுள் பாங்கான வாசகமா யிருக்கிறது.

அதில் உன்னதமான வர்ணனைகளும் ரூபகாலங்காரங்களும் நிறைந்திருக்கின்றன.

எமர்சன் என்பவர் தமது கிரந்தங்களில் அனேகவிடத்தில் குரானேஷரீபைப்பற்றி தேவதாவிசுவாசமாய் மிகவும் (சங்கையாய்ப்) பேசி யிருக்கின்றார்.

குரானேஷரீப் என்னப்பட்ட கிதாபானது வாசிப்பவர்களுக்குப் பிரதமத்தில் கடினமாகவும், பிறகு வரவர அலங்காரமாகவும், முடிவில் வாசிப்பவர் மனதைக் கவரத்தக்க கற்பனை யலங்கார முடையதாகவும் உளதென்பது கோதி என்பவரது அபிப்பிராயம்.

கார்லைல் என்பவர் சொல்கிறதாவது "நீ ஒருமுறை குரானேஷரீபை நன்றாய் வாசித்தால், அதின் பிரதான அம்சங்களெல்லாம் துலக்கமாகின்றன, இதில் பாஷா விசேஷத்தோடு வேறு விசேஷங்களும் உண்டு. ஓர் புத்தகம் உள்ளத்திலிருந்து உதித்தால் அது இதர உள்ளங்களிற் புக இயலும். குர்ஆனேஷரீபிற்குமுன் எல்லாக் கிரந்தங்களும், கிரந்தகர்த்தத்துவமும் மிக அற்பமானதே. (அதாவது எப்பேர்க்கொத்த சாமர்த்திய முள்ள வல்ல கல்விமானாயினும் குர்ஆனேஷரீபினது ஒரு ஆயத்திற்குச்சமமான ஒருவாக்கியத்தையும் ஒருக்காலும் எழுத முடியாது என்பதே.) குரானேஷரீபினுடைய பிரதானமான தன்மை சத்தியமும் நல்லெண்ணமுமா யிருக்கும். (அதாவது பனிதர்களுக்கு நேர்வழி காட்டுவதற்கேயொழிய அவர்களை யேமாற்றி மோசஞ் செய்வதற்கன்று.) எல்லாவிதத்திலும் உண்மையே குரானேஷரீபினுடைய பெருமையாக விருக்கின்றது: இதுவேயதற்கு ஆதியந்தமாயுள்ளபெருமை, இதுவே எவ்

விதபெருமைக்கும் ஆதாரமாகின்றது அன்றி எவ்வி தபெருமைக்கும் ஆதாரமானது இதைவிட வேறொ ன்றில்லை.

இப் பரிசுத்தமான கிதாபைப் பற்றிச் சர் உல் லியம் மூர் என்பவர் சொல்லுவதாவது பிரபஞ்சத்தி ல் இயற்கையாயுள்ள திருஷ்டாந்தங்களைக் கொண்டு குரானேஷரீப் இறைக்கப்பட்டுள்ளதற்குக்கருத்தென்ன வெனின், எல்லாவற்றிற்கு மேலான இராஜாங்கத்தையு டைய நாயகனுன் அல்லாகுத்தஆலா ஒருவன் உண்டெ ன்னும் உண்மையையும், மனிதர்கள் அவனுக்கு ஆட்பட் டு அடங்கி நன்றியுணர்வுள்ளவர்களா யிருத்தல் வேண்டு ம் என்பதையுங்கொண்டே. இனிவரும் உலகத்தில் (ஆ கிரத்தில்) நன்மை துன்மைகளுக்கேற்க பிரதிபலனடை தலும், (துன்யாவில்) நீதியைக்கைப்பற்றுங்கடமையும், அநீதியைக் கைவிடுங்கடமையும், சிருஷ்டிகள் தங்கள்சி ருட்டிகனை உல்லாசத்தோடு வழிபடவேண்டியகடமை யும் ஆகிய இப்பேர்க்கொத்த விஷயங்கள் உன்னதபா ஷையில் வெகு ஊக்கத்தோடு அடிக்கடி மிகவும் சுத்த மானகவிகளாக வரையப்பட்டுள்ளன. பூமியின் தென்பா கங்களில் நெடுநாள் மழையின்றி உலர்ந்து மாய்ந்திட்டி க்கும் (புற்பூண்டுகளுக்கு) நிமித்தியமாய் விடாமழை பொழிந்து சீவதாரை வார்த்ததுபோல திருட்டாந்தாதிக ளாலும் பல உறுதிவாசகங்களாலும் உயிர்த்தெழுதலின் (கியாமம் உண்மையென்பதின்) நியாயத்தைப் பிர திபாதிக்கின்றது.

வாஷிங்டன்இரவிங் என்பவர் குர்ஆனேஷரிபைக் கு றித்துக் காட்டி எழுதுவதாவது—"குரானேஷரீபில் பரிசுத்தமும் மேன்மையுமாகிய உயர்நீதிகள் அடங்கி யிருக்கின்றன."

குரானேஷரீபிலுள்ள கட்டளைகள் (ஹுக்மகள்) நீதியையும் மதகலையும் மாத்திரம் பற்றியவைகளல்ல.

குரானேஷரீபானது அட்லாண்டிக் சமுத்திரமுதல் (மகரிப்முதல்) கங்காநதி வரையில் மதசாத்திரங்களின் மூலாதாரமான சட்டதிட்டமாக அங்கீகரிக்கப்படுவது க்தவிர பிராயச்சித்த வியவகார (கிரிமினல், ஸீவில்) (Criminal and Civil) விஷயங்களையும், கல்குகளின் அமல்கள் ஒழுங்காக அல்லாகுத்தஆலாவின் மூறு டாஎண்ணத்தின் (இராதத்தின்படி) மனிதர்கள் நடத்தப்படுகின்றார்கள் என்னும் நியமனத்தையும் பிரதிபாதிப்பதாக கிப்பன் என்பவர் சொல்கின்றார். இதன் அருத்தமாவது எல்லாமுஸ்லிம்களுக்கும் எல்லாவிஷயத்திலும் குர்ஆனேஷரீபானது பொதுவானசட்டதிட்டங்களாயிருக்கிறது. அதாவது :—

குரானேஷரீபானது முஸ்லிம்களுக்கு சாதாரண ஐக்கிய விஷயத்திலும், விவகார விஷயத்திலும், வர்த்தக விஷயத்திலும், இராணுவவிஷயத்திலும், நியாய விஷயத்திலும், குற்றவிஷயத்திலும், தெண்டனைவிஷயத்திலும், ஒருசட்டமாயிருப்பதுடன் மத சம்பந்தமான ஓர் சட்டமாயும் இருக்கின்றது; என்பதே;—

இதனாலே மத சடங்குகள் முதல் நித்திய சீவியம் வரையில் எல்லா விஷயங்களும்; ஆன்ம சாபல்லியமுதல் தேகாரோக்கியம் வரையிலும்; கூட்டத்தாருடைய சுவாதந்திரியமும் ஒருவனுடைய சுவாதந்திரியமும்; ஒருவனுடையவும் பலருடையவுமாகிய நன்மைகளும்; நீதியும் அநீதியும்; இம்மை மறுமை தண்டனைகளும் வரையறுக்கப்பட்டிருக்கின்றன.

ஆகையினாலே குரானேஷரீபானது, காம்பெனன்பவர் சொல்வதுபோல, சரித்திரங்களும், கதைகளும், ஆச்சரிய விஷயங்களும், பக்திவைராக்கியங்களும், நியாய யுக்தமாய் அமைக்கப்பட்ட நீதிகளும் உடைய கிறிஸ்துவவேத புஸ்தகத்தினின்றும் வெகுவாய்ப்பேதப்படுகின்றது.

இராஜாங்கங்களில் மதாசாரியர்களினால் (குருமார்களினால், Priests) உண்டாகும் அபாயத்தை முகம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் வெகுவாய் உணர்ந்திருந்தமையாலும், அந்தமதாசாரியர்கள் எல்லா ராஜாங்கத்தையும் கெடுக்க ஏதுவானவர்களென்றுஉணர்ந்திருந்தமையாலும், அத்தகைய ஸ்தாபிதம் இனி கூடாதென்று யூகித்து ஒவ்வொரு முஸ்லீமும் ஒவ்வொரு குர்ஆனேஷரீபை (தீனுக்குந்துன்யாவிற்குமான சட்ட கிதாபை) யுடையராய் (அதிலுள்ளபடியே நடந்து) தன்மட்டில்மதாசாரியராயிருக்க வேண்டுமென்று அபிப்பிராயங் கொண்டார்கள்.

ஆதலினாலே இஸ்லாம் மதகத்தில் மதாசிரியத்துவம் கிடையாது. நியாயசாஸ்திர வாதிகளே வேதசாஸ்திரவாதிகளாயிருக்கிறார்கள் (துன்யாவின் விவகாரங்களைத் தீர்ப்புச்செய்யும் இராஜாங்க அதிகாரமுடைய காஜிமார்களே தீனினுடைய விவகாரங்களைத் தீர்ப்புச்செய்யும் ஆலிம்கள், மவுல்விகளாயிருக்கிறார்கள்என்பது. ஏனெனில் (இவ்விருதிறத்தாருக்கும்) குரானேஷரீபே சட்டமாயிருக்கிறது. ஆனால் (கிறிஸ்துவபாதிரிகளைப்போல) அவர்கள் (சனங்களிடம்) பத்திலொன்று வாங்கும் ஆயத்தினாலாவது அல்லது மஸ்ஜீது (முதலிய தரும) சொத்துக்களினாலாவது அவர்கள் ஜீவனஞ்செய்கிறதில்லை. அ

வர்கள் செய்யவேண்டியதெல்லாம் நியாயத்திற் கடுத்த வைகளேயொழிய சடங்குக் கடுத்தவைகளல்லன.

இறந்தபின் உயிர்த்தெழுப்புவது, கியாமநாள் விசாரணை, ஜன்னதுல்பிர்தவுஸ், அவரவர்களின் நன்மையின் தராஜாவைப்போல வெகுமதியடைதல் (ஜஸா), அவரவர்களின் பாவத்திற்கேற்றபடி தண்டனையடைதல் (ஸஜா), தக்தீருடைய (மஸ்அலா) சங்கை, ஆகிய இவைகளில் முஸ்லீம்களுக்குள்ள ஈமானை (ஈலாயிகளுக்கு) இன்னதெனவிரித்துரைக்க அவசியமில்லை; ஏனெனில், இஸ்லாமவேதசாஸ்திரத்தில் சாதாரண பயிற்சியுள்ளவனும்மேற்கண்டவைகளின்னவென நன்றாயறியக்கூடும்.

தருமம் (ஸகாத்) செய்யவேண்டுமென்பது எல்லா மூமின்கள் பேரிலும் பாரமாயிருக்கும் என்பது பின்வரும் குரானேஷரீபின் ஆயத்தினால் தெரியவரும்.

"அல்லாவை வணங்குங்கள்; அவனோடு ஒன்றையும் இணையாக்க வேண்டாம். பெற்றோர்கள், பந்துக்கள், (தாய்தந்தையில்லாத) யதீம்கள், ஏழைகள், உன் பந்துவாகிய அயலான், அன்னியனான அயலான், உன் தோழர்கள், பிரயாணிகள், உங்கள் வலது கைக்குள்ளிருக்கிற கைதிகள் ஆகிய இவர்களுக்கு இகுஸான் செய்யுங்கள்; ஏனெனில் அகங்காரிகளையும் இறுமாப்புள்ளவர்களையும், அல்லாகுத்தஆலா நேசிக்கிறதில்லை; இன்னும் (பகீல்கள்) ஈயார்கள், ஜனங்களுக்குப் பகீல்தனத்தைப் போதிக்கிறவர்கள், அல்லா சுபகானுகுத்தஆலா தனது கிருபையினால் அவர்களுக்குக் கொடுத்திருப்பவைகளை மறைக்கும் நன்றியற்றவர்கள் ஆகிய இவர்களை அல்லாகுத்த ஆலா நேசிக்கிறதில்லை. இன்

னும் மனிதர்கள் மெய்ச்ச தங்கள் சொத்திலிருந்து தர்மஞ் செய்கிறார்களே அவர்களையும் நேசிக்கிறதில்லை." (சூரா-ச.)

இன்னும் பின்வருகிற ஆயத்துகளிலும் சொல்லப் பட்டிருக்கிறதாவது:—முதன்முதல் ஏழைகளுக்கும் எத்தீம்களுக்கும் (பெற்றோரற்றபிள்ளைகளுக்கும், அடிமைகளுக்கும் அல்லாகுத்த ஆலாவுக்காக சாப்பாடு கொடுங்கள். அப்பொழுது (நீங்கள்) அவர்களுக்கு அல்லாவுக்காகவே சாப்பாடு கொடுக்கிறீர்களென்றும், அவர்களிடமிருந்து பதிலுபகாரத்தையாவது அல்லது துதி செலுத்துதலையாவது விரும்பவில்லையென்றும் சொல்லிக்கொண்டு கொடுக்கவேண்டும். ஆகையால் அவர்களுக்கு (மேற்கண்டவிதமாய்க் கொடுப்பவர்களுக்கு) அல்லாகுத்தாலா பதிலளிப்பான்." (சூரா-எசு)

நாமிப்பொழுது மேலே விவரித்ததுபோலவும், பின் காணும், இரண்டு வாக்கியத்தில் கண்டிருக்கிறது போலவும் தர்மஞ் செய்வது முக்கியமாய் கற்பிக்கப் பட்டிருக்கிறது.

"அவர்கள் என்ன தர்மஞ் செய்யவேண்டுமென உம்மைக்கேட்டால் "அவர்கள் என்ன மீர்க்ககூடுமோ அதை தர்மஞ் செய்க" எனச் சொல்லும்." (சூரா-உ)

"இன்னும் தன்னுடைய சொத்தை தர்மஞ் செய்கிறவனுக்கும், தன் சொத்தை தர்மஞ் செய்து பிரதி உபகாரத்தை அடையாதவர்களுக்கும், சர்வ தயாபரனை அல்லாகுத்தாலாவுக்காக கொடுக்கிறவர்களுக்கும், மறுலோகத்தில் (ஆகிரத்தில்) அவர்கள் நன்றாய்திருப்தியடையும்படி அல்லாகுத்தஆலா தன்னுடைய வெகுமதியைக் கொடுப்பான்." (சூரா-கூஉ)

குர்ஆனேஷரீபில் சொல்லப்பட்டிருக்கிற நீதிகள் அதி சிரேஷ்டமானவை.

கோள்சொல்வது கண்டிக்கப்பட் டிருக்கிறது; அல்லாகுத்தஆலா திருவுளமாகிருன்.

"மைக்கமாய் ஒருவருடையகோளேப்பேசுவதை அல்லாகுத்தஆலா விரும்புகிறதில்லே" (சூரா-ச)

ஓ உண்மையான மூமின்களே! ஒருவன்மேல் சந்தேகிப்பதை ஜாகிரதையாய் நீக்கிவிடுங்கள். ஏனெனில் சந்தேகிப்பது பாவமாயிருக்கும்; ஒருவன் தவறிப்போனதைப் பற்றி அதிக ஆச்சரியத்தோடு விசாரியாதிர்கள். அல்லது ஒருவனுக்குப்பின் அவனேப்பற்றி மிவாய்ப்பேசாதிர்கள். சூரா-சக

பேராசைப்படுவதும் விலக்கப் பட்டிருக்கிறது.

"உங்களுக்குட் சிலருக்கு சிலரைப்பார்க்கிலும் அவரவர்கட் கேற்றபடி எதனுல் அல்லாகுத்தஆலா கீர்த்தி கொடுத்திருக்கிருனே அதை ஆசியாதிர்கள்." (சூரா-ச

ஸ்திரீகளே மரியாதையாய் நடத்தவேண்டுமென சொல்லப் பட்டிருக்கிறது.

"நீங்களொருவரை யொருவர் யாருடைய திருநாமத்தினுல் இரந்துகேட்டுக் கொள்ளுகிறீர்களோ அந்த காரணுக்குப்பயப்படுங்கள். *ஸ்திரீகள் உங்களே பெற்றிருக்கிறபடியால் அவர்களுக்கு நீங்கள் மரியாதை செய்யுங்கள்." (சூரா-ச)

கள் குடித்தலும், சூதாடுதலும் கண்டிக்கப் பட்டிருக்கின்றன.

---

*இங்கிலீஷில் இவ்விதம் இருக்கிறது; ஆனுல் தட்ஸீருகிதாபுகளில், உங்கள் பந்துகளுக்கு மரியாதை செய்யுங்கள்" என வந்திருக்கிறது.

"சாராயத்தைப்பற்றியும், சூதாட்டத்தைப்பற்றியும் உம்மையவர்கள் கேட்பார்கள். அவர்களுக்கு நீர் ஜவாபு சொல்லும். இவ்விரண்டு காரியமும் பெரும்பாவமாக இருக்கும் (சூரா-உ) இன்னும் ஓ உண்மையான மூமின்களே, சாராயம் குடித்தலும், சூதாடுதலும், புத்துகளை ஆராதனை செய்தலும், அம்பெய்து குறிபார்ப்பதும் ஷைத்தானுடைய அமலாயிருக்கும். ஆகையினால், நீங்கள் செழித்தோங்குவதற்காக அவற்றை நீக்கிவிடுங்கள். ஷைத்தானானவன் உங்களுக்கிடையில் பிரிவையும், பகையையும் சாராயத்தின் மூலமாகவும், சூதாட்டத்தின் மூலமாகவும் கொண்டுவந்து விதைத்து அல்லாகுத்தாலாவை திக்ரு செய்து அவனைத்தொழுது வணங்குவதில் நின்றும் உங்களைத் திருப்பிவிடுவான்; ஆகையினால், நீங்கள் இக்காரியங்களிலிருந்து விலகிக்கொள்ளுங்கள்." (சூரா-ரு)

இன்னும் ஜினாவும், ஒவ்வொருகாரியத்திலும் வீண் செலவு செய்வதும் (சூரா-௪-க௪), வட்டியும் (சூரா-௨), பெருமை பாராட்டுதலும், பொருளாசையும் (சூரா-௪-க௭-க௮), பேராசையும் (சூரா-௪-௩௩) முறைபிருத்தனமும், ஒப்பாசாரமும் (சூரா-௪-௬௩), துனியாவின் காரியங்களையே தேடுதலும் (சூரா-௧00-௧0௨) நீக்கப்பட்டிருக்கின்றன.

மனிதருக் கிடையிலுள்ள உண்மையான சகோதர வாஞ்சைகளைப் பற்றி சொல்லி இருப்பதுடன் பின் வருபவைகளும் சொல்லப்பட்டிருக்கின்றன.

"சரியாய் அளவுங்கள். மோசக்காரர்களாயிராதேயுங்கள்."

"நேரான தராசினால் சரியாய் நிறு, மனிதர்களுக்கு அவர்கள் வழக்கில் ஓர் வஞ்சகஞ்செய்யாதே. அல்லது பூமியில் தீராகிர்தமாய் அநியாயஞ்செய்யாதே." (சூரா-26)

எத்தீம்களைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறதாவது:—

“எத்தீம்களுக்கு அவர்கள் வயதானபோது அவர்களின் ஸ்தியை கொடுத்துவிடு, அவர்களுக்கு நன்மைக்கு பதிலாய்த்தீமை செய்யாதே. அவர்களின் ஸ்திதியை உன் ஸ்திதியுடன் சேர்த்து அதைவிழுங்கிவிடாதே; ஏனெனில் அது ஓர் பெரிய பாவம்.” (ஸூரா-ச)

“எத்தீம்களை அநியாயஞ் செய்யாதே அல்லது ஏழைகளை அடித்து விரட்டாதே.” (ஸூரா-கூ)

குருனேஷரீபானது சாதாரண சடங்குகள், நிஷ்டாசாரங்கள் (ஆகிய இவை பேருக்குச் செய்வது மாத்திரம் போதாதென) எதிர்த்துத்தள்ளி குவித்து காண்பிக்கிறதாவது பரிசுத்தமான இருதயத்தை யுடைத்தாயிருப்பதுவும் நற்செயல்களை செய்வதுமே உண்மையான மூமின்களின் தன்மையென நிருபிக்கின்றது.

“உங்கள்முகங்களை மேற்கு முகமாக அல்லது கிழக்கு முகமாக திருப்புவதினால் யாதொரு தேவ பக்தியும் கிடையாது. ஆனால் அல்லாகுத் தாலாவின் பேரிலும், கியாமத்தின் பேரிலும், மலாயிக்கத்துகளின் பேரிலும், கிதாபுகளின் பேரிலும் ஈமான் கொண்டவனே உண்மையான மூமின்.”

அல்லாகுத்தாலாவின் மூகப்பத்திற்காக தன்னுடைய சொத்தை தன்னுடைய சொந்தக்காரனுக்கும், எத்தீம்களுக்கும், முசாபிர்களுக்கும், அவசியகமானவர்களுக்கும், இரப்போர்களுக்கும், கடு மீட்பதற்கும் கொடுக்கிறவர்கள்; தொழுகையாளிகள்; சக்காத்து கொடுப்போர்கள்; தாங்கள் ஒப்பந்தஞ் செய்து கொண்டபோது அதை நிறைவேற்றுபவர்கள்; கஷ்டங்கள், சிறுமைகள் ஆகிய இவை நேரிட்டபோது சபூர் செய்கி

வர்கள் ஆகிய இவர்கள்தான் நியாயமாய் நடப்பவர்கள், அல்லாகுத்தஆலாவிற்குப் பயந்து நடப்பவர்களும் இவர்களே.

பின்காணும் நீதிகளும் குர்ஆனேஷரீபில் வற்புறுத்திச் சொல்லப்பட்டிருக்கின்றன. அவையாவன—

மாதாபிதாவிற்குக் கீழ்ப்படிந்து நடத்தல், அல்லாகுத்தஆலாவை ஷுக்ர் செய்தல், உடன்படிக்கைகளில் உண்மையாயிருத்தல், சத்தியமாய் நடத்தல், பாரபட்சமின்றி ஞாயபரிபாலனஞ் செய்தல், வார்த்தையாடுவதிலும்கூட ஒழுக்கமாயிருத்தல், தூய்மையாயிருத்தல், அடிமைகளை மீட்குதல், பொறுமையாயிருத்தல், கீழ்ப்படிதல், பரோபகாரஞ்செய்தல், பிறர்செய்த துன்பத்தைமன்னித்தல், தீமைக்குப்பதிலாய் நன்மைசெய்தல், துனியாவிலுள்ள மனிதர்கள் புகழும்படி கருத்துவைக்காது அல்லாகுத்தஆலா தங்களுடைய அமல்களை யேற்றுக்கொள்ளும்படி நல்ல அமல்கள் செய்தல் ஆகியவைகளாம்.

குர்ஆனேஷரீபில் சொல்லப்பட்ட விலக்குகளில் பின்வருபவைகளும் சிலவாம்;

"அடிமைகளுக்கு வேண்டுமென்றே அநியாயஞ்செய்தல், தற்கொலைபுரிதல், வீண்செலவு செய்தல் ஆகியவைகள் விலக்கப்பட்டிருக்கின்றன. உண்மையான எல்லா மூமீன்களும் அகங்காரத்தை நீக்கும்படி கற்பிக்கப்படுகிறார்கள். மவுத்து சமீபிக்கிறவரையில் தௌபாசெய்வதை நிறுத்திவைப்பது [illegible]னவுங் கண்டிக்கப்பட்டிருக்கிறது." (ஸூரா-௪-௧௭-௨௯-௨௧)

தொழுகையானது உண்மையான மதகபிற்கு ஒழிவின்றியமையாத துணையென யெல்லா முஸ்லிம்களினாலும் கருதப்பட்டிருக்கிறது. இன்னும் முகம்மது சல்ல

ல்லாகூ அலைகிவசல்லம் அவர்கள், தொழுகையானது மிகவும் முக்கியமானதும் ஆவசியகமானது மென்றே “தொழுகையானது தீனுடைய தூணென்றும், ஜென்னதாகிய சுவர்க்கத்தின் திறவுகோலென்றும்” திருவுளமாகி வந்தார்கள்.

முகம்மது சல்லல்லாகு அலைகி வசல்லம[illegible] திருவுளம் போலவே, உண்மையாய் ஜேம்ஸ்மே[illegible] மரிஎன்பவரும சொல்லி யிருக்கிறார்

அதாவது.—தொழுகையானது ஆத்மாவின் உண்மையான விருப்பமா யிருக்கும். வாயினால் சொன்னாலுஞ் சரி, அல்லது மனதில் சிந்தித்துக் கொண்டாலும் சரியே; இன்னுமது மனதை நடுங்கச் செய்கிறதும் இறைந்து கிடக்கிறதுமான நெருப்பைத் தூண்டுகிறதாயிருக்கும்.

இன்னும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஹிஜ்ரி ஒன்பதாமாண்டில் தாக்கி பைட்ப் என்னும் கூட்டத்தார்கள் தங்களுவப்பான விக்கிரகத்தை அவர்கள் நீக்கிவிடவேண்டுமென உத்திரவானபோது, திட்டமான ஐந்தவக்த்தின் தொழுகையையாகிலும் மன்னித்தருளும்படி மிகவும் கேட்டுக்கொள்ளுகிறோமென்றார்கள்.

அப்போது நபிகல்லாகூ அலைகிவசல்லமவர்கள், அவர்களிஷ்டப்பிரகாரம் நடக்கக் கூடாதென மறுத்து தொழுகையில்லாத மதத்தில் யாதொரு நன்மையுங் கிடைக்க ஏதுவில்லையென திருவுளமானார்கள்.

உண்மையான மூமின்கள் அவசியம் தொழவேண்டுமென குர்ஆனெ[illegible]ல் அனேக ஆயத்துகள் விறங்கி

இருக்கின்றன-பின் காணும் ஆயத்துகள் மற்றவைகளுக் கோர் அறிகுறியாக எடுத்துக் கொள்ளலாம்.

"குர்ஆனேஷரீபிலிருந்து உமக்கு வெளிப்படுத்தினதை நீர் ஓதும்; தொழுகையில் நிலையாயிரும்; ஏனெனில், தொழுகையானது குற்றங்களையும், பாவங்களையும் நீக்கி விடுகிறது. இன்னும் அல்லாகுத்தஆலாவை சிந்தி செய்வது நிச்சயமாய் எல்லாவற்றிற்கு மேலான முக்கியமான கடமையாயிருக்கும்.

நிச்சயமாய், அல்லாகுத்தஆலாவா லிறக்கப்பட்ட குர்ஆனேஷரீபை ஓதுகிறவர்களும், தொழுகிறவர்களும், நாம் கொடுத்திருக்கிறதிலிருந்து பகிரங்கமாகவும் இரகசியமாகவும் தர்மஞ்செய்கிறவர்களும், அழிவில்லாத ஓர் வியாபாரத்தில் நம்பிக்கைவைக்கலாம்,, (அதாவது நிச்சயமாய் ஆகிரதில் லாபத்தையடையவார்கள்.) என்பதே

"உம்முடைய குடும்பத்தார்களுக்குத்தொழுகையை நற்பியும், அதிலேயே நீர் நிலைத்திரும்."

"ஆகையால் மாலைநேர மாகும் போதும், சுபகுநேரத்தில் நீர் எழுந்திருக்கும்போதும், அல்லாகுத்தஆலாவை மகிமைப்படுத்தும்; வானத்திலும், பூமியிலுமுள்ள சகலவஸ்துகளும் அவனையே புகழ்கின்றன. சூரியனஸ்தமித்தபோதும்,மத்தியான நேரத்தில் நீர் ஓய்ந்திருக்கும் போதும் அவனை மகிமைப்படுத்தும்."

* கல்விமானாகிய ஒருவர் [illegible] யிருக்கிறதாவது முஸ்லீமானவர்கள பகிரங்கமாய்த் தொழும்போது அதிவிசேஷபக்தியும், ஒழுக்கமு முள்ளவர்களாய்க் காணலாம். அவர்கள் தொழும்போது அவர்கள் வார்

*Lane, " Modern Egpyt" Vol. 1., P.120.

த்தையிலாவது, செய்கையிலாவது யாதேனும் ஓர் குற்றத்தையும் காணமுடியாது. (துன்யாவுடையகாரியங்களில்) நோக்கம்வைத்துச் செய்யும் தாழ்மையுள்ளவர்களாகவும், பலவந்தப்படுத்தப்பட்ட தோற்றமுள்ளவர்களாகவுங் காணப்படாது (மனப்பூர்வமாய்) தங்களைச்சிருஷ்டித்த கர்த்தாவாகிய அல்லாகுத்தாலாவின் வணக்கத்தில் முற்றும் மனமுழ்கினவர்களாயுக் காணப்படுகிறார்கள்.

குர்ஆனே மஜீதில் சொல்லப்பட்டிருக்கிற மேன்மைகளில் இரண்டு மிகவும் உன்னதமானதும் விளக்கமானதுமாம்.

அவற்றுள் முதலாவது.

அல்லாகுத் தாலாவை பற்றிப் பேசும்போதும், அவனைக்குறிக்கும்போதும், மற்றெந்த நேரமும் பயபக்தியுடனும், ஆசாரத்துடனும் மொழிவதா யிருக்கும்; அவனுடைய சிபத்துகளுடன் மனிதனுடைய நொய்மைத்தனத்தையும், [illegible]ணத்தையுஞ் சேர்த்துப் பேசப்படவேயில்லை, அதாவது [illegible] குர்ஆனே மஜீதில் அல்லாசுப்கானுகுத்த ஆலாவைப்பற்றிப்பேசும்போது, ரப்புல் ஆலமீன், அர்ரகுமானிர்ரகீம், மாலிகுயவ் மித்தீன் முதலிய அவனது கிருபை, அஜ்மத், வலுப்பம் முதலியவைகளை யெடுத்துக் காண்பிக்கும் வார்த்தைகளால் அவனது திருநாமத்தை, அதபுடனும் ஒழுக்கத்துடனும் திருவுளம்பற்றப்பட்டிருக்கிறது. இன்னும் குர்ஆனே [illegible] திருவுளம்பற்றப்பட்டிருக்கும் அவனது சிபாத்துகளிலெல்லாம் மனிதசுபாவ பலவீனம் (ளஅபுத்தபீ அதல்பஷரிய்யா) மனித சுபாவகுணக்குணம் (அக்ராலே நப்ஸானியா) ஆகிய இவை எள்ளளவேனும் சேர்க்கப்படாமல் அவை நீக்கப்பட்டிருக்

கின்றன. இவ்விதம் அந்தராயனைப்பற்றி குர்ஆனே மஜீதில் திருவுளம்பற்றப்பட்டிருப்பதுபோல அவ்வளவு சிறப்பாகவும் அதபாகவும் மற்றவர்கள் வேதமென்று சொல்பவைகளில் சொல்லப்படவில்லை. என்பதே.

இரண்டாவது.—நீதிதப்பானவையும், அனுச்சாரமானவையுமானவாக்கியங்கள், கிஸ்ஸாக்கள்முதலானவைகளும், தோஷங்களும்குர்ஆனேமஜீதில்ஒன்றுங்கிடையாது. ஆனால்கிறிஸ்தவர்கள் பழயவேற்பாடு(தவ்ரோத்)என்றுசொல்லப்பட்டதில்தோஷங்கள் அளவளாவிநிறைந்து கிடைப்பதைப்பார்க்கமிகவும்விசனகரமாயிருக்கின்றது. மறுக்கக்கூடாத இத்தோஷங்களில் நின்றும் குர்ஆனே ஷரீபை ஓர் சிறிதும் திருத்தவேண்டிய அவசியமில்லை. (அதன் ஆரம்பத்தி லிருந்து முடிவுவரையில் ஓர் சிறிய கரும்புள்ளியான குற்றத்தையும் காண முடியாது.) மேற்படி கிறிஸ்தவவேத புத்தகத்தை வாசிப்பதனால் ஒழுக்கமுடைய கிறிஸ்தவர்களாயினும் தங்களுடைய கன்னங்களில் [illegible]யும் நாணசிவப்புண்டாகும்: அவ்வி[illegible]ம்சிறித[illegible]னும் உண்டாகாது குர்ஆனே மஜீதை ஆரம்பத்திலிருந்து முடிவுவரையில் வாசிக்கலாம் * (அதாவது மிகவும்ஆசாரமும் ஒழுக்கமும்தப்பாதுமுள்ளகிறிஸ்தவர்களாயினும் மேற்கண்ட தங்கள்வேதபுத்தகத்தைவாசிக்கும்[illegible] அதில் பலஆபாசமும்,தோஷமுமுள்ளவாக்கியங்கள்,சரித்திரங்கள் முதலியன அடங்கி யிருப்பதைக் கண்டவுடன் அவர்கள் நாணமடையாதிருக்கக்கூடவில்லை. அவர்கள் அப்படி வெட்கப்பட்டவுடன் அவர்கள்முகம் சிவந்து போகிறது. ஆனால் குர்ஆனேமஜீதில் ஆரம்பத்திலிருந்து முடிவுவரையில்

* "Mahomed and the Koran", Davenport

ஓர் சிறிதளவேனும் அவ்விததோஷங்கள், குற்றங்கள் முதலியவை யில்லாதிருப்பதால் குர்ஆனே மஜீதை வாசிக்கும் எவரேனும் காணமடைய ஏதுவில்லை. ஆகையால் அவர்கள் கன்னங்கள் சிவக்கவுமிடமில்லை. என்பதாம்.

இன்னும் அனேக (ஐரோப்பிய) ஆசிரியர்கள் (மூலைன்விபுகள்) குர்ஆனேஷரீபைப் பற்றியும், அதில் சொல்லி இருப்பவைகளைப் பற்றியும் வெகுவாய்ப் புகழ்ந்து சொல்லி யிருக்கிறார்கள், அவர்களில் * ஒருவர் தன் கருத்தைப் பின் வருகிறபடி வெளிப்படுத்தியிருக்கிறார்.

"அதிஷ்டவசமாய்ச்சரித்திரங்கள்முற்றிலும் மூகம்மது சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்களுக்குச் சமானமானவர்க ளொருவரு மில்லை; சாதி, இராஜாங்கம், மதம் ஆகிய மூன்றையும் ஸ்தாபித்ததில் அவர்கள் தமக்கு ஒப்பில்லாத ஏகத்துவமானவர்கள்."

தாங்கள் உம்மியா (கற்பிக்கப்படாதவரா) யிருந்தும் அவர்கள் ஓர் கித்தாபிறகு ஆ[illegible] விருந்தார். அக்கிதாபோ செய்யுளாகவும், [illegible] நூலாகவும், தொழுகைகளிலும், துஆக்களிலும் ஓதும் ஓர்ஜப புத்தகமாகவும், முகத்தல்ஸான ஓர் கிதாபமாகவுமிருக்கிறது.

இன்னுமது உண்மை, [illegible]ம், பரிசுத்தமான வாசகநடை யாகிய இவைகளில் ஓர் அற்புதமான தென லோகத்திலுள்ள சனத்தின் முழுத் தொகையில் ஆறிலொரு பாகத்தாரால் இன்றைக்கும் கனப்படுத்தப்படுகிறது. மூகம்மது சல்லல்லாகு அலைஹிவசல்லம் குர்ஆனேஷரீபை ஓர் முஅஜிஜாவென உரிமைபாராட்

* The life of Mohamed," by Bosworth smith, p. 343.

டினார்கள் (தஅவாச்செய்தார்கள்). அது தன்னுடைய காமிமான (முஅஜிஜா) அற்புதம் என்றார்கள், உண்மையாய் அது ஓர் அற்புதமே.

பாப்புலர் என்ஸைகுளோபிடியா என்னும் கிரந்தத்தில் நான்பின்வருபவைகளைக் காண்கிறேன்:—

"குர்ஆனேஷரீபின் பாஷாந்தரம் யாதொரு கலப்பற்ற பரிசுத்தமான [illegible]யிருக்கிறது—அதின் வாசகநடையானது மனதைக்கவரத்தக்கதாகஇருப்பதுவும், அதின்செய்யுளலங்காரமும் இந்நாள்வரையில் ஒப்பற்றதாகவே இருக்கின்றன. அதில்சொல்லப்பட்டிருக்கிற நீதிகற்பனைகள் சுத்தமானவைகள்; இயாதாமொருவன் அக்கட்டளைகளை கண்டிப்பாயனுஷ்டித்து வருவானேயாகில் (சந்தேகமின்றி)பரிசுத்தனுவான்."

ஹெர்பர்ட் என்பவரின் பிரசங்கங்களில் பின்வரும் வாக்கியங்களிருக்கின்றன:—

"இஸ்லா[illegible]தின் சட்டங்களில் மிகவும் உன்னதமான நீதிகற்பனைகள் அட[illegible]ருக்கின்றன; அக்கட்டளைகளை வழக்க[illegible]து யெ[illegible]டுத்து அவற்றின் அனுஷ்டானத்தை [illegible]ப்படியாய்நிலை நிறுத்தி சித்தியாக்குகிற சாமர்த்தியமே யெல்லாவற்றைப் பார்க்கிலும் அதிக ஆச்சரியப்படத்தக்கது."

மகாசாமர்த்திய முள்ள* ஓர் கிறிஸ்தவ குரு சொல்கிறார்.

"கிறிஸ்துவேத சட்டத்தினல்கிறிஸ்துவர்களுக்குண்டாகும் நற்காரியங்களைப் பார்க்கிலும், குர்ஆனே ஷரீபின் சட்டமானது யாதொரு சந்தேகமின்றி நற்காரியங்களில் அதிக ஆழ்ந்தகருத்தை யுண்டாக்குகிறது."

* Dean stanely, "Eastern Church" page 279.

விதிவாதமும் (தக்திரும்), இஸ்லாமும் ஏகார்த்தபத மென குற்றஞ்சாற்றி யெடுத்துக்கூறி இஸ்லாத்தின் பகைவர்கள் சந்தோஷங் கொண்டாடுவது வழமை.

ஆனால் இவ்விஷயத்தைப்பற்றி பேசுகிறசனங்களுக்குள்ள பெரும்பிடிவாதமும் தெரியாமையுமே அவர்கள் கருத்திற்கு அத்தாக்ஷியென நான் சொல்லமாட்டுவேன்.

முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லமுடைய சரித்திரமும், குரானேஷரீபும், விதிவாதமானது முற்றும் வீணாய் உண்டாக்கப்பட்ட வொன்றென நிரூபிக்கின்றன; அவ்வித கட்டுகளிலிருந்து முக்கியமாய் காப்பாற்றிக்கொள்ளும்படிக்கு ஒருதடவையல்ல அனேகந்தடவை வற்புறுத்திச்சொல்லி முகம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லம் தங்களாற் கூடியவரையில் அதை உறுதியாய் மறுத்து வந்திருக்கிறார்கள்.

மேற்கண்ட விஷயங்களை [illegible]லும், மிகவும் வல்லவர்களான கிறிஸ்தவ பண்டிதர்க[illegible]ல் நிச்சயப்படுத்த மாட்டுவேன். அவர்களாவெ[illegible]ன:—

அனிலோற்பன்ன சாஸ்திர சபையின் அதிகாரியும்; கிறிஸ்தும்தமும்; அதின் தத்துவஞான மூலாதாரமும், அதன்விரோதிகளும் என்னும் பேருடைய கிரந்தத்தின் கர்த்தாவுமான ஜான் ஜோஸெப் லேக் (John Joseph Lake) என்பவரும் மகா கல்விமானாகிய டாக்டர் டியூட்ச் (Dr. Deutsch) [illegible]ன்பவருமே.

முடிவாக [illegible]ாவத்திற்கும்[illegible]திலாய் பிரதி [illegible]ியாகத்தின் (கபாராவாகும்) கொள்கையை குரானே[illegible]ரீபான

துவிலக்குகிறதென நான் நிரூபிக்கக்கூடும். ஆனால் ஒவ்வொருவரும் தன்னுடைய அமல்களைக்குறித்துத் தானே நேரே அல்லாகுத்தாலாவிற்குக்கணக்குக்கொடுக்கவேண்டு மென்கிற சாதாரண (மஸ்அலாவை) சங்கைதனை அது வெளிப்படையாய்க் கற்பிக்கிறது. அந்நாயன் எவ்வோர்க்கொத்தவனெனில் "சர்வஞானமும், சர்வசக்தியுமுள்ள அல்லாகுத்தாலாவாயிருக்கும்; நீங்கள் செய்யும் அமல்களில் எதேனும் ஓர் சிறிய பாகத்தையும் உங்களுக்கு அவன் மோசஞ் செய்யான்; அவனுங்களை மன்னிக்கவும், உங்களுக்கவன் கிருபையுள்ளவனாயிருக்கவும் அவன்பிரியமுள்ளவன்.*" மீட்சி (கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டதனால் துன்யாவின் பாவங்களெல்லாம் நிராகரிக்கப்பட்டனவென்னும் அகிதா). சீர்ப்படுத்தல் அல்லது மனந் திரும்புதல் என்று கிறிஸ்துவர்களாற் கற்றுக் கொடுக்கப்பட்ட இரகசியம் விண்பக்தி ஆகிய இவற்றின் சுமையை ஓர்பக்கமெறிந்துவிட்டு, ஒவ்வொருவரும் தன்னுடைய பாவத்திற்குத்தானே கணக்குக்கொடுக்க வேண்டுமென்னும் பாடத்தையும், மன்னிப்பு அடைய வேண்டுமென்பதையும், சுவர்க்கலோகத்தில் சேர்த்துக் கொள்ளும்படி தாங்களே தகுதியானவர்களாகவேணு மென்பதையும் ஒவ்வொருவர் பேரிலும் குர்ஆனேஷரீபானது உரித்தாக்குகிறது. (பாளாக்குகிறது)

இன்னு மிதுவேபோல பெண்களுக்கு ரூகூ (ஆத்மா) இல்லையென முஸ்லிம்கள் நம்புகிறதாகவும், அவர்கள் மவுத்தாவார்களேயானால் அறிவில்லாத மிருகங்களைப்போலமறுலோகத்தில் (ஆகிரத்தில்) அவர்களுக்கு யாதொரு பிர

---

* சூரா-௪௬

தியும் (ஜஸா) கொடுக்கப்படாதென முஸ்லிம்கள் நம்பு
கிறதாகவும் இவ்விஸ்வாத கருத்து கிறிஸ்துவர்களுள்
உண்டு; இக்கொள்கையானது உண்மையான மூமின்க
ளினால் ஏற்றுக்கொள்ளத்தக்கதன்று.

ஆனுலிதற்கு விரோதமாய் ஸ்திரிகள் மறுலோகத்
தில் அவர்கள் செய்தபாவங்களுக்காக தெண்டிக்க
ப்படுவதுமாத்திர[illegible] அவர்கள் (செய்த) நன்மை
க்காக ஆண்பிள்ளைகளைப்போலவே அவர்களுக்கும் [illegible]
தி(ஜஸா) கொடுக்கப்படுமென்றும், அல்லாகுத்தாலா
ஆண்பெண் என்று சாதி வித்தியாசம் பாராட்டானென்
றும், குரானேஷரீபில் அனேக[illegible]துகளிருக்கின்றன.
குரான் ௩-௪-௰௩-௰௯-௪௦-௪௮-௫[illegible]

இஸ்லாமார்க்கமானது எல்லை [illegible]டந்தவிதமாய் வா
ளையுபயோகித்ததினுல் கொள்ளப்பட்ட மார்க்கமென்
று குற்றஞ் சாற்றப்பட்டிருக்கிறது. இதைவிட மேலா
னகட்டுவார்த்தை ஒருபோதும் கிடையவே கிடையா
து. இஸ்லாமானது வேறுமத சித்தாந்தங்களோடு ஒரு
போதுங் குறுக்கிட்டதேயில்லை. இஸ்லாம் மதகபானது
தன்னில் சேர்த்துக்கொள்ள ஒருபோதும் கொலைசெய்
யவுமில்லை. மதகோட்பாடுகளை விட்டு நீங்கினவர்களை
விசாரிக்கும்சங்கத்தை ஸ்தாபிக்கவுமில்லை; பலவந்தமா
ய்பிறரைத் தம்மதத்தில் சேர்த்துக்கொள்ள முயலவைக்
கவுமில்லை.

முஸ்லிம்களுடைய சித்தாந்தமானது (அகீதா) குரா
னேஷரீபின் கட்டளையின்படியென்பது திண்ணம். குரா
னே ஷரீபு இரண்டாவது சூராவில் சொல்லப்பட்டிரு
க்கிறது "மார்க்கத்தில் பலவந்தம் வேண்டாம்". ஆகை
யால் இஸ்லாமானது ஒருபோதும் கொஞ்சமும் பலவந்

தஞ் செய்யாது தன்னுடைய மார்க்கத்தை வெளிப்படு த்தினது.

ஷாட்பீல்ட் என்பவர் ஹிஸ்டாரிகல் ரெவியூ ௲௯௯ம் பக்கத்தில்சொல்கிறார் "ஐரோப்பியசுதேசிகள் குராஜே ஷரீபைப்பின்பற்றினவர்களை நடத்தினதுபோல, அறபி கள், து க்கிகள், மற்றும்மகம்மதிய சாதியார்கள் ஆகிய மூ லிம்கள், கிறிஸ்துவர்களை நட த்தி இருப்பார்களே ய ஞல் கீழ்த்திசையில் கிறிஸ்துவப் பூண்டுகளொன்று மில்லாமல் கருகிப்போயிருக்கும்."

மிஸ்டர்ஜ லிகியோ சொல்லுகிறார் "உண்மையான மூ மின்களுக்கு போப் சேர்ந்த(கிறிஸ்த்த)வர்கள் செ ய்தகொடுமையானது, அறபிகள் கிறிஸ்துவர்களுக்குச் செய்தகொடுமைக்கு ஒப்பிடாவிதமாய் அவ்வளவு அனி யாயமானதென நிச்சயமாய்ச் சொல்லலாம்".

(கிறிஸ்தவர்கள் தங்களுக்குள்ளேயே தங்கள் மதத் திற்காக நடத்திய) வாதோயிஸ், சண்டையில் அல்லது சென்று பார்த்தலோ மீயோ வெகுஜனசங்காரத்தில்மா ம் சிந்திய இரத்தமானது, அறபிகள் கிறிஸ்துவர்க ளை பலவிஷயத்திலும், கொலைசெய்த இரத்தத்தை எல் லாம் ஒன்றாய்ச் சேர்த்த அளவைப்பார்க்கிலு மதிக அளவானது:—

முகம்மது மார்க்கமானது கொடூரமானதென்றும், ம னிதர்கள் தங்களிஷ்டப்படி கொலைசெய்யப்பட்டதனுல் அல்லது இஸ்லாம்மதத்தைப் பிடிவாதமாய்த் திணிவி ட்டதனுல் பரவப்பட்ட மார்க்கமென்னும் தப்பெண்ண த்தையுடைய மனிதர்களை திருத்தவேண்டியது ஆவசி யகமாயிருக்கிறது. இதுஒருபோதும் உண்மையேயல்ல, ஈரமாமிச பக்ஷணிகளுடைய கொடுமைகளாய் பார்க்கி

னும் விசேஷித்து போப்பையர்களுடைய கொடுமையையும், அறபிகளுடைய நடத்தையையும் ஒத்துப் பார்க்குங்கால் அறபிகளுடைய செய்கையே மிகவும் நன்மையும் சந்தோஷகரமுமானது.

முடிவாகக் கார்லைல் என்பவர் இது விஷயத்தில் காட்டிய நியாயம் மிகவும் சரியானதாகவும், மறுக்கக்கூடாததாகவும், வலிவுள்ளதாகவும், இதற்கு முன் இத்தகைய நியாயம் இதில் காட்டப்படாத தாகவும் இருக்கின்றமையால் இதை யெடுத்தெழுதாமல் விட்டுவிட மனங்கொள்ளவில்லை. "முகம்மது ... லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் மார்க்கத்... கத்தியைக்கொண்டு பரவச்செய்ததாக வெகுவாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனபோதிலும் இது ஒரு மதத்தைப்பற்றிக் கூறிய உண்மை அல்லது பொய்யென் விகாரத்தின் பொருட்டுக்கொள்வோமென்றாலும், இதன் மூலாதாரமே முற்றும் பொய்யாக விருக்கின்றது. (மதம் பரவினது) நிச்சயமாய் கத்தியைக் கொண்டேயா? ஆனால் உனக்குக் கத்தியேது! ஒவ்வொரு மார்க்கமும் ஆரம்பத்தில் முக்கியமாய் ஒரே ஒருவனுடைய அபிப்பிராயந்தானே. ஒருவனுடைய கவனத்திலே அது இன்னும் இருக்கின்றது. உலகத்திலுள்ள சகலரினும் அவ்வொருவனே நம்புகின்றான்; ஆகலால் அவ்வொருவன் எல்லாருக்கும் எதிரியாகின்றான். இப்பேர்ப்பட்டவன் ... (ஒரு) கத்தியைக்கொண்டு தன் மதத்தை யெல்லார்க்கும் பரவச்செய்தல் அசாத்தியமான காரியம். முதலில் கத்தியைசம்பாதித்துக்கொள்ள வேண்டியது. சாதாரணமாய் ஒரு விஷயம் தனக்குத்தானே தன்னால் இயன்றவரையில் பரவவேண்டியது.

கிறீஸ்துமதங்கூட, தனக்கொரு கத்தி கிடைத்திருந்தபோது எங்காலும் அந்தக் (கத்தியை) பிரயோகிக்காதிருக்கவில்லையென நமக்குக்காணப்படவில்லை. சாக்சானியரை சார்லமாக்ன் (சக்கரவர்த்தி) (கிறிஸ்து) மதத்திற்குட்படுத்தினது போதனையினாலல்ல. கத்தியைப் பற்றியெனக்குச்சிந்தனையில்லை. இந்தஉலகத்தில் யாதானும் ஓர் விஷயம் கத்தியைக்கொண்டாவது, நாவைக்கொண்டாவது, தனக்குரிய அல்லது தான் கைவசப்படுத்தக்கூடியவேறெந்த ஆயுதத்தைக்கொண்டாவது தனக்குத்தானே யுழலும்படி விட்டுவிடுவேன், கடைசியில் யாதொன்று வெல்ல[illegible]க் கூடாததோ அது வெல்லப்படப்போகின்றதில்லையென்பது எமக்கு நன்றாய்த்தெரியுமாதலால், ஒன்[illegible]றவாயினும் போதிக்கவும், பத்திரிகையால் பிரசுரிக்கவும், அதை யேற்றுக்கொள்ளும்படி சண்டை செய்யவும், அது தன்னாலாகிய ஒவ்வொன்றும் செய்யவும், மூக்கினு[illegible]குத்தவும், நகத்தினாற்கீறவும் விட்டுவிடுவோம். அது தனக்குத் தாழ்ந்த[illegible]யல்லாமல் [illegible]ந்ததை ஒருக்காலும் வெல்லமாட்டாது. இந்த சண்டைக்குப் பிரபஞ்சமே சாக்ஷி; அது ஒரு கெடுதியுஞ்செய்யாது. பிரபஞ்சத்தில் ஆழ்ந்துவேரூன்றியுள்ளதும், நாம் உண்மை யென்று அழைக்[illegible]க்கதும் எதுவோ அது மாத்திரமே கடைசியில் விர்த்தியாகப்பார்ப்போம்.''

இஸ்[illegible] மதகபானது சமத்துவமும், அமா[illegible]யுடை[illegible]தாதலால் நான் அதை உரிமைபாராட்டுகிறே[illegible] [illegible]பபாசாரக்கள்ளர்களை (முனிகுகளை)ப்பற்றிநமக்கு ஆவசியகமில்லை; நமதுகூட்டத்தில் கா[illegible]த்திற்குத்தக்கபடி நடப்பவர்கள் சேர்க்கப்படார்கள், வெளிவேஷங்

காட்ட நமக்கு காலமும் போதாது; அதில் நமக்குப் பிரீதியுமில்லை. நம்முடையமதகமே நமது பிராணன் (ஹயாத்.)

கார்லைல் என்பவர் ஊடுருவிச்செல்லும், தமது புத்தி கூர்மையினால், நம்து நபி முகம்மது சல்லல்லாகூ அலைகிவசல்லம் அவர்களுடையவும், அவரைப்பின் தொடர்ந்தவர்களுடையவும், தன்மையையுணர்ந்து அறிந்து அடியிற்கண்டபடி குறிப்பிக்கின்றார். "முகம்மது சல்லல்லாகூ அலைகிவசல்லம் அவர்கள் எவ்வாற்றானும் கிலேபிசகாதிருக்கிறபடியால் அவர்களை நான் நேசிக்கிறேன், அவர் உள்ளதையுள்ளபடி செய்[illegible] சுயமுயற்சியாளர்; இல்லாததையிருக்கிறதாய்ப் பாசாங்கு செய்கிறவரல்லர். அவரிடத்தில் ஆடம்பரமான பெருமை அற்பமுங்கிடையாது; ஆயினும் அடக்கத்[illegible]லும் நிந்திக்கத்தக்கவிதமாய் அடக்கமுமுடையரல்லர். அவர் தன் [illegible]ந்தஸ்திற்[illegible]க்கபடி எப்படியிருக்கவேண்டுமோ அப்படியிருப்பவர்; பாரிஸ்ஃதேசத்து அரசர்களானாலும் சரியே, [illegible]ஹூன் தேசத்துசக்கரவர்த்திகளானாலும் சரியே, அவர்கள் செய்யத்தக்கதெதுவோ அதை ஒளிக்காமல் சரியாய்ப் பேசுவார். அவர் தம்மை நன்றாயுணர்ந்தவர். அல்லா சுபகானகுதாஆலாவை அறியாததை (இக்ராமை) [illegible] உணர்ந்தவர், அவர் சந்தோஷப்பிரி[illegible]ரல்லர். அறிவில்லாத (காமிமான) சந்தோஷமும் துக்கமும் சுவர்க்கத்தையும் நரகத்தையும் [illegible]சரித்தே தென்று நடக்கத்தக்கவர். இவ்விஷயத்தில் நீங்காத ஆவலுங்கவலையுமுடையவர்.

மாபாதகங்களாகிய சந்தோஷப்பிரியம், [illegible]சம், கற்பனை, தக்க பயிற்சி யில்லாது உண்மையைத்தேடும் ஓர் விதசாதனம், உண்மையை விஜே

யாட்டாகவும் இலேசாகவும் கருதுதல் ஆகிய இவை யோர் பெரும்பாவம், நினைப்பினால் நினைக்கக்கூடிய பாவங்களுக்கெல்லாம் இஃதோர் மூலம், பகிரங்க உண்மையாகாமல் மனிதனுடைய மனதிலும் (கல்பிலும்) ஆன்மாவிலும் (ரூஹிலும்) அடங்கியிருக்கின்றது இந் தடம்பம். இப்பேர்க்கொத்த மனிதன் பொய் புனைசுருட்டு பேசுவதுமல்லாமல் அவனே பொய்யாக விருக்கின்றான். மனிதருக்கிருக்கவேண்டிய நீதிநெறியாகிய பாவொளியின் அமிசம் அவனுக்குள் ஆழ அமிழ்ந்து ஸ்தம்பித்துப் பிராணனுள்ள பிணம்போல் இருக்கின்றது.

(மேற்கண்ட துர்க்குணங்களெல்லா மில்லாத முகம்மது சல்லல்லாகூ அலைகிவசல்லம் அவர்களின்) இஸ்லாம் மார்க்கமானது (முன்னுள்ள) பெரியமார்க்கத்தைப்போலவும், மனிதசத்துவத்தின் அகக்கண்போலவும் இருந்து முற்றும் சமத்துவம் பாராட்டத்தக்கது. ஒரு மூமினுடைய நியாயதானது துன்யாவின் எல்லா அரசாங்கத்திலும் மேலானதாயிருக்கிறது; இஸ்லாமின்படி தாவது படியும் எல்லா மனிதர்களும் சமத்துவமுடையவர்களே. மொத்தார்த்தமாய்ப்பார்க்குமிடத்தில், முகம்மதுசல்லல்லாகூ அலைகிவசல்லமவர்களின் இந்த இஸ்லாம் மதமானது ஓர்வித ஈஸாயிமதமாயிருக்கிறதென்றும், ஆத்மார்த்த(ரூஹானிய்யத்த)விஷயமாய்ப் பார்க்குமிடத்து எல்லாவற்றைப்பார்க்கிலும் மேலான (அகீகத்) மதமென்றும் இரண்டாந்தடவையும் சொல்கிறேன். இந்த பன்னிரண்டு நூற்றாண்டுகளாக உலகத்திலுள்ள எல்லா மனிதர்களிலும் ஐந்தில் ஒருவருக்கு மதமாகவும் ஆத்மார்த்தமாகவும் இருந்திருக்கிறது. யாவற்றிற்குமேலாக, இம்மதமானது மனப்பூர்வமாய் நம்பப்பட்ட ஓர் மதமாயிருந்திருக்கிறது

இந்த அரபிகள் ...ங்கள் மார்க்கத்தில் ஈமான்கொண்டு அதனால் ஜீ...க்க முயல்கிறார்கள். தற்காலத்துள்ள இங்கிலீஷ் பு..ரிடன் கிறீஸ்தவர்கள் தவிர, பூர்வகாலந் தொடங்கி ஒருகிறீஸ்தவர்களும், இஸ்லாமானவர்களைப் போல, தங்கள் மதகயிலேயே முழு ஈமானோடு காலாகாலம்(காயிமாய்)எப்போதும் நின்றதில்லை. காஹிராபட்டணத்தின் வீதியிலுள்ள காவலாளி,வழிபோக்கனை ..கொக்கி யார்போகிறதென்று கேட்டால் அதற்கவன்கொடுக்கும் உத்தரவோ— "...லாஇலாஹ இல்லல்லாஹு" (அல்லாவைத்தவிரவேறொரு நாயனுமில்லை) என்று மறுமொழி கூறுவதை யின்றிரவிலுங்கேட்கலாம்.

அல்லாஹு அக்பர்! இலக்ஷக்க...க்கான இஸ்லாமாகிய இவர்களின் ஆத்மாவிலும்(ரூஹிலும்),அவர்களின் திறுனுசாரவாழ்க்கையிலு மெல்லா... இஸ்லாமேசப்திக்கிறது. மலாய்க்காரர்கள், கறு... ...னியர்கள், கொடிய விக்கிரக ...ராதனிகள் ஆகிய இவர்களுக்கு,ஹிமாயத்துள... ...ர்கள் இஸ்லாத்தைப் போதி...து, திமையானவைகளை யெல்லாம் ஒழித்து அந்த ஸ்தானங்களில்நன்மைகளை ஸ்தா...த்து வருகிறார்கள்.

இஸ்லாத்தின் அதிகாவானது இத்தன்மை யுடையதாயிருக்கிறது. ரசூல்மார்களில் மிகமே...னவரும் (உலுல் அஜ்மானவரும்) கதமுல் அம்பியா...னவருமான, ஜனாப்சர்வரே ஆலம் முகம்மத் மு... ...சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் கற்பித்தபடியே இன்னும் நடப்பவர்களும், நாளொன்றிற்கு ஐந்து வக்தும் சர்வ வல்லமையுள்ள அல்லாகுத்த ஆலாவை முழுஈமானோடு தொழுபவர்க..ருமான, க௮0,000,000 சனங்களுடைய ஈமான் இத்தன்மை யுடையதாயிருக்கிறது.

இசுலாமானது மெக்ஸிகோ(மக்ரிப்)தேசமுதல் ஆபிரிகா வடகரையோரத்திலும், தென்பாகத்தில் டிரான்ஸ்வால், ஜான்ஜிபார் முதலிய இடங்களிலும் பரவியிருக்கின்றது. இந்த மதிகடானது எகிப்து (மிஸர்), துருக்கி (ரூம்), அராபி (அரபஸ்தான்) பாரஸிகம், ஆப்கானிஸ்தான், துர்க்கிஸ்தான் முதலிய தேசங்களில் ராஜாங்கம் செய்துவருகின்றதுமல்லாமல் இந்தியாவில் சக,000,000 மூமின்களிருக்கின்றார்கள். இம்மார்க்கமானது மலாயிக்காரர்களுக்கும் [illegible] போதிக்கப்பட்டிருக்கின்றது. சீனதேசத்திலும் இஸ்லாம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. மற்றுமுள்ள உலகத்தின் எல்லாப்பாகங்களிலும் போதகாசாரியர்கள் (மவுல்விகள், ஆலிம்கள், வாகிஸ்கள்) சென்று இதைப்பரவச்செய்து வெற்றியடைந்து வருகிறார்கள்.

இந்த ச[illegible]த்தை அனுபவிக்க வேண்டிதான் இங்கிலாந்திலுள்ள நமது சுதேசிகளை யழைக்கின்றோம். இந்தமதகடைத்தான் அவர்க[illegible]கொள்ளும்படி சொல்கிறோம். தந்திரமுள்ள மதசாஸ்திர பாதிரிமார்கள் தலைமுறைகள்தோறும் ஜனங்கள் மனதில் பதிந்து வைத்திருந்த மதப்பொருமையை ஒருபுறங் கட்டிவைக்கும்படி சொல்கின்றோம்.

ரகசியமென்று மதங்கள் கூறுகின்ற பிரத்தியக்ஷ மூட நியாயமே போதுமான தென திருப்தியடைவதைவிட்டு நீங்கும்படியுங் கேட்டுக் கொள்கிறோம். ஆதிகர்த்தருக்குச் சர்வ வல்லமையுள்ள அல்லாகுத்தஆலா வெளிப்படுத்தின லகுவாயறியத் தக்க அகிதாவின் மேன்மையான ஒழுங்கில் ரகசியம் (இஸ்ரார்),மயக்கம், மாயங்கள் ஆகிய ஹீலாக்களெல்லாம்) ஒவ்வாத விஷயமாயிருக்கும்.

மனுஷீதமும் அசாதாரணமுமான விஷயம் அவசியம் சந்தேகத்தையும் அவநம்பிக்கையையு முண்டுபண்ணி, சிலவேளை உண்மையான விசுவாசிக்கும் மயக்கத்தையுங்கொடுக்கும். இதுகளிலெல்லாம் விசேஷமாய்ப் பயப்படத்தக்கது மத விசுவாசமே; ஏனெனில் இம்மத விசுவாசத்தின் சம்பவங்கள் அதிக பாரமானதாகவும் அதன் தவறுதல் ஆபாசம் ஆகியவைகளின் முடிவான பல கெடுதிகளாகவும் இருக்கிறமையாலேயே. நாம் தெரிந்துகொள்ள வேண்டிய முக்கியமான விஷயம் யாதெனின் நமது ஆன்மசுபாவமும், அல்லாஹுத்த ஆலாவின் நியமனமுமேயாம். இஸ்லாம் மார்க்கமே இதற்கு வெகு லேசில் பதில்சொல்லும். (மனிதர்களினால்) ஆராய்ந்தறியக் கூடாதவனும் சர்வக்கியானியுமாகிய அல்லாஹுசுபகானஹுத்த ஆலாவின் சித்தத்திற்கு (இராதத்திற்குக்) கீழ்ப்பணிந்து நடக்கும்படி மனிதனுக்கு (இஸ்லாம்) போதிக்கின்றது. அல்லாஹுசுபகானஹுத்த ஆலாவினிடமிருந்து நீங்கள் வந்திர்கள், அவனிடமே மறுபடியும் நீங்கள் போதல்வேண்டும். மனிதருடைய எல்லா அவா, மனித ஏற்பாட்டிற்குக் கவலைகொள்ளல் அல்லது சுய நலம், பிரஸ்தாபம் ஆகிய இவற்றின்மேல் விருப்பமுறுவதை ஒழித்தல் வேண்டும். அல்லாஹுசுபகானஹுத்த ஆலாவின் தீர்மானமானதும் மிகவும் மேலானதுமான *சொல்லமறுத்து, உண்மை, நீதி ஆகியவைகளின் வெளிப்படையானதும் நேரானதுமான வழியைவிட்டு தப்பிப் போகும்படி செய்யும் மற்றெல்லா ஏற்பாடுகளையும், எல்லா இரகசிய மார்க்கங்களையும் அவையெவ்வளவு விசேஷித்ததாகவும் புகழத்தக்கதாகவும் இருப்பினும், அவற்றை ஒழித்தல் வேண்டும்.

* குர் ஆனேஷரீபை.

ஆனால், மனிதநம்பிக்கைக்குத் தாங்கொணாத பொறுப்பை நீங்கள் ஏற்றுகின்றீர்கள் என்றுவாதிக்கல் கூடும். தற்காலத்திய உபந்யாசி யொருவர் சொல்வதுபோலவே நம்பிக்கையில் யாதொரு பிரயோசனமுமில்லையென்று சொல்கின்றவர்கள் யாரோ அவர்கள் தங்கள் சொந்தவார்த்தைகளின் பயன் இவ்வளவென்று அளந்தறிய மாட்டார்கள். மனிதனுடைய நம்பிக்கை எந்த பூமியில் மதிக்கப்படவில்லை வர்த்தகம் நடக்கும் இடங்களில் ஒருபோதும் மதிக்கப்படாமலிராது, ஏனெனில் அவ்விடங்களில் மனிதனுடைய நம்பிக்கை அவனுடைய ஜெயாபஜெயத்திற்குப் பொறுப்பாயிருக்கின்றது. அறிஞே சகலத்தையும் புத்தியீனமாய் நம்பத்தக்கவனும், தன்முதலை நஷ்டமும் இடையூறும் கெடுதியும் சம்பவிக்கத்தக்க விஷயங்களில் செலவழிக்கக் கூடியவனுமாக விருக்கின்றான். அவன் பீதியால் அவநம்பிக்கையுடையவனும், உண்மை இருதயமுடையவர்களுக்கும் தைரியத்தோடு நம்பி தொழில்புரிபவர்களுக்கும் வெற்றிக்கு வழிதிறக்கத்தக்க சந்தர்ப்பத்தை இவன் இழப்பவனாகவும்இருக்கின்றான். சாஸ்திரிகளிடத்தும் கல்விமான்களிடத்தும்மட்டுமே ஆதாரமில்லாமல் நம்புதல்கூடாது, ஏனெனில் ஆதாரமில்லாமல் உத்தேச அளவில் நிற்கின்ற விவகாரம் நியாயஒழுங்கைக் கெடுக்கும். மனிதனுடைய சதாசாரண உலகவழக்கில் அப்பாதிய விஸ்வாசம் கெடுதியைத்தரும், எப்படியெனில், காரணத்தைத்தெரியாமல் உட்கொண்டு விட்ட நாவியானது தப்பாமல் உயிரைக் கொல்லும். எந்த சந்தர்ப்பத்தில் மனிதன் ஒன்றை நம்பி நடத்துகின்றானோ அந்தநம்பிக்கை உண்மைக்கு ஒத்திருக்க வேண்டும்.

டாக்டர் மாட்ஸ்லி என்பவர் சொல்நயமும் பொருள் நயமும் அமைய உள்ளபடி அடியில் வருமாறு சொல்லியிருக்கின்றனர் :—

"திரிகரணசுத்தியோடு அல்லா சுபகானு குத்த ஆலாவினிடத்து நாம் நடந்துகொள்ள வேண்டுமென்னும் விஷயத்தை ஒவ்வொருவனும் வழுவாமல் தன் முக்கியமான கோட்பாடாக அமைத்துக்கொள்ளவேண்டும்; அவ்வாறு நடந்துகொள்ளும் குணத்தை ஒவ்வொருவனும் இயற்கையில் அடைந்திருக்கவேண்டிய குணமாயிருப்பது போலவும், நாளாவர்த்தியில் பெருமையுடன் அடையவேண்டிய குணமாயிருப்பது போலவும் பாவித்து அதை அபிவிருத்தி செய்துவரவேண்டும்; ஒவ்வொருவனும் உலகத்தில் உயிரோடிருக்கும் வரையிலே அல்லாசுபகானுகுத்த [illegible]வின் தியானத்தில் (திக்ரில்) முழுவதும் ஈடுபட்டிருப்பதென்னும் இக்குணத்தை மேலே சொன்னபடி அடைந்திருப்பானாகில், அநித்தியமான தேகத்தைவிட்டுத் தன்னிடத்து ஐக்கியமாகும்படி அல்லாகுத்தஆலா [illegible] திருணமாகிய மரணகாலத்திலே, தன்னைப் போர்க்களத்தில் வென்றுகொண்ட சத்துருவினிடம்போக நிகிழ்ந்ததும் மனங்கலங்கி நிற்பதுபோலமயங்காமல் ஒரு நாள்முழுதும் செய்யவேண்டிய வேலையைச்செய்து முடித்தகுழந்தை [illegible] குழந்தாய்! இனி உறங்கு" என்று பரிவுடன் இன்மொழிகூறும்மாதாவைப்போல் அல்லாகுத்தஆலாவினிடம் நம்பிக்கையோடு பாவிக்க நேரிடும்.

முஸ்லிம்களின் அகிதாவானது எல்லாம் அல்லாகுத்தஆலாவின் திருவருள்செயலேயன்றி வேறில்லை; (தவக்கல இலல்லலாஹி) என்பதே. மேற்கண்டபடி முஸ்லிம்களி

ன் அகீதாவின் லட்சண மிப்படிப்பட்ட தென்பதை மேலே டாக்டர் மாட்ஸ்ஜி என்பவர் சொல்லுகிறது போலவே நாமும் கூறலாம்.

முடிவாக, இஸ்லாத்தை கபூல்செய்ய ஆயத்தமா யிருக்கிறவர்களுக்கு எச்சரிக்கைப் படுத்துகிறது போல வே, முன்னமே தங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டு கிறிஸ்துமதத்தை யொழித்து இஸ்லாத்தை கபூல்செய் திருக்கும் தைரியசாலிகளுக்கும் எச்சரிக்கைப் படுத்து கிறேன், அதென்னெனில், அவர்கள் நகைக்கப்படுவார் கள், தூஷிக்கப்படுவார்கள், அவர்களின் நோக்கங்கள் [illegible]க்கிக்கப்பட்டு மோசக்கருத்துள்ள அர்த்தஞ் செய்ய ப்படுவார்கள் என்பதே.

இவ்விதமே முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களின் காலத்திலும் நடந்துவந்தது. துன்யா முடி கிற வரையிலும் அப்படியே நடக்கும். அவர்களை ஆற் றி, தேற்றி அவர்கள் ஈமானிலேயே நிலைத்திருக்கச் செய்ய குர்ஆனெஷரீபில் அல்லாகுத்தஆலா திருவுள மாயிருக்கிறதாவது.—

"அவர்கள் இஸ்லாமானதை உமது மீது † உபகார மாய் எண்ணுவார்கள். அவர்களுக்கு நீ சொல்லும் நீங்கள் இஸ்லாமானதை என்மீது உபகாரமாய் எண்ணா தேயுங்கள், ஆனால், நீங்கள் உண்மையுள்ளவர்களாயிருந் தால், அல்லாகுத்தஆலா உங்களை ஈமானளவில் நேர் வழிகாட்டுவதை உங்கள்மீது உபகாரமாய் எண்ணு வான். அல்லாகுத்தஆலா வானத்திலும் பூமியிலும் மறைந்திருப்பதை யறிவான், நீங்கள் செய்கிறதை அவ வன் பார்க்கிறான்" *

† (யமுன்னூன) என்பதின் அருத்தம் இங்கிலீஷில் "கிருத்துப்பேசுவார்கள்" என எழுதி யிருந்தாலும் தப்ஸீர்கிதாபுகளில் அப்படியில்லை.

* சூரா-சஉ.

7397 M9
114540

அகீதயே இஸ்லாம்

என்னும்

ஷம்ஷுல் இஸ்லாம்

அட்டவணை.

...ம மொழித்தல் 73
...ம வியாபாரம் ... 12, 18, 19
...ஷித்தம் 41
... ஆலாவின் சொத்துகள் ...29, 30, 31, 32
...லையிஸ்லாம் 33
...இன் அஸல் அகீதா 29
... என்னும் வார்த்தையின் அருத்த... ... 33
...மார்க்கமான ... கத்தியினால் பரவப்பட
...வில்லையென்பது 82
...ஹீம் ... ஸலாம் 56
...மானவர்கள் ஈமான்கொண்டநபிமார்கள் 8, 60 H.
...முல் ...திவா... 80
...லையிஸ்லாம் 40
... ... 72
...கனே யென்பது ... 29, 30, 31
...டிகீக்கல் 70
... ... 47, 48
...லல் ...செய்த பிரங்கம் (முகம...
... சல்லாகூ அலைகிவசல்லம் அவர்களைப்பற்றி
...யும், ஞானேஷரீயைப்பற்றியும் ... 64. 84, 85
... ... 68
...நுலமார்க்கத்திற்கும் இஸ்லாமார்க்கத்திற்கு
...மிடையிலுள்ள வித்தியாசம் 40

குரானேஷரீபு 62, 63
குருத்துவ அதிகாரம் இஸ்லாத்தி லில்லையென்பது ... 67
கேனன்டேயிலர் என்பவரின் பிரசங்கம் (இஸ்லாம்மார்க்கத்தின் மேன்மைகளைப் பற்றி) ... [illegible]
சகோதர வாஞ்சை 71
சர்வில்லியம் மூர் என்பவரின் பிரசங்கம் (குரானேஷரீபைப்பற்றி) 65
சுருபுகள், வேதங்கள் 62
சுவர்க்கம் 78
சூதாட்டம் விலக்கல் 71
தக்தீர் 68
திரித்துவகண்டனம் 40, 41, 43
தொழுகைபரனென்பது, ... 73 74 75
நூஹுஅலைகிஸ்ஸலாம் 35, 36
பலஸ்திரிவிவாகம் 12 13, 14
பாவத்திற்குப்பிராதி (கபாரா) இல்லையென்பது ... [illegible] 81
பிஸ்மில்லா 62
புறம்பேசுதல் விலக்கல் 71
பேராசை விலக்கல் 70
மூலாயிகத்துகள் 60H 61
முகம்மதுசல்லல்லா அலைகிவசல்லம் அவர்களின் உபாத்து ... ... 60 E
முகம்மது சல்லல்லாகூஹு அலைகிவசல்லம் அவர்களின்மவுலூத்) பிறப்பு 47
——— அவர்களைத் துன்பபடுத்தல் 58
——— அவர்களின் நடவடிக்கை(அகலாக்)60E, 60F,60G,60H
——— அவர்கள் மதீனாவுக்குச்செல்லல் 60B
——— அவர்களின் [illegible] 58, 59, 79
——— அவர்களிடம் ஜிபரீல் அலைகிஸ்ஸலாம் வந்தல்...50, 51
மூஸா அலைகிஸ்ஸலாம் 39
விதிவாதமும் இஸ்லாமும் 80
வேதங்கள், சுருபுகள் 62
ஸ்திரீகளுக்கும் றூகுவுண்டென்பது 81, 82
ஜகாத், சதகாகொடுப்பது 68, 69
ஜிப்ரியில் அலைகிஸ்ஸலாம் 50, 51
ஹிஜ்ரிவருஷம் ... ... A.

பவ்ராயி தால் [illegible]வ்வலியீன்.

மூமின் முஸ்லிமான அனேகோர்களும் தொழுகை முதலிய மாரக்கவிஷயங்களில், கலிமா, துஆக்கள் ஆகியவைகளை அரபுபாஷையில் ஓதவேணுமென்பது முக்கியம்; ஆகையால் அரபுபாஷைகற்றுக்கொள்ளாதவர்கள் இந்த கலிமாக்களையும் துஆக்களையும் ஒருவர்சொல்ல செவியாறலாக தாங்கள் கே[illegible]து அல்லது தமிழில் எழுதியாவது வரப்படுத்துவது வழமை. செவியாறலாய்க்கேட்டு வாய்ப்பாடஞ்செய்வதில் அனேகவித சங்கட்டங்களுண்டு; ஆனால்தமிழிலெழுதி பாடஞ் செய்வதில் அவ்விதசங்கடமில்லையென்றாலும் அரபுபாஷையில் வழங்கும் எழுத்துகளுள் அனேகத்தின் உச்சரிப்புக்குச் சரியான தமிழெழுத்துகளும் தமிழில் வழங்கும்ஸமஸ்கிருத எழுத்துகளுமில்லாதபடியால் சரியாய் உச்சரிக்கக்கூடாது முன் சொல்லப்பட்டதிலும் மேலான கஷ்டமுண்டாகிறது. ஆகையால் அவ்வித எழுத்துகளுக்குப் பதிலாக அதற்கினமான தமிழ் எழுத்துகளின் கீழ் அறிகுறியாய் சில அடையாளங்க ளிடப்பட்டு, அவை நன்றாய் விளங்கும்படி சில உதாரணபாடங்களும் எழுதப்பட்டிருக்கின்றன. தமிழ் வாசிக்கத் தெரிந்தவர்கள் இப்பாடங்களை அரபு எழுத்துத் தெரிந்தவர்களிடம் இரண்டொரு நாள் கவனமாய்க்கேட்டுத் தெரிந்துகொண்டால் [illegible]திய கிதாபின் உதவியாய் தொழுகைக்கு முக்கியம் வேண்டிய கலிமா முதலியாவைகளை யெல்லாம் ஒருவருடைய சகாயமின்றி தாங்களே மிகவும் சுலபமாய் பிழையற அக்ஷரசுத்தியாய் வாசித்துக்கொள்வதுமின்றி தமிழ் எழுத்தின் சகாயமாய் வெகு சுலபமாய் அரபு பாஷையையும் வாசிக்கக் கற்றுக்கொள்ளக்கூடும்; இக்கிதாபை வரவழைத்து மேற்கண்ட விதமாய் ஓதிப்பார்க்கத் தெரியவரும்.

காபி க-க்கு அணா-க. தபால்செலவு அணா-க. வி. பி. [illegible]ம் அணா-ங.

அ[illegible]ப சரித்திரம்.

இது மிஸ்ருதேசத்து [illegible] ராஜகுமாரியின் [illegible]மையான சரித்திரம் இது மிக அலங்காரமான வசனநடையி[illegible]பட்டிருக்கிறது. இதின் வசனத்தின் மோசமை, [illegible] முதலியவைகளினால் இன்னது [illegible]கின்றதென்பதையும் [illegible]ப்பிரபஞ்சகாரத்திலும் விட முயற்சியினாலும் இன்னதென்று [illegible]தன்றும் நன்றாய் விளங்கி வாசிக்க வாசிக்க அதிக ஆச்சரியத்தையும் இன்பத்தையும் தரும்.

(லினன்) காபி க-க்கு அணா-[illegible] (ஈப்) காப்பி க-க்கு அணா [illegible].
போஸ்ட்சார்ஜ் அணா-க. வி. பி. சார்ஜ் அணா-உ.